www.padippakam.com

Registered as a News Paper in Sri Lanka

பக்கம் 20

ரூபா 10/00

දිනමුරසු වාරමලර්

டிச.18-24,1994

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL ... முரசு 81

ஜனவரிக்கு முன்

## சந்திரிக்கா-பிரபா இரகசிய ஒப்பந்தம்!

எதிர்க்கட்சி சொல்வது உண்மையா?



அரசியல் அலசல்

அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை இதுவரை வெளிவராத தகவல்களோடு அரசியல் தொடர்!

எக்ஸ்ரே ரிப்போர்ட்



ஜில் ஜில் சினி விசிட்



இலக்கிய நயம்

ரு சுகர தகவல்

## வித்தியாசமான விமானக் கல்யாணம்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# முரசம்

அன்புள்ள உங்களுக்கு,
வணக்கம்
ஏற்கனவே போரின் கரங்கள்
அன்றாட வாழ்க்கையை-
அவல வாழ்க்கையாக்கியுள்ளன.

சிதைந்து கிடக்கும்
வாழ்க்கையை சீராக்குவது எப்போது
என்று சோகத்தோடும்-விரக்தியோடும்
அரசியல் அரங்க நிகழ்வுகளை
எம் மக்கள் கவனித்துக் கொண்டிருக்கிறார்கள்.

இந்த நேரத்திலே
இயற்கையும் தன் பங்குக்கு
சீற்றத்தைக் காட்டி வெள்ளத்தைப் பெருக்கியுள்ளது!

கிழக்கு மாகாணத்தில்
பல்லாயிரம் மக்கள் பரிதவித்திடவும்
பல்லாயிரம் ஏக்கர் வயல்கள் நாசமாகவும்
வெள்ளப்பெருக்கு விபரீதக் காரணமாகிவிட்டது.

உலர் உணவுப் பொருட்கள்
உடனடியாக வழங்கப்பட்டபோதும்
உரிய தேவையை பூர்த்திசெய்யக்கூடிய
உகந்த அளவில் வழங்கப்படவில்லை
என்ற குறை சுட்டிக்காட்டப்படுகிறது.

தேர்தல் எதுவும் அருகில் வரும்
அறிகுறிகள் இல்லையென்பதால்
அரசியல்வாதிகள் சிலரும் சற்று
அலட்சியமாக இருக்கக்கூடும்!
படகு விபத்திலே
பலியானவர்களின் குடும்பங்களுக்கும்
உரிய நிவாரணம் உடன் சேரவில்லை
என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

சம்பந்தப்பட்ட அமைச்சுக்கள்
பாதிக்கப்பட்ட மக்களின் துயர் துடைத்திட
துரித கதியில் சேவையாற்றவேண்டும்
என்பதை நாம் நினைவூட்டாமலேயே
நிறைவாக செய்து முடிப்பதே
வரவேற்கத்தக்கதாக இருக்கும்!

□□

பாப்பரசர் வருகையோடு
போர் நிறுத்தமும் வரவேண்டும் என்று
ஏற்கனவே முரசு கோரியிருந்தது.

அரசும் அவ்வாறான எண்ணத்தில்
முயற்சி எடுத்திருப்பது மகிழ்ச்சி தருகிறது.

தமிழ் கட்சிகளும்
போர் நிறுத்தத்தை வலியுறுத்தியுள்ளன.

இரு தரப்புக்கும் இடையில்
எந்த கௌரவப் பிரச்சனையும்
எழாமல் போர் நிறுத்தம் செய்ய
பாப்பரசரின் வருகை
சிறந்த சந்தர்ப்பமாகியிருக்கிறது!

யாழ் குடாநாட்டில்
விடுதலைப் புலிகளின் விருப்பின்றேல்
அங்குள்ள மக்கள்
பாப்பரசரை தரிசிக்க வரமுடியாது!

பாப்பரசரின் வருகைக்கு
ஒத்துழைப்போம் என்று புலிகள்
யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

போக்குவரத்துப் பாதை விடயத்தில்
அரச தரப்பு-
ஆனையிறவுப் பாதையை திறக்கச் சம்மதித்திருக்கிறது.

திறக்கப்படும் பாதை வழியாக
போக்குவரத்து நடத்தப்பட வேண்டுமானால்
புலிகளது ஒத்துழைப்பு அவசியம்!

பூநகரிப்பாதைத் திறப்பும்-
இராணுவ முகாம் விலக்கப்படுதலும்
புலிகளது நிபந்தனையாக நீடிக்கிறது.

பாப்பரசரை தரிசிக்க வரும்
யாழ் குடாநாட்டு மக்கள்
புலிகளின் 'பாஸ்' முறை காரணமாக
கட்டுப்பாட்டு விதிகளை சந்திக்க நேரலாம்.

ஏற்கனவே போரின் விளைவுகளால்
யாழ்ப்பாணத்தில் உள்ள கத்தோலிக்க மதத்தினர்
கடுமையாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

மீன்பிடித் தொழிலில் ஈடுபட்டுள்ள
பெரும்பாலானவர்கள் கிறிஸ்தவ மதத்தினரே.
கடல்வலயத் தடை அவர்களை
நடுத்தெருவுக்கு இழுத்துப் போட்டிருக்கிறது!

கிறிஸ்தவ தேவாலயங்களும்
குண்டுவீச்சுக்களால் சேதமாகியுள்ளன.
சோகமே உருவாக நிற்கிறார்கள்
யாழ்ப்பாணத்தின் கரையோர பிரதேசங்களில்
வாழ்ந்துவரும் கிறிஸ்தவ மத மக்கள்!

பாப்பரசரை தரிசிக்கும்
அவர்களது விருப்பம் நிறைவேற
ஒத்துழைக்க வேண்டிய பொறுப்பு
அரசுக்கும் உண்டு- புலிகளுக்குமுண்டு!
அதனை நிறைவேற்ற வேண்டும்
என்று எதிர்பார்க்கிறோம்.

□□

இம்மாதம் ஒன்பதாம் திகதி
கொழும்பில் சமாதான விழா ஒன்று
நடத்தப்பட்டிருக்கிறது.

இனப்பிரச்சனைக்கு தீர்வு காணும்
யோசனைகள் என்னவென்பதை தாமதிக்காமல்
அரசும்-புலிகளும் அறிவிக்க வேண்டும்
என்று அங்கே வலியுறுத்தப்பட்டுள்ளது.

வரவேற்கப்படவேண்டிய வலியுறுத்தல்.
ஒரு தரப்பில் மறு தரப்பு பொறுப்பை சுமத்தி
தப்பிக்கொள்வதைத் தடுக்க
நாடெங்கும் இருந்து இவ்வாறான
வலியுறுத்தல்கள் எழுவது முக்கியம்!

□□

என்றென்றும் அன்புடன்
—ஆசிரியர்—

## வாலிப வயதில் இறைபக்தி


"வாலிபனே! உன் இளமையிலே சந்தோஷப்படு, உன் வாலிப நாட்களிலே உன் இருதயம் உன்னைப் பூரிப்பாக்கட்டும்; உன் நெஞ்சின் வழிகளிலும், உன் கண்ணின் காட்சிகளிலும் நட; ஆனாலும் இவையெல்லாவற்றினிமித்தமும் கடவுள் உன்னை நியாயத்தில் கொண்டு வந்து நிறுத்துவாரென்று அறி. (பிரசங்கி 11:9)

இன்றைய கால கட்டத்தில் எத்தனை பேர் வாலிபப் பராயத்தில் இவ்வாறு வாழ்க்கை நடத்துகின்றனர்? எப்படியோ பிறந்துவிட்டோம் எப்படியும் வாழ்ந்தால் சரி என்றா? அல்லது பிறந்து விட்டோமே, அதற்காக இப்படித்தான் வாழ வேண்டும் என்று ஒரு வரையறைக்குள் வாழ்கின்றோமா? இன்று எத்தனையோ வாலிபர்கள் தங்களின் பெற்றாரை, உறவினர்களை, ஏனையோரை விட்டு விலகி தங்கள் மனம் போன போக்கிலே போகின்றார்கள். எங்கு நோக்கினாலும் வாலிப வயதின் உல்லாசங்களே. வீதியில், கடற்கரையில், பூங்காவில், காட்டில், முகாம்களில், சினிமாத் தியேட்டர்களில் எங்குமே தங்களது இலட்சியப் பாதையை விட்டு விலகி தங்களுக்கென்றே தெரிகின்ற மாய உலகின் பாதையிலே சென்றுகொண்டு இருக்கின்றனர். இன்று வாலிபர்கள் எங்கெல்லாம் இருக்கின்றார்கள்?

(பிரசங்கி 12:1)ல் கூறியுள்ளபடி "வாலிபப் பிராயத்திலே உன் சிருஷ்டிகரை நினை" இன்று எம் கண் முன்னே காணப்படும் எத்தனையோ தகாத வழிமுறைகளில் எண்ணிலடங்கா வாலிபர்கள் தங்கள் மனம் போன போக்கிலே தள்ளாடுகின்றனர். இவர்களையும் திருத்தி வாழப் பழகுவோம். நாமும் செயற்படுவோம். தூய்மை, பொறுமை, விடா முயற்சி ஆகிய மூன்றுமே வெற்றிக்கு இன்றியமையாதது. அத்துடன் இவை அனைத்துக்கும் மேலாக அன்புடன் செயற்பட்டு எமது சமூகத்தை நல்வழியில் நடத்துவோமாக!

பே. ஆன். மிரிஜா-மட்டக்களப்பு.

## ஆன்மீகம்



## மன்னிக்கும் மனப்பான்மையின் சிறப்பு

தீமைக்குத் தீங்கு இழைத்தவரைத் தண்டிக்கும் திறனிருந்தும் அவரைத் தண்டிக்காது விட்டுவிடுவது மன்னிப்பாகும். இம்மன்னித்தல் எனும் பண்பு எல்லாப் பண்புகளுள்ளும் மிகவும் ஏற்றமானது.

இறைவன் தன் திருமறையில் கூறுகிறான்: 'மன்னித்தல் எனும் பண்பை அணிந்து கொள்ளுங்கள். உங்களுக்கு இழைக்கப்படும் தீங்கைக் கண்டும் காணாததுபோல் இருக்கும் பண்பைக் கொள்வீர்களாக" என்று.

எனவேதான் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்காவை வென்று, அதனுள் வெற்றி வீரராய் நுழையும்போது, தமக்கு எல்லையில்லாத் தொல்லைகள் தந்த குறைஷிக்குலத் தலைவர்களை எல்லாம் மன்னித்துவிட்டார்கள். 'உங்களை மன்னித்து விடுதலை செய்துவிட்டேன், உங்களை குறைகூறிப் பயனில்லை' என்று கூறி அவர்களின் மனத்தை மன்னிப்பால் மகிழச் செய்தார்கள்.

"பணிந்து செல்வதால் மனிதனின் சிறப்பு உயர்கிறது. எனவே நீங்கள் பணிந்து செல்லுங்கள். உங்கள் சிறப்பை இறைவன் உயர்த்துவான். மன்னிப்பால் மனிதனின் பெருமை பெருகிறது. எனவே பிறரை மன்னியுங்கள். உங்கள் பெருமையை இறைவன் பெருகச் செய்வான்." என மன்னித்தலின் சிறப்பை நபி (ஸல்) அவர்கள் அருளியுள்ளார்கள்.

மன்னித்தல் ஓர் உயரிய பண்பாகும். மன்னிக்கும் உயர்பண்பை உடைய ஒருவன் நல்ல திருஷ்டத்தான் எஜமானவன். மன்னிப்பெனும் ஒளியால் உள்ளம் சுடர் பெறுகிறது. அதன் இளங்காற்றால் இதயம் இன்மலர்ச் சோலையாகிறது. இறைவன் மன்னிக்கும் உயர்பண்பை உவக்கிறான். எனவே இறைவன் விரும்புவதை நாமும் விரும்பவேண்டும். ஒருவன் பிறர் தமக்குச் செய்த பிழையை மன்னித்தால் இறைவன் அவன் புரிந்த குற்றத்தை மன்னிப்பான்.

எனவே இறைவன் நம் எல்லோருக்கும் மன்னிக்கும் மனப்பான்மையை தந்தருள்வானாக.

இர்பானா நியால்-மக்கொன.

## கவிதைப்போட்டி இல-78

### வந்து குவிந்தவற்றில் வாகை சூடியதும் வியக்கப்பட்டவற்றில் இடம் பிடித்தவையும்

### பரிசுக்குரிய கவிதை

**மனம் குமுறல் எம் கதியோ?**

ஒட்டி உறவாடும் உறவுகளை
தட்டி முதற் பறித்த தடயமது மாறுமுன்னே
மிஞ்சித் தனித்திருந்த பிஞ்சதனை
(வெ)வஞ்சம் கொண்டவர்கள்
வீழ்த்தினரோ மண்மீது!
அஞ்சி வாய் பொத்தி-
மனம் குமுறல் எம் கதியோ?

நிஜந்திக்கா கனகசிங்கம்-மட்டக்களப்பு.

**உதிர்வு**

போர்ப் பாம்பின்
உயிர்க் குடிப்பில்,
உதிர்ந்துபோன
பூவொன்று.

ச. தஜானி
ஆரையம்பதி-03.

**வெள்ளம்**

கிழக்கு வெள்ளம்
கிறுக்குச் செய்ததா...
இந்த சின்னப் பூவை
கிள்ளிப் போட்டதா..?

விஜித்தா செல்வநாயகம்
மண்டூர்.

### வியக்கப்பட்டவை

**யாருமில்லை**

வானில் வட்டமிட்ட வானூர்தி
சுட்டதினால் பட்டமரம்!
எட்ட நிற்போரில் எவருமில்லை
உறவு சொல்லிக் கட்டியழ!

தங்கத்துரை ஜெயாஞ்சலி
தம்பிலுவில்-02.

சந்திரிக்கா வந்தவுடன்
சமாதானம் தோன்றுமெனச்
சந்தோசம் கொண்ட மகன்
ஒரு தலைப் போரினால்
உறங்குகின்றான் ஓயாது

சீ. தங்கவடிவேல்-மட்டக்களப்பு.



**வேண்டுமா விஷேசம்**

விடியல் கேட்ட வேட்கையா
விலாசம் காணாத நிருபமானது
உறவுகளான சொந்தங்களோ
உரிமை கோர மறுக்கிறது
நியாயம் தேடும் நெஞ்சங்களே
நிறுத்துங்கள் இனியும் வன்முறையை.

தெ. லோஜனா-கொழும்பு-15.

**ஹாஃப் ரிக்கட்**

கல்லறைகள்
'ஹவுஸ் ஃபுள்' ஆகிவிட்டதா?
ஒரு
'ஹாஃப் ரிக்கட் ப்ளீஸ்'

எம். எஸ். புகாரி-சாய்ந்தமருது-04.

**காலத்தின் கோலம்**

அரவ அரவணைப்பில் அடங்கிவிட்ட பாலகனை
பரவும் பரபரப்பால் பார்வையிட வந்தவர்கள்
'எலிக்கு மரணம் பூனைக்கு விளையாட்டு'
இதுவே காலத்தின் கோலமா?

வாழையூர் வைரமுத்து.

**உரம்**

பூமிக்குச்
சேரப்போகும்
அடுத்த
புதிய மனித உரம்.

இ. அல். தாரிக்
மருதமுனை.

**வித்தையா காட்டுகிறார்கள்?**

விடுப்புப் பார்க்கிறீர்களே!
வித்தையா காட்டுகிறார்கள்?
கொடுப்பதற்கு யாருமின்றி
கொடும்பசியால்
உயிரைவிட்ட
இளங்குருத்தையா
இவன்!

செ. குணரத்தினம்
மட்டக்களப்பு.

**யுத்தம்**

யுத்தத்தால்
அகதியானான்
பட்டினியால்
மரணமானான்.

எம். துரையன்
அக்கரைப்பற்று-8.

**விதை**

போர்க்கள வயலில்
போர் அரக்கன்
விதைத்த விதை

இரா. இராமகிருஷ்ணன்
பொகவந்தலாவ.

**யுத்தமும் பட்டினியும்**

யுத்தத்திற்கும்
பட்டினிக்குமிடையில்
நடக்கும்
போட்டியில்
உயிரைவிட்டவன்

ஐ. எஸ். சமீன்-கெகிறாவ.

**அவலம்**

நேசமுடன்
உனை நெருங்க
மானிடன் யாருமில்லை
தேசத்திலே.

மின்னத்துல் ஹைரியா.
அனுராதபுரம்.

பலி கொள்ளும் போரை
வழியனுப்பக் கதியில்லை
விதி என்பர்
வீதியில் செல்வோர்
சதி என்பர்
சந்தர்ப்பவாதிகள்
அவர்களே நம்
அரசியல்வாதிகள்!

மாஸ்டர். எஸ். நோபிராகவன்
அக்கரைப்பற்று-07.

**மனிதம்!**

வறுமையால் வந்த
விபரீதமல்ல-இது
போர்த் தீயால் வெந்து மடியும்
மனிதம்!

ந. ரதீஸ்வரன்-தம்பிலுவில்-02.

**மீளாத் துயில்**

ஆட்டம் முடிந்தது
கூட்டம் கூடியது
கொட்டும் மேளம் இனி!

வி. சுவர்ணா-ஆரையம்பதி-1.

## கவிதைப் போட்டி இல-81



சிந்தனைகள் சூழலைப் பிரதிபலிக்கட்டும். சொல்லும் கருத்தில் தெளிவும் சுருக்கமும் இருக்கட்டும். எண்ணத்தில் உருவாகும் கவி வரிகளுக்கு தபாலட்டையில் வடிவம் கொடுத்து அனுப்பி வையுங்கள். சிறந்த கவிதை ஒன்றுக்கு பரிசு ரூபா நூறு. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.12.1994.

—முகவரி—
கவிதைப் போட்டி இல: 81
தினமுரசு வாரமலர்
த. பெ. இல-1772,
கொழும்பு.

## வாசகர் சாலை

அதிசய தகவல்கள், சிந்தை இனித்திடும் கவிதைகள் என வழங்கி எங்கள் மனங்களில் நீ தனி இடம் பிடித்துவிட்டாய்.

செய்தி இருட்டடிப்புக்கு குறைவில்லா இக்காலச் சூழலில் உண்மையை உண்மையென உலகுக்கு உணர்த்தும் உன் பணி பாராட்டுக்குரியதே! மொத்தத்தில் நீ சுமந்துவரும் ஆக்கங்கள் அனைத்தும் அருமை!

என்றும் உன் வாசகர்கள்...
சுரேஷ்குமார், தேவா, லிங்கமூர்த்தி, தமிழ்வண்ணன், சிவராஜ், துரைராஜ், சந்திரன்-இரத்தினபுரி.

மீண்டும் நீ புகழ் பெற்று வாழ எனது நல் வாழ்த்துக்கள்.

துரையப்பா விஜயானந்தன்
காரைதீவு-01.

□□

முத்தான முரசிற்கு!
சென்ற முரசில் சிந்தனைக்கு விருந்தாக சிறந்த படைப்பொன்றை 'தாய்' என்ற தலைப்பில் வாசகர் எமக்கு வழங்கியிருந்தாய். 'மக்சீம் கார்க்கி'யின் மகத்தான கற்பனை வடிவம் என்னை மிகவும் கவர்ந்துவிட்டது, முதல் அத்தியாயத்தின் கதையம்சம். அடுத்த அத்தியாயத்தை ஆவலோடு எதிர்பார்க்கும் வண்ணம் இருந்ததால் பத்திரிகைக் கடையில் உன் பிரதிக்காக பதிவு செய்துவிட்டேன். தெவிட்டாத உன் சேவை தொடர்ந்து வளர வாழ்த்தும் வாசகன்

ஏ. எச். ராஸீன் மொகமட்
ஏத்தாளை.

□□

நேரு விரும்பிய 'தாய்'
கமலா நேரு தனது மரணப் படுக்கையில் இருக்கையில் நேருஜி அவர்கள் கமலாவிடம் உனது இறுதி ஆசை என்னவென்று கேட்டாராம், அதற்கு கமலா நேரு "மக்சீம் கார்க்கி"யின் தாய் நாவலை படித்துக் காட்டுமாறு வேண்டினாராம். அந்த அற்புத நாவலை எங்களையும் படிக்குமாறு உதவிய தினமுரசு வாரமலருக்கு எவ்வளவு நன்றிகள் கூறினாலும் தகும்.

கல்யாணி பெரியண்ணன்
தலவாக்கொல்லை.

'வாழ்த்துகிறேன் தினமுரசே'
செந்தமிழில் சுவை கலந்து திக்கெட்டும் புகழ் பரப்பும் தினமுரசே, வியாழனது விடியலிலே உன் வரவை எதிர்பார்த்து, விடிந்ததும் ஓடோடிச் சென்று என் கரத்தில் உனை அள்ளி பக்கங்கள் பிரித்து பரபரப்பாய் நான் பார்ப்பேன். எனதருமைத் தலைமகனும் எனை மிஞ்சும் பாங்கினிலே மகாபாரதம் தன்னை மனமாரப் படித்திடுவான். பார்ப்பதோடல்லாமல் பலகேள்வி எனைக் கேட்பான். பாப்பா முரசை பலதடவை படித்திடுவான். இத்தனைக்கும் உன் திறனை எப்படி நான் புகழ்ந்திடுவேன். என்னருமைத் தினமுரசே என் கோடி வணக்கங்கள்.

செ. கமலநாதன்
மட்/திருப்பெருந்துறை.

□□

பிரிய முரசிற்கு,
வாரம் தவறாது உன்னைச் சந்தித்தாலும் மிக நீண்ட நாட்களின் பின் வாசகர் சாலையில், உன்னைச் சந்திப்பதில் பெரு மகிழ்ச்சி. குறுகிய காலத்தில் நீ அடைந்த வளர்ச்சி என்னை பிரமிக்க வைக்கின்றது. தரமான நிகழ்வை வாழ்த்துவதும், வாழ்த்தப்படுவதும் சந்தோஷ நிகழ்வல்லவா? இது உன் பாணி, தொடரட்டும் உன்பணி!

ஸ்ரீவரணி-வாழையூர்.

□□

மகிழ வைக்கும் தினமுரசே! உனக்குள் முடங்கிக் கிடக்கின்ற- நீ தாங்கி வந்து தருகின்ற சிறு கதைகளும், கவிதைகளும் சூப்பர். இருண்ட வீட்டுக்குள் நீ ஒரு விளக்கு. இருளடைந்த வாழ்வுக்கு ஒரு வழிகாட்டி. இனிமை, இளமை, புதுமை, அள்ளி வழங்கி எங்கள் மனதை திண்டாட வைக்கும் உனக்கு எங்கள் இதயம் கனிந்த நல் வாழ்த்துக்கள் பற்பல.

ராமநாதன், ராஜினி, சுரேஸ்
தெய்கலை.

□□

இதயம் கவரும் தினமுரசே, சிறப்பான சிறுகதைகள்,

முத்தான உன் சேவை என்றும் எமக்காக தொடர வேண்டும் என வாழ்த்துகிறேன்.

லத்தீபா உதுமாலெவ்வை
சாய்ந்தமருது-05.

□□

என் இனிய முரசிற்கு
முக்கனி முரசே,
நீ சுமந்துவரும் அனைத்தும் இனிதிலும் இனிது.
ரசிகனின் கொலை விழும் நேரமும், இலக்கிய நயமும் முரசிற்கு மேலும் மெருகூட்டுகின்றன.
உன் வரவை என்றென்றும் கரம்நீட்டி வரவேற்கும் பல நெஞ்சங்களில் சில.

எஸ். ஏ. எம். சிபாஸ், ரிபாஸா, அனாஸ், ரிஸ்னா-
வரக்காமுரை.

□□

எம் அன்பின் முரசிற்கு;
உன்னை கையிலெடுத்ததும் எந்த பக்கத்தைப் பார்ப்பது என்று எங்களை திண்டாட வைத்து விடுகின்றாய்! தகவல் பெட்டி தரும் அம்சங்கள் பெரும் வியப்பாகவும் விசித்திரமாகவும் இருக்கின்றன.




எனது அன்பின் முரசே,
வாரா வாரம் எனது உள்ளத்தினை மகிழவைக்கின்ற சினிவிசிட், சிறுகதை போன்றவற்றை சுவையாக தரும் தமிழின் குரலே மீண்டும்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# "ஆயுதக் கொள்வனவுக்கு ஜனாதிபதி அனுமதி!"

# "தமிழர்கள் இனியும் நம்பி ஏமாறமாட்டார்கள்"

# சமகால நிலை குறித்து புலிகள் அறிக்கை

- சந்திரிக்கா தன்னை ஒரு சமாதானப் புறாவாக காட்டியதால்தான் சிங்கள மக்கள் அவருக்கு வாக்களித்தனர்.
- விடுதலைப் புலிகளின் தாக்குதலினால் சிங்களப் படைகள் சந்தித்த இழப்புக்களே சிங்கள சமூகத்தின் மனமாற்றத்திற்கான காரணமாகும்.
- சிறிலங்காவின் முப்படைத் தளபதியாகவுள்ள சந்திரிக்கா புதிய ஆயுதக் கொள்வனவுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.
- தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்கள் இனிமேல் நம்பி ஏமாறமாட்டார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பினர் யாழ் குடாநாட்டில் புதிய அரசாங்கம் தொடர்பான நம்பிக்கையீனங்களை பரவலாக வெளியிட்டு வருகின்றனர்.

'சமாதானத்திற்கு ஆதரவான சிங்கள மக்களது மனமாற்றம் சந்திரிக்காவின் சாதனையல்ல' என்றும், தமது போரின் வெற்றிகளது விளைவே அதுவாகும் என்றும் புலிகள் கூறுகின்றனர்.

'புலிகளின் குரல்' வானொலியில் தற்போதைய அரசியல் சூழ்நிலை பற்றிய ஒரு அறிக்கை வெளியிடப்பட்டது. 6.12.94 அன்று வெளியிடப்பட்ட அந்த அறிக்கையில் பின்வருமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது:

## புலிகளின் மன உறுதி

சந்திரிகாவுக்கு வழங்கப்படும் வாக்குகள் புலிகளுக்கு வழங்கப்படும் வாக்குகள் என சிங்கள பேரினவாதிகள் கூறி வந்த போதிலும் சிங்கள மக்கள் சந்திரிகாவின் சமாதான முயற்சிகளுக்கு ஆதரவளித்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் விடுதலை வேட்கையும், தியாகமும், மனஉறுதியும் சிறிலங்கா படைகளை முன்னேற்றம் காண அனுமதிக்கவில்லை. சிறிலங்கா படைகளின் இழப்புகள், சிங்களக் குடும்பங்களில் பிரதிபலித்தன. தமிழர்களுக்கு நியாயமான உரிமைகளை வழங்க வேண்டுமென சிங்கள சமூகம் உணர்கின்றதா, இல்லையா என்பது தமிழீழ மக்களின் பலத்திலும், சிங்கள படைகள் சந்திக்கும் தோல்வியிலும் தங்கியிருக்கிறது. தமிழர்களுக்கு ஏற்பட்ட இழப்புக்கள், அனர்த்தங்களால் போரின் கொடுமைகளை சிங்களவர்கள் உணர்ந்தாரில்லை.

நீண்ட காலப் போரினால் சிங்கள மக்கள் சலித்துப் போனார்கள். தமிழருக்கு உரிமைகளை வழங்கியேனும் தாம் தப்ப வேண்டும் என சரியாக சிந்திக்கும் சிங்கள மகன் உணர்வான்.

போரினால் சிங்கள மக்கள் சலிப்படைந்திருப்பதுபோல, சிங்கள அரசியல்வாதிகள் இன்னும் சலித்துவிடவில்லை. தாம் போருக்கு சளைத்தவர்கள் அல்ல என்று போர் என்றால் போர் என்று அறைகூவிய ஜே.ஆர்.ஜயவர்த்தனா, தொடக்கம், தமிழர்கள் மண்ணைத்தான் தின்ன வேண்டுமென்று கூறிய டி.பி.விஜேதுங்கா வரைக்கும் போருக்கு அறை கூவினார்கள்.

இவ்விருவருக்குமிடையில் **மரண தேவதையிடம் மண்டியிட்ட** ரஞ்சன் விஜயரட்ண, லலித் அத்துலத் முதலி, ரணசிங்க பிரேமதாசா, காமினி திசாநாயக்கா, இவர்களும் போரினால் சலிப்போ, களைப்போ அடையாதவர்களாகவே இருந்தார்கள்.

## சமாதானப் புறாவாக......

17 வருடங்கள் ஆட்சி நடத்திய ஐ.தே.க. கூட போரினால் இன்னும் களைக்கவில்லை. ஆனால் பாவம் சிங்கள மக்கள். களைத்தும் சலித்தும் போய்விட்டார்கள். அதனால்தான் மாற்றம் காண வேண்டும் எனும் நோக்கில், தன்னை சமாதானப் புறாவாக தோற்றம் காட்டிய சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்காவை ஜனாதிபதியாக சிங்களவர் தெரிவு செய்தனர். சிறிலங்காவில் முப்படைத் தளபதியாகவும், பாதுகாப்பு அமைச்சராகவும் செயற்படும் சந்திரிகா புதிய ஆயுத கொள்வனவுகளுக்கு அனுமதி வழங்கியுள்ளார்.

இந்நிலையில் பிரகடனப்படுத்தப்படவுள்ள யுத்த நிறுத்தங்களை சிறிலங்கா இராணுவம் கடைப்பிடிக்குமா? அத்துடன் 1ம் கட்ட பேச்சுவார்த்தையில் தமிழ் மக்களின் அன்றாட பிரச்சனைகளையிட்டு, விடுதலைப் புலிகள் தீர்வுகாண முன்வைத்த போதும், இதுவரை ஆக்கபூர்வமான பதிலெதுவும் வந்து சேரவில்லை. அன்றாட பிரச்சனைகளையே சிறிலங்கா அரசாங்கம் இவ்வாறு இழுத்தடித்தால், எவ்வாறு, சிக்கலான அடிப்படை பிரச்சனைக்கு- இனப் பிரச்சனைக்கு தீர்வை முன் வைக்கப் போகிறது?

தமிழ் மக்களை பொறுத்தவரை அவர்கள் இனிமேலும் நம்பி ஏமாறமாட்டார்கள். மீட்கப்பட்ட பிரதேசங்களில் அவர்கள் தமது நிர்வாக கட்டமைப்புகளை, வளர்க்கத் தொடங்கியுள்ளனர். தலைவர், மாவீரர் நாள் உரையில் குறிப்பிட்டதுபோல, தமிழினம் சலுகைகளுக்காக கையேந்தும் ஒரு சிறு இனக் கூட்டம் அல்ல.

பேச்சுவார்த்தைக்காக சமாதான தூதுவர்களை ஏற்றி வந்த உழங்கு வானூர்தி (ஹெலிகொப்டர்), துப்பாக்கிகளை பொருத்தி வந்து, விடுதலைப் புலிகளின் யுத்த இடை நிறுத்த வேளையில், சாவகச்சேரியில் அப்பாவி மக்கள் மீது தாக்குதல் நடத்தியது. தமிழ் மக்களுக்கு சமாதானம் ஏற்படுமா என்ற சந்தேகத்தை உருவாக்கியது. அவ்வாறுதான் தமிழ் மக்களுக்கு சமாதானத்தை வழங்கப் போவதாக கூறும் தென்னிலங்கை அரசியல்வாதிகள், குண்டுகளை அள்ளி வீசும் உத்தரவுகளை சிறிலங்கா இராணுவத்துக்கு வழங்கிய வரலாறுகளையும், தமிழ் மக்கள் மறக்கமாட்டார்கள்.

7000க்கும் அதிகமான போராளிகளையும், 35,000க்கு மேற்பட்ட பொது மக்களையும், கோடிக்கணக்கான ரூபா பெறுமதியான சொத்துக்களையும், போராட்ட வரலாற்றுக்கு அர்ப்பணித்திருக்கிறோம்.

போராட்டம், தனி நிர்வாக அமைப்புகளை உருவாக்கும்வரையும் முன்னேறிய பின்பும், தமிழர் விடுதலைப் புலிகள், சிறி லங்கா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு பேச்சுவார்த்தை தொடர்பாக தமது நல்லெண்ணத்தை இன்னமும் காட்டிக் கொண்டு இருக்கிறார்கள். ஆனால் சிறி லங்கா அரசாங்கம் தனது இராணுவத்திலுள்ள சமாதானத்தை குழப்புவோர்மீது இன்னமும் சரியான முடிவுகளை மேற்கொள்ளவில்லை.

## எதிர்பார்ப்புகள்

அத்துடன் தமிழ் மக்களின் முக்கிய எதிர்பார்ப்புகளாகவுள்ள பொருளாதார பிரச்சனைகளுக்கான தீர்வுகளைக்கூட இன்னமும் முன்வைக்கவில்லை. இந்நிலையில் விடுதலைப் புலிகளுக்கும், சிறிலங்கா அரசாங்கத்துக்கும் இடையிலான 2ம் கட்ட பேச்சுக்கள் கிறிஸ்மஸ்க்கு முன்பாக ஆரம்பிக்கப்படும் என்ற அறிவிப்பு கொழும்பில் வெளியாகியுள்ளது.

# யாழிலிருந்து 5 ஆயிரம் பேர் வருவர்!

# கிளாலி வழியாகவே பயணம் நடக்கும்!

(நமது நிருபர்)

எதிர்வரும் ஜனவரி மாதத்தில் கொழும்புக்கு வரும் பாப்பரசரை தரிசிக்க யாழ் குடாநாட்டிலுள்ள பல ஆயிரம் மக்கள் விருப்பம் தெரிவித்துள்ளனர்.

யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க மதத் தலைவர்கள் பாப்பரசர் வருகை தொடர்பாக புலிகள் அமைப்பினரோடு பேசியுள்ளனர்.

பாப்பரசரை தரிசிக்க விரும்பும் யாழ் குடாநாட்டிலுள்ள கத்தோலிக்க மதத்தினரை கொழும்பு செல்ல அனுமதிக்க வேண்டும் என்று அவர்கள் கோரினார்கள்.

அவர்களது கோரிக்கையை ஏற்றுக் கொண்ட புலிகள் அமைப்பினர் 5 ஆயிரம் பேர்வரை கொழும்பு செல்ல அனுமதிக்கலாம் என்று கூறியுள்ளதாக யாழ்ப்பாணத்திலுள்ள கத்தோலிக்க மதவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

கொழும்பு செல்லுவோர் கண்டிப்பாக மீண்டும் திரும்பிவருவார்கள் என்ற உத்தரவாதத்தை கத்தோலிக்க மதத் தலைவர்கள் உறுதிப்படுத்தினால் மட்டுமே அவ்வாறு உறுதிப்படுத்தப்பட்டவர்களுக்கு பயண அனுமதி கிடைக்கும் என்று தெரிகிறது.

கிளாலி கடல் ஏரி வழியாகவே பாப்பரசரை தரிசிக்க விரும்புவோர் செல்ல வேண்டும். ஆனையிறவுப் பாதை வழியாக செல்ல அனுமதிக்கமுடியாது என்று புலிகள் உறுதியாகக் கூறிவிட்டதாகவும் கத்தோலிக்க மத வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

பாப்பரசர் வருகைக்கு ஒத்துழைக்க தயார் என்றும் புலிகள் யாழ்ப்பாணத்தில் தெரிவித்துள்ளனர்.

# லயனல் மீது யாழில் தாக்குதல்!

## மாகாணசபையில் இலட்சக்கணக்கில் பண மோசடி!!

(வர்மா)

வடக்கு-கிழக்கு மாகாண ஆளுநராக இருந்த லயனல் பெர்னாண்டோ தொடர்பாக இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் குற்றம் சாட்டியுள்ளது.

புலிகளது கட்டுப்பாட்டில் உள்ள இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் வெளியிட்டுள்ள கருத்து புலிகளது எண்ணத்திற்கு முரண்பட்டதாக அமையாது என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஜனாதிபதி சந்திரிக்காவுக்கு அனுப்புவதற்காக தமிழ் ஆசிரியர் சங்கம் ஒரு மகஜர் தயாரித்துள்ளது.

அந்த மகஜரில் உள்ள விடயங்கள் யாழ்ப்பாண பத்திரிகைகளிலும், புலிகளின் குரல் வானொலியிலும் முக்கியத்துவமளித்து வெளியிடப்பட்டுள்ளன.

மகஜரில் உள்ள முக்கிய விடயங்கள் பின்வருமாறு:

வடக்கு-கிழக்கில் தமிழரல்லாத ஆளுநரும், மற்றும் செயலாளரும் தமிழரின் கல்வி தொடர்பாக பாரபட்சமான முறையில் தீர்மானங்களை எடுக்கின்றனர்.

திரு.லயனல் பெர்னாண்டோ ஆளுநராக இருந்த காலத்திலேயே இப் பாரபட்சங்கள் நிகழ்ந்துள்ளன.

வடக்கு-கிழக்கில் தமிழ் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 40 வீதமான வெற்றிடம் நிலவுகிறது. இது நிரப்பப்படாத நிலையில் சிங்களம் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு லயனல் நியமனங்களை வழங்கியுள்ளார்.

வடக்கு-கிழக்கு மாகாண சபை உருவாக்கப்பட்ட காலத்திலிருந்து மாகாண கல்வி செயலாளர்கள் கட்டிட, தளபாட ஒப்பந்தங்களில் மில்லியன் கணக்கில் பண மோசடியில் ஈடுபட்டுள்ளனர்.

இவை குறித்து தகுந்த நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று இலங்கை தமிழ் ஆசிரியர் சங்கம் ஜனாதிபதியைக் கேட்டுள்ளது.

திரு.லயனல் பெர்னாண்டோ அரச தரப்பு பிரதிநிதிகளில் ஒருவராக புலிகளோடு பேசுவதற்கு யாழ் சென்றவர்.

தமிழர்கள் குறித்து ஆதரவான கண்ணோட்டம் உள்ளவர் என்று நம்பப்படுபவர்.

அவ்வாறான கருத்து தவறானது என்று வெளிப்படுத்தவே தமிழ் ஆசிரியர் சங்க மகஜருக்கு புலிகளது பிரசார சாதனங்கள் முக்கியத்துவமளித்துள்ளதாக கருதப்படுகிறது.

அரச பிரதிநிதிகள் முதற்கட்ட பேச்சுக்கு யாழ் சென்று இறங்கியபோது மக்கள் முண்டியடித்து வரவேற்றனர்.

அரச பிரதிநிதிகள் யாழ் சென்று இறங்கிய ஹெலிகொப்டர் மீதும் புலிகள் கண்டனம் தெரிவித்து வருகின்றனர்.

"ஹெலி வந்து சுட்டால் ஓடுவீர்கள். தரையில் இறங்கினால் கட்டிப் பிடித்து கொஞ்சுவீர்கள்" என்று திரு.அன்ரன் பாலசிங்கம் தெரிவித்திருந்தார்.

"அரச பிரதிநிதிகள் யாழில் வந்திறங்கிய ஹெலிகொப்டர் தான் பின்னர் சாவகச்சேரியில் அப்பாவி மக்களைச் சுட்டது" என்று புலிகளது சமீபத்திய அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை அரசின் நபர்கள் மீது மட்டுமல்ல வாகனங்கள்மீதுகூட மக்கள் நம்பிக்கை கொள்ளக்கூடாது என்பதில் புலிகள் மிகக் கவனமாகவே இருக்கிறார்கள் என்று தெரிகிறது. அவ்வாறான நம்பிக்கைகள் ஏமாற்றத்திற்கே வழிவகுக்கும் என்பதுதான் புலிகள் அமைப்பின் அபிப்பிராயமாகும்.

# வன்னியில் 'நீதிமன்றம்'

வவுனியா கோட்டத்திற்கான புலிகளது தமிழீழ மாவட்ட நீதிமன்றம் கடந்த 5.12.94 அன்று ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

கனகராயன் குளத்தில் நடைபெற்ற ஆரம்ப வைபவத்தில் புலிகள் அமைப்பின் முக்கிய பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

இதேவேளை தமிழீழ நிர்வாகப் பிரிவினரால் முகாமைத்துவ கருத்தரங்குகளும், வகுப்புகளும் யாழ்ப்பாணத்தில் நடத்தப்பட்டுள்ளன.

புதுவருடத்தை முன்னிட்டு வீடுகளில் தொங்கவிடப்படும் காலண்டர்களில் சினிமாப்படங்கள் எதுவும் இடம்பெறக் கூடாது. அவ்வாறான காலண்டர்கள் தமிழீழத்தில் தடைசெய்யப்பட்டுள்ளன என்று யாழ்ப்பாணத்தில் புலிகள் அறிவித்துள்ளார்கள்.

# மலையகக் கல்விக் கல்லூரியின் கதி என்ன? விவாதிக்க மத்திய மாகாணசபை இணக்கம்!

(கண்டி நிருபர்)

இலங்கை முழுவதும் கல்விக் கல்லூரிகள் அமைக்கப்பட்டிருந்தும் பெருந்தோட்டத் துறையைச் சேர்ந்த தமிழ் ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கவும் ஆசிரியர் பற்றாக்குறையை நீக்கவும் அட்டனில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஸ்ரீபாதக் கல்விக் கல்லூரி மூலம் உரிய பலனைப்பெற முடியவில்லை என்பது பற்றி விவாதிக்க மத்திய மாகாண சபை இணங்கியுள்ளது.

ஜேர்மன் அரசாங்கத்தின் ஆதரவில் நிர்மாணிக்கப்பட்ட இந்த கல்விக் கல்லூரி எந்த நோக்கத்திற்காக ஆரம்பிக்கப்பட்டதோ அந்த நோக்கம் கை கூடவில்லை. இதனை நாடே அறிகின்ற இவ்வேளையில் இது குறித்து இப்பொழுது அங்கு ஏற்பட்டுள்ள வீண் தலையீடுகளும் இடையூறுகளும் குறித்து சபை விவாதித்து தீர்க்கமான முடிவை எடுக்க வேண்டுமென சபையின் உப தலைவரும் இ.தொ.கா.உறுப்பினருமான திரு.ஆர்.தங்கவேல் சபைக்கு விடுத்த முன்னறிவித்தலின் அடிப்படையிலே இது பற்றி சபை விவாதிக்க உள்ளது.

# வெள்ளத்தின் மத்தியிலும் தேடுதல் வேட்டை!

# இறுதி யுத்தத்திற்கு புலிகள் அழைப்பு

(மட்டக்களப்பு நிருபர்)

மட்டக்களப்பு-அம்பாறை மாவட்டங்களில் சமீப வெள்ளத்தால் பாரிய சேதங்கள் ஏற்பட்டுள்ளமை தெரிந்ததே.

இதே வேளையில் அடாது மழை பெய்தாலும் விடாது தேடுதல் நடவடிக்கைகளில் பாதுகாப்பு படையினர் ஈடுபட்டுள்ளனர்.

கிராமங்களில் தேடுதல் நடவடிக்கைகளின் போது கைதுகளும் இடம்பெறுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை கடந்த 11.12.94 அன்று வாழைச்சேனை பகுதியில் புலிகளால் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருந்தன.

"இறுதி யுத்தம் ஆரம்பிக்கப்போகிறது. வீட்டுக்கு வீடு ஒரு ஆணோ அல்லது பெண்ணோ புலிகளில் சேரவேண்டும்" என்று அச்சுவரொட்டிகளில் அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

சுவரொட்டிகளை ஒட்டிவிட்டு கைக்குண்டு ஒன்றையும் வெடிக்கவைத்துவிட்டு புலிகள் சென்றுள்ளனர்.

# சென்றார்–கண்டார்–அதிர்ந்தார்!

## வணபிதா ஒருவரின் யாழ் அனுபவம்

கண்டியைச் சேர்ந்த வணபிதா டக்ளஸ் பெரேரா அண்மையில் யாழ்ப்பாணத்திற்கு விஜயம் செய்திருந்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட இடங்களை சென்று பார்வையிட்ட வண பிதா டக்ளஸ் பெரேரா அதிர்ச்சியடைந்தார்.

"நம்பமுடியாத காட்சிகள் பலவற்றை காண முடிகிறது. வடபகுதி மக்களின் நிலை குறித்து தென்பகுதியில் வெகுஜன தொடர்பு சாதனங்களில் இருட்டடிப்பு செய்யப்படுகிறது. இங்குள்ள நிலவரம் குறித்து நான் போய் சொன்னாலும் தெற்கில் உள்ளவர்கள் நம்பப்போவதில்லை.

"நான் யாழ் வருவதை எனது சகாக்கள் மற்றும் எனது உறவினர்கள் எவருமே விரும்பவில்லை" என்று அதிர்ச்சியடைந்த நிலையில் வண பிதா டக்ளஸ் பெரேரா தெரிவித்துள்ளார்.

# "பேரினவாதியின் அவலச் சாவு"

(வர்மா)

**யாழ்ப்பாணத்தில் வெளியாகியுள்ள 'விடுதலைப் புலிகள்' என்னும் பத்திரிகையில் காமினி திசாநாயக்காவின் மரணம் பற்றிக் குறிப்பிடப்பட்டிருக்கிறது. ஒரு பேரினவாதியின் அவலச் சாவு என்று அதனை விபரித்துள்ளது விடுதலைப்புலிகள் ஏடு.**

# மத்திய மாகாணத்திலும் பனிப்போர்

(கண்டி நிருபர்)

மத்திய மாகாணத்தில் ஸ்ரீ.ல.சு. கட்சியின் ஆதரவிலான முஸ்லிம் முன்னணி கிளைகளை உருவாக்குவதில் ம.மா.சபை உறுப்பினரும் அமைச்சர் பௌஸியின் நெருக்கமான நண்பருமான ஹாஜியார் ஒருவர் இப்பொழுது மும்முரமாக ஈடுபட்டுள்ளார். முஸ்லிம் சமூகத்தின் தலைவர் யார் என்ற ஏக்கத்தில் முஸ்லிம் காங்கிரஸ் முன்னணியும் இந்த கிளைகளை அமைப்பதில் ஆர்வம் காட்டுகின்றன.

பாடசாலைகளின் அபிவிருத்தியிலும் மற்றும் பொது வைபவங்களிலும் இவ்விரு அணிகளுக்கும் இடையில் உள்ள ஆதரவாளர்கள்-அமைப்பாளர்கள் மத்தியில் சலசலப்பும் அதிகரித்துள்ளது. என்றாலும் நீல நிறப் பக்கமாக பலரும் ஆதரவைக் காட்டுவதாக பரவலான கதை.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## மட்டக்களப்பு மக்களின் சிரமம்

சமீபத்திய வெள்ளத்தினால் பாதிக்கப்பட்ட மட்டக்களப்பு மக்கள் அரிசி, பருப்பு, மா, சீனி போன்ற பொருட்களை பெறுவதில் சிரமங்களை எதிர்நோக்கினார்கள். கூட்டுறவு சங்கத்திலும் அரிசி, சீனி போன்றவை தீர்ந்துவிட்டதாக கூறப்பட்டதால் மக்கள் பெரும் சிரமப்பட்டனர் என்று மட்டக்களப்பு நகர மேயர் செழியன் பேரின்பநாயகம் முரசிடம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு நகரில் உள்ள தேநீர், உணவு விடுதிகளிலும், பாண் பேக்கரிகளிலும் சுகாதார முறைகள் பேணப்படவேண்டிய அவசியத்தை எடுத்துக் கூறியுள்ளதாகவும், மீறுவோர்மீது நடவடிக்கை எடுக்க உத்தேசித்துள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## சுகாதார சேவை தேவையில்லையாம்

(திருமலை)

திருகோணமலை நகரசபைத் தலைவரால் ஒழுங்கு செய்யப்பட்ட நகரச் சுத்திகரிப்பு சம்பந்தமான கூட்டமொன்றிற்கு சுகாதார வைத்திய அதிகாரியும், அவரது உத்தியோகத்தர்களும் அழைக்கப்பட்டிருந்தனர்.

கூட்டத்தின் ஆரம்பத்திலேயே நகரசபைச் செயலாளர் "சுகாதார அலுவலகத்தின் சேவை நகரசபைக்கு தேவையில்லை" என்று கூறினார். அதனையடுத்து சுகாதார சேவை அதிகாரியும், அவரது ஊழியர்களும் கூட்டத்தை விட்டு வெளியேறினார்கள்.

இது சம்பந்தமாக சுகாதார வைத்திய அதிகாரி திருமலை நகரசபை உறுப்பினர்களுக்கு கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அக் கடிதத்தில், தனது நிர்வாகத்தின்கீழ் நடைபெறும் சகல சுகாதார சேவைகளையும் நிறுத்தி வைத்துள்ளதாக தெரிவித்துள்ளார். பொதுமக்கள் பாதிக்கப்படாமல் தடுக்க நகரசபை உறுப்பினர்கள் யாவரும் பிரச்சனையை ஆராய்ந்து தனக்கு நல்லதொரு முடிவை தெரிவிக்க வேண்டும் என்றும் அவர் கோரியுள்ளார்.

## "வடிகாலமைப்புக்கள் உருவாக்கப்படும்"

(ஏறாவூர் நிருபர்)

அண்மையில் பெய்த அடைமழை வெள்ளத்தினால் ஏறாவூர் நகர பிரதேசம் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டது. ஏறாவூர் பிரதான வீதியில் 4 அடிக்கு மேல் வெள்ள நீர் பாய்ந்தது. ஏறாவூர் இந்தளவு மிக மோசமாகப் பாதிக்கப்பட்டதற்கு ஏறாவூர் பிரதான வீதியில் காணப்படும் ஒடுக்கமான மூன்று பாலங்களும், பொருத்தமான வடிகாலமைப்பு வசதி இல்லாமையுமே காரணங்களாகும்.

நிலமையைப் பார்வையிட பொறியியலாளர் குழுவினருடன் வந்த மட்டு.மாவட்ட பா.உ. செய்யதலி மௌலானா அவர்கள் உடனடியாக பிரதான வீதியில் காணப்படும் குறித்த பாலங்களை உயர்த்தி அகலப்படுத்தவும், பொருத்தமான வடிகாலமைப்பு வசதியை ஏற்படுத்தத் திட்டமிட்டிருப்பதாகவும் தெரிவித்தார்.

இதே வேளை மட்டு மாவட்டத்தில் அண்மையில் இரு தடவைகள் ஏற்பட்ட வெள்ளத்தின் பின்னர் அநேக பகுதிகளில் நுளம்புத் தொல்லை அச்சுறுத்தி வருகிறது.

## ஏன் இந்த தடை?

## பிஸ்கட்டுக்கும் கட்டுப்பாடு

(திருமலை நிருபர்)

'யாழ்-குடாநாட்டில் தடை நீக்கி அனுமதிக்கப்பட்ட பொருட்களுக்குக்கூட மூதூர்ப் பகுதியில் தடை விதிப்பதன் காரணம் என்ன?' இவ்வாறு மூதூர் பொது மக்கள் அங்கலாய்க்கிறார்கள்.

மூதூர் கிராமங்களான கட்டைபறிச்சான் கடற்கரைச்சேனை சேனையூர், சம்பூர் மேன்காமம், கிளிவெட்டி, ஈச்சிலம்பற்றை வெருகல் போன்ற தமிழ் கிராமங்களில் வாழும் மக்கள் அத்தியாவசியப் பொருட்களைக்கூட கட்டுப்படுத்தப்பட்ட அளவிலேயே கொண்டுசெல்ல அனுமதிக்கப்படுகிறார்கள். சிறுவர்களுக்கான பிஸ்கட், சாக்லட் வகைகள்கூட அனுமதிக்கப்படுவதில்லையாம்.

தலையிடி, காய்ச்சல் போன்றவற்றுக்கான பனடோல், டிஸ்பிரின் வில்லைகள் என்பவை பெருஞ் சிரமத்தின் மத்தியிலேதான் பெறக்கூடியதாக இருக்கிறது என்று கிராம வாசிகள் தெரிவிக்கிறார்கள்.

படையினரின் பூரண கண்காணிப்பில் இருக்கும் இவர்கள் தமது தேவைக்கேற்ப பொருட்களைப் பெற்றுக்கொள்ள படையினரே உதவலாம் என்று மூத்த பிரஜையொருவர் கருத்துத் தெரிவித்தார்.

## 1995ம் ஆண்டின் ஓய்வூதியம்

## வழங்கப்படும் தினங்கள்

(ஏறாவூர் நிருபர்)

எதிர்வரும் 1995ம் ஆண்டில் ஓய்வூதியம் கிடைக்கப் பெறும் தினங்கள்:

ஜனவரி 10, பெப்ரவரி 09, மார்ச் 09, ஏப்ரல் 06, மே 04, ஜூன் 08, ஜூலை 06, ஆகஸ்ட் 08, செப்டம்பர் 12, ஒக்ரோபர் 10, நவம்பர் 09, டிசம்பர் 07, ஆகியவைகளாகும்.

## கனடாவில் போயும் அட்டமி-நவமியா?

## நாள் பார்த்தார் நல்ல வேலை போச்சு!

நமது நாட்டில் எம்மவர் எந்தக் காரியத்தையும் ஆரம்பிக்கமுன்னர் நாள்-கோள் பார்ப்பது வழக்கம். ஆனால் இந்தக் கொள்கையெல்லாம் இருபத்தினாலு மணித்தியாலமும் இயந்திரம்போல இயங்கி சுறுசுறுப்பாக வேலை பார்க்கும் மேற்கத்திய நாடுகளுக்குப் பொருந்துமோ?

கனடாவில் வசித்துவரும் யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த ஒருவர் அங்கு பல வேலைகளுக்கு விண்ணப்பம் செய்தும் எதுவுமே கிடைக்காமல் மிகவும் கஷ்டப்பட்டுக் கொண்டு இருந்தார். திடீரென ஒருநாள் அவருக்கு- முன்னர் அவர் நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றியிருந்த மெசின் ஒப்பரேட்டர் வேலைக்கு அடுத்த நாள் காலை வருமாறு ரெலிபோனில் அறிவிக்கப்பட்டதாம். இதைக்கேட்டு மட்டற்ற மகிழ்ச்சியடைந்த அன்பர் அடுத்த நாள் காலை வேலையை பொறுப்பேற்பதற்கான ஆயத்தங்களில் ஈடுபட்டிருந்த வேளையில் அவரது மாமியார் சொன்னாராம் "தம்பி நாளைக்கு அட்டமி நவமி. மறுநாள் பிற்பகலுக்குப் பிறகுதான் நல்ல நாள். முதன் முதலில் வேலைக்குப் போகிறீர்கள். நல்ல நாளில் போக வேண்டாமா?" என்று. இதைக் கேட்ட அவரும் அட்டமி-நவமியில் பதவியேற்றால் இந்த வேலை நிலைக்காமல் விட்டிடுமோ என்ற பயத்தில் அந்த நிறுவனத்திற்கு ஃபோன் செய்து தனக்கு அடுத்த நாள் வேலையை பொறுப்பேற்க முடியாமல் இருப்பதாகவும் மூன்றாம் நாள் வருவதாகவும் சொன்னாராம்.

அதற்குப் பிறகு அவருக்கு அந்த நிறுவனத்திலிருந்து ஒரு தொலைபேசிச் செய்தியும் வரவில்லையாம். இதையிட்டு கவலையடைந்த அந்த அன்பர் மீண்டும் அவர்களுடன் தொடர்பு கொண்டபோது அவருக்கு கிடைத்த பதில்: "எங்களுக்கு இயந்திரத்தை இயக்க ஒருவர் மிகவும் அவசரமாக தேவையாக இருந்தார். நீங்கள் உடனே வரமுடியாது என்று சொன்னதால் வேறு ஒருவரை வேலைக்கு எடுத்து விட்டோம்!"

இப்போ அவர் வேலை தேடி சலித்து விட்ட நிலையில் மாமியாரை தனிக் குடித்தனம் போகும்படி கேட்டுக்கொண்டுள்ளார். 'எங்கடை ஆட்கள் தாங்கள் எங்கு வசிக்கின்றோம் என்பதை மறந்து தங்களது கொள்கைகளையும் அவர்களுக்கு திணிக்க நினைத்தால் உது என்ன நடக்கக்கூடிய காரியமோ?'

ம.சிவலிங்கம்.

## பிரதேச சபைக்கு இலாபம்!

(திருமலை நிருபர்)

திருகோணமலை மாவட்டமும் சூழலும் பிரதேச சபைக்கு வரி கட்ட மறுத்து டோக்கியோ சீமெந்து கம்பனி லிமிட்டட் நிறுவனத்தாரால் தொடரப்பட்ட வழக்கு பிரதேச சபைக்குச் சாதகமாக முடிந்துள்ளது.

1986ம் ஆண்டு இரண்டாம் கந்தாயம் முதல் வரி கட்ட நிறுவனத்தார் மறுத்ததன் பேரில் பிரதேச சபையின் நடுக் கட்டலுக்கு எதிராக மேன் முறையீட்டு நீதிமன்றில் தொடரப்பட்ட இவ்வழக்கு 25.11.94 அன்று தள்ளுபடி செய்யப்பட்டது. இதனைத் தொடர்ந்து மேற்படி நிறுவனம் பிரதேச சபைக்கு இவ்வாண்டு இறுதிவரை வரியாக அறுபத்தி நான்கு இலட்சத்து முப்பதினான்காயிரத்து நானூற்றி அறுபத்தி நான்கு ரூபா ஏழு சதத்தை செலுத்த உள்ளது.

மேற்படி வழக்கில் ஆஜராகி வெற்றியீட்டித் தந்த சட்டத்தரணி திரு அ.ஜெகசோதியை பாராட்டி நன்றி தெரிவிக்கும் தீர்மானம் ஒன்றை பிரதேச சபை தனது 27.11.94 அன்று நடந்த கூட்டத்தில் நிறைவேற்றியுள்ளது.

## இந்து மகாநாடு

மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள அனைத்து இந்து சமயத்தை மேம்படுத்தும் இந்து அமைப்புக்களையும் ஒன்றுகூட்டி இந்து மகாநாடு ஒன்றை நடாத்த மட்டக்களப்பு மாவட்ட இந்து இளைஞர் பேரவை, இந்து தர்மோதயம், கிழக்கு இந்து ஒன்றியம், இந்து சமய விருத்திச் சங்கம், சைவத் திருநெறி மன்றம் என்பன திட்டமிட்டுள்ளன. மாவட்டத்தில் இந்து அமைப்புக்கள் யாவும் ஒன்றிணைந்து சமய, சமூக மட்டங்களில் சேவையாற்ற ஒழுங்குகள் மேற்கொள்ள வழி வகுப்பதாக இந்து மகாநாடு அமையும். இதில் பங்குபற்ற பல இந்து மதத் தலைவர்களும் அழைக்கப்படவுள்ளனர்.

## கைத்தறி வீழ்ச்சி!

கல்முனைக்குடி கைத்தறி நெசவுத் தொழிலுக்கு பெரும் பேர் போன கிராமமாக கடந்த கால் நூற்றாண்டு காலமாக திகழ்ந்து வருகிறது.

இக் கிராமத்தில் வதியும் ஆடவரும் பெண்டிரும் ஆர்வத்துடன் இத் தொழிலில் ஈடுபட்டு பெரும் ஊதியம் பெற்று தமது ஜீவனோபாயத்தை நடத்தி வந்தனர்.

ஆனால் கடந்த சில ஆண்டு காலமாக இத்தொழில் கடும் வீழ்ச்சி கண்டுள்ளதோடு இத் தொழிலில் பணிபுரியும் பலரும் வேலை இழந்து வீடுகளில் முடங்கிக் கிடக்கின்றனர்.

காரணம்- தாம் உற்பத்தி செய்யும் உடு துணி வகைகளின் மூலம் பொருள் விலையேற்றமும் வெளிநாட்டு துணி வகைகளோடு தமது உற்பத்தி உடு துணி வகைகளை போட்டி போட்டு சந்தைப்படுத்த முடியாததும் அண்டை நாட்டில் இருந்து அதிக அளவு சாறங்களும் சாரிகளும் இறக்குமதி செய்யப்பட்டு இங்கு குவிக்கப்படுவதுமே ஆகும்.

எம்.சி.கலீல்-கல்முனை.05.

## புகார் பெட்டி

### சிகிச்சை நிலையம் தேவை

கண்டி மாவட்டத்திலுள்ள இனிகலை, உகுரஸ்ஸபிட்டிய, கொண்டதெனிய ஆகிய கிராமங்களில் வாழும் கர்ப்பிணிகள் இங்கு சிகிச்சை நிலையம் இல்லாத காரணத்தினால் கட்டுகஸ்தோட்டை வைத்தியசாலை சிகிச்சை நிலையத்தை நாடி பெரும் கஷ்டத்தின் மத்தியில் கால்நடையாக செல்கின்றனர். இப்பரிதாபகரமான நிலையை பார்க்கும் போது பெரும் வேதனை தருகிறது.

எனவே இதற்குரிய அதிகாரிகளை அந்தந்த இடங்களிலேயே சிகிச்சை நிலையங்களை அமைத்துத் தரும்படி பொதுமக்கள் தினமுரசு வாயிலாக கேட்டுக் கொள்கின்றனர்.

இனிகலை முஜிப்-கண்டி.


## விளம்பரப் பகுதி



### மலையாள மாந்திரீகம்

27 வருடங்களாக மலையாள மாந்திரீக துறையில் நுணுக்கமாக நான் கற்றறிந்த வகையில் இக்காலங்களில் அவ்வப்போது அவரவர் குறைகளுக்கு என்ன பரிகாரம் என அச்சொட்டாக அவ்வேளைகளிலே மலையாள பகவதி வெளிச்ச வீடாக எனக்கு காட்டிக் கொடுக்கின்றது.

இதையொட்டியே வளர்ந்த எனது நிறுவனம் வரையறுக்கப்பட்ட கம்பனியாக மாறியது. அத்துடன் நவீன உலகத்துக்கு தகுந்தவாறு என்னிடம் மாந்திரீகம், ஜோதிடம், கைரேகை இவைகளுக்கான அதி அற்புத கம்பியூட்டர் உண்டு. உங்கள் குறை என்ன? காதல் தோல்வியா? கல்யாணம் நடக்கவில்லையா? நினைத்தது நினைத்தவாறு நடக்கவேண்டுமா? காதலுக்காக சாவா? வாழ்வா என நினைப்பதை விட்டு என்னை சந்திக்கலாமே.

இவ்வாண்டு மாந்திரீக சக்தியின் வெற்றி பெற்ற ஜபிதா இதோ?

இவ்வாண்டு மலையாள மாந்திரீக காந்த சக்தியும் வெற்றியும்:

- நிறைவேறாத காதல் வசியம்- 100/97
- கடல் கடந்து செயல் புரியும் காதல் வசியம்- 100/97
- கணவன் மனைவி பிணக்கு- 100/45
- பெற்றோர் விரும்பாத காதல்-100/87
- குத்தகை குடியிருப்போர் பிரச்சனை-100/33
- தீரா ஆஸ்துமா நோய்- 100/100
- திருமணத் தங்குதடை நிவர்த்தி-100/97
- குடிபோதை நிவர்த்தி- 100/97
- கல்வி ஞான விருத்தி- 100/72
- சகல வியாபார விருத்தி- 100/83
- மீன்பிடி, பண்ணை, ஆடு,மாடு,கோழி வளர்ப்பு- 100/27
- புத்திர பாக்கியம்-100/33
- பிசாசு தோஷம், சூனிய நிவர்த்தி-100/97

கொழும்பில் மாதந்தோறும் மாதக் கடைசியில் 30,31 திகதிகளில் தான தர்மமும் துர்க்கை உச்சாட பூசை காலை 10 மணிமுதல் மாலை 6 மணிவரை நடைபெறும். அன்று நிச்சயம் உண்மை அறியலாம்.

தலைமைப்பீடம்
P.K.சாமி JDGAN
(மாந்திரீகச் சக்கரவர்த்தி)
சிறீ துர்க்காதேவி ஆலயம்
32, தினச்சந்தை காம்பிளக்ஸ்
நுவரெலியா.
தொலைபேசி: 052-2508, 052-3093

கொழும்பு இல்லம்-
இல: 162,
கொட்டாஞ்சேனை வீதி,
கொட்டாஞ்சேனை.
கொழும்பு-13.
தொலைபேசி: 342463, 342464

## ரிஷி அஜமாமிச லேகியம்

(முஸ்லிம் முறைப்படி தயாரிக்கப்பட்டது)



இளமையின் விளைவுகளை அறியாமல் தவறு செய்ததினால் ஏற்படும் இடுப்பு வலி, அசதி, இரத்தக் கொதிப்பு, உஷ்ணம், ஊறல், இருதயத் துடிப்பு, பசியின்மை, திரேக வரட்சி, தூக்கமின்மை, நெஞ்சு நோவு, துடிப்பு, முதுகு வலி, வயிற்று நோவு, உடம்பு, கால் கை வலி, நாட்பட்ட வாய்வு, மறதி, மயக்கம், மூளை பலவீனம், நரம்பு பலவீனம் முதலிய சகல வியாதிகளையும் தீர்த்து, திரேக வலிமையையும் தேஜஸ்சையும் கொடுக்கும். ஒரே பாட்டிலில் குணம் அறியலாம்.

விலை ரூபாய் 175/=,95/=
தங்க பஸ்பம் கலந்தது 975/=
வெள்ளி பஸ்பம் கலந்தது 875/=

ஞான சுந்தர வைத்தியசாலை
187, செட்டியார் தெரு,
கொழும்பு 11,
போன்: 421398


## பொத்துவில் வைத்தியசாலை தரமுயர்த்தப்படாதது ஏன்?


பொத்துவில் பிரதேசத்தில் 37500 இற்கும் மேற்பட்ட தமிழ், முஸ்லிம், சிங்கள மக்கள் வாழ்ந்து வருகின்றனர். பொத்துவில் வைத்தியசாலையில் ஏதாவது முக்கிய அவசர சிகிச்சை செய்வதாக இருந்தால் எதுவித வசதியும் கிடையாது. 72 மைல் தொலைவிலுள்ள மட்டக்களப்பு வைத்தியசாலைக்கோ அல்லது மிகவும் தூரத்திலுள்ள பதுளை வைத்தியசாலைக்கோதான் அம்பியூலன்சில் செல்ல வேண்டும். சாதாரணமாக ஒரு நோயாளி பல் பிடுங்குவதாக இருந்தாலும் இப்படித்தான். இன்னும் சாதாரண பழையதொரு கட்டிடத்திலேயே பிரசவ விடுதியும் பல வருடங்களாக எதுவித அடிப்படை வசதிகளுமின்றி இயங்கி வருவதை அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது.

அத்துடன் போதியளவு வைத்தியர்களோ, பெண் தாதி உத்தியோகத்தர்களோ, குடும்ப நல சேவகிகளோ (மருத்துவமாது) இங்கு இல்லை. பல வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட உடைந்து-வெடிப்புகளுடன் காணப்படுகின்ற கிணற்றிலிருந்தே நீர் எடுக்க வேண்டியுள்ளது. இங்கு பெயரளவில் ஆண்களுக்குரிய வாட் பெண்களுக்குரிய வாட், சிறுவர் வாட், பிரசவவிடுதி ஆகியன உள்ளதே தவிர சாதாரண கட்டில்-படுக்கை வசதிகளோ போதுமானதாக இல்லை. பல வருடமாக சுற்றயல்கூறு வைத்தியசாலையாக இயங்கிவரும் இவ்வைத்தியசாலையை மூவின மக்களும் செறிந்து பரந்து வாழ்வதன் காரணமாக இவ் ஏழை எளிய மக்களின் நலன் கருதி சம்பந்தப்பட்ட சுகாதார உயர் அதிகாரிகள் மாவட்ட வைத்தியசாலை ஆக்காமல் தாமதிப்பதன் நோக்கம்தான் என்னவோ?

பொத்துவில் மலிக்.

## கருத்தோவியம்!

இலங்கையில் ஜனாதிபதித் தேர்தலில் திருமதி சந்திரிக்கா பண்டாரநாயக்கா குமாரதுங்க பெற்ற வெற்றி தமிழ்நாட்டு பத்திரிகை உலகிலும் வியக்கப்பட்டது. கருத்தோவியங்கள், விமர்சனங்கள் வெளியாகியுமிருந்தன. தமிழக பத்திரிகை ஒன்றில் வெளியாகிய கருத்தோவியம் ஒன்று இங்கே உங்கள் பார்வைக்குத் தரப்படுகிறது.





## நேரடியாக முரசு கரம் சேர இதோ ஒரு வாய்ப்பு!

தினமுரசு உள்ளூர் சந்தா விபரம்:

ஒரு வருடத்திற்கு ரூபா 492/= (52 வாரங்கள்)
ஆறு மாதங்கள் ரூபா 251/= (26 வாரங்கள்)
மூன்று மாதங்கள் ரூபா 128/= (13 வாரங்கள்)

சந்தாதாரராக விரும்புவோர் தங்களது சுயமுகவரியிட்ட கடிதமூலம் தொடர்பு கொள்ளவும். சந்தாப்படிவம் எம்மால் அனுப்பிவைக்கப்படும்.

தினமுரசு வாரமலர்
த.பெ.இல:1772
கொழும்பு

THINAMURASU VAARAMALAR
P.O.BOX: 1772
COLOMBO

என்ற முகவரிக்கு கடிதங்களை அனுப்பிவைக்கும்படி கேட்டுக் கொள்கிறோம்.

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# மாற்றுத்திட்டக் கோரிக்கை மாட்டாமல் தப்பிக்கொள்ளும் விவேகம்!

பாப்பரசர் வருகைக்காக தலைநகர் உச்சிமுதல் உள்ளங்கால்வரை உஷாராகிவருகிறது.

இதுதவிர பாப்பரசர் வரும்போது அவரோடு பிரத்தியேக பாதுகாப்பு அணியும் கூட வரும்.

அவரது இலங்கை வருகை காப்புறுதி செய்யப்பட்டும் உள்ளது.

பாப்பரசரை இலங்கைக்கு வருமாறு அழைப்பு விடுத்தவர் முன்னாள் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்கா.

அவரை மறந்ததுபோலவே அவர்தான் அழைப்பு விடுத்தவர் என்பதும் அநேகமாக மறக்கப்பட்டுவிட்டது.

முன்னாள் ஜனாதிபதியின் அழைப்பை ஏற்ற பாப்பரசர் இந்நாள் ஜனாதிபதி சந்திரிக்காவின் வரவேற்பை ஏற்கப்போகிறார்.

பாப்பரசரின் வருகையை முன்னிட்டு புலிகளை சமாதானப்படுத்தும் தேவை அவசரமாகிவிட்டது.

பாப்பரசர் இங்கு நிற்கும் ஒவ்வொருநிமிடமும் இலங்கை அரசு மடியில் நெருப்பைக் கட்டிக்கொண்டு இருப்பது போலவே இருக்கும்.

புலிகள் பாப்பரசர் வருகையை குழப்ப விரும்பமாட்டார்கள்.

யாழ்ப்பாணத்திலுள்ள கிறிஸ்தவ மதத்தலைவர்கள் பலர் புலிகள் அமைப்புக்கு ஆதரவாகவே கருத்து வெளியிட்டு வருகிறார்கள்.

சர்வதேச ரீதியில் கிறிஸ்தவ மதத் தலைவர்கள் சிலர் மூலம் புலிகள் தமக்கு ஆதரவு தேடுவதும் கவனிக்கத் தக்கது.

இதேசமயம், பாப்பரசரை தரிசிக்க யாழ் குடாநாட்டில் இருந்து குறிப்பிட்டளவான மக்கள் கொழும்பு வரவும் புலிகள் ஏற்கனவே சம்மதம் வழங்கியுள்ளனர்.

பாப்பரசரை தரிசிப்பதாகச் சொல்லிக்கொண்டு யாழ் குடாநாட்டை விட்டு சுலபமாக பலர் வெளியேறி விடுவார்கள் என்று புலிகள் கருதுவதால், திரும்பிவரும் உத்தரவாதம் உறுதியாக பெறமுடிந்தவர்களை மட்டுமே புலிகள் அனுமதிப்பார்கள்.

கிளாலி கடல்ஏரி வழியாகவே பாப்பரசரைக் காணவிரும்பும் மக்கள் வரவேண்டியிருக்கும்.

புலிகளோடு ஆரம்பித்து விட்டால் பாதுகாப்பு ஏற்பாடுகளுக்காக பரபரக்க வேண்டியிருக்காது என்று அரச தரப்பு நினைக்கலாம்.

'புண்ணுக்கு வலியோ மருந்துக்கு வலியோ' என்று ஒரு பழமொழி இருக்கிறது.

இப்போது புண் அரசுக்குத்தான். ஏனெனில் பாதுகாப்பு பொறுப்பு முழுக்க அரசின் தோளில்தான் இருக்கிறது.

புலிகளுக்கு அவசரமேயில்லை. வந்தால் பேசுவோம் என்று சொல்லிவிட்டு தமது வேலையைப் பார்த்துக்கொண்டு இருக்கிறார்கள்.

பேசவே மாட்டோம் என்று சொன்னால்தான் பிரச்சனை. பேசுவோம் என்று சொன்னால் யாரும் குறைசொல்ல இடமில்லை.

அது புலிகளுக்குத் தெரியும். அதேசமயத்தில் 45 வருட சேமிப்புத்திட்டங்களையெல்லாம் புலிகள் அறிமுகப்படுத்தி சுய ஆட்சி நடத்திக்கொண்டிருக்கிறார்கள்.

பேச்சு மேசையில் போய் புலிகளது தன்னாட்சி அமைப்புக்களை- நிர்வாகங்களை கலைத்துவிடச் சொல்லும் போதுதான் முரண்பாடு வெடிக்கும்.

புலிகளது நிர்வாகம் அப்படியே இருக்க அரசு நிவாரணப் பொருட்களை அனுப்பலாம். உணவுக் கப்பலை அனுப்பிவைக்கலாம். டாக்டர்களையும் அனுப்பிவைக்கலாம். இது எல்லாம் சுமுகமாக நடந்து முடியக்கூடிய காரியங்கள்.

சுருக்கமாகச் சொன்னால், யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள மக்களுக்கு அரசு தன்னால் செய்யக்கூடிய உதவிகளையெல்லாம் செய்யலாம்; புலிகள் தடுக்கமாட்டார்கள்.

ஆனால், தமது மடியில் கைவைக்க புலிகள் அனுமதிக்கப்போவதில்லை.

பிரபா தனது மாவீரர் தின உரையில்கூட சுயாட்சித் திட்டங்கள் தந்தால் பரிசீலிக்கலாம் என்றுதான் கூறியுள்ளார்.

சுய ஆட்சி என்பது தனி ஆட்சி என்றும் அர்த்தப்படும்.

அளவாக இருந்தால் யாரும் தொப்பியைப் போட்டுக்கொள்ளலாம் என்பது மாதிரியாக பிரபாவின் பேச்சை தமது விருப்பங்களுக்கு ஏற்ப எவரும் வியாக்கியானம் செய்துகொள்ளலாம்.

பிராந்திய சுயாட்சியை பிரபா கோருவதாக பாராட்டி எழுதிய சிலரும் இங்கு இல்லாமல் இல்லை.

பிராந்திய சுயாட்சி என்பது முன் ஒரு

அவர்கள் விருப்பம் எதுவும் வெளியே உள்ள நிலைகளுக்கு ஒத்துவராமல் போவதை நினைத்து வேதனைப்பட்டுக் கொள்ளட்டும்.

**ஒரு பலமான இராணுவ அமைப்பை உருவாக்கி, உலகில் அதிசிறந்த கெரில்லா இயக்கமாக இருக்கிறார்கள் புலிகள்.**

அந்த இயக்கத்தின் தலைவர் வெறுமனே ஒரு அரசியல்வாதியல்ல! தேர்தலிலே போட்டியிட்டுவிட்டு அரசிடம் சிபாரிசுகளுக்

அதுமட்டுமல்ல- 1977 பொதுத் தேர்தலில் **'சுதந்திரத் தமிழ் ஈழம் அமைக்கும்'** ஆணையைக் கேட்டு வெற்றிபெற்றது தமிழர் விடுதலைக் கூட்டணி.

தேர்தலில் அமோக வெற்றி! அமுதர் எதிர்கட்சி முதல்வரானார்.

"தமிழ் ஈழம் எமது இலட்சியம். மாற்றுத் திட்டம் இருந்தால் தாருங்கள் பரிசீலிப்போம்" என்று பேசினார் அமிர்.

**கொதித்துப்போன இளைஞர்கள் கேள்வி கேட்டார்கள். அமுதர் சொன்னார்: "தம்பிமாருக்கு எமது சாணக்கிய தந்திரம் புரியவில்லை. மாற்றுத்திட்டம் கோருவது அரசை அம்பலப்படுத்தத்தான். அது தமிழ் ஈழ இலட்சியத்தைக் கைவிடுவதாகாது" என்று பேசினார்.**

இளைஞர்கள் யாரும் அமுதர் சொன்னதை நம்பவில்லை. குறிப்பாக பிரபா நம்பவில்லை. விளைவு அமுதரின் மரணத்தில் முடிந்தது.

என்று பதில் சொல்கிறது அரச தரப்பு.

அகற்றுவோம்! என்று அரச தரப்பால் உறுதியாகக் கூறமுடியவில்லை. அதாவது எந்த முடிவிலும் ஒரு திட்டவட்டமான தெளிவுக்கு அரசு வரமுடியாமல் தடுமாறுகிறது.

பாதையைத் திறப்பது என்றால் அங்குள்ள கண்ணிவெடிகளை அகற்ற வேண்டும் என்பதும் பத்திரிகையாளர்கள் நினைவூட்டித்தான் தெரியவேண்டிய விசயமாக இருப்பது வேடிக்கையல்லவா?

இவ்வாறான சூழ்நிலையில் புலிகளை திருப்தி செய்யக்கூடிய தீர்வை முன்வைக்க அரசால் முடியுமா?

புலிகளை திருப்தி செய்ய முடியாவிட்டாலும், தமிழ் பேசும் மக்களை தன் பக்கம் திருப்பக்கூடிய தீர்வை அரசாங்கம் வழங்கக்கூடியதாக இருக்குமா?

போன்ற கேள்விகள் பதில் சொல்லக் கஷ்டமானதாகவே இருக்கின்றன. தெளிவான பதிலைக் கூறினால் பேச்சுக்கு எதிரான கருத்து என்று கூறப்படவும் கூடும்.

இதெல்லாம் ஒரு புறமிருக்க, அரசும்- புலிகளும் இரகசிய ஒப்பந்தம் ஒன்றுக்கு தயாராகி வருவதாக எதிர்க்கட்சி வட்டாரத்தில் ஒரு பேச்சு உலா வருகிறது.

ஐக்கிய தேசியக் கட்சியின் முக்கிய பிரமுகர் ஒருவரே அத் தகவலை கூறிவருகிறார்.

யாழ் குடாநாட்டை புலிகளிடம் ஒப்படைத்து விடுவது; 2 வருடங்களுக்கு புலிகளோடு மோதல் எதிலும் ஈடுபடாமல் தவிர்ப்பது; போன்ற விடயங்கள் இரகசிய ஒப்பந்தத்தில் உள்ளடங்கியிருக்கும் என்கிறார் அந்த முக்கியஸ்தர்.

சம்பந்தப்பட்ட யூ.என்.பி. முக்கியஸ்தருக்கு என்ன கருத்து இருந்தாலும் அவரை விமர்சிக்காமல் அவர் சொன்ன



தமிழீழமே இறுதித் தீர்வு என்று 1985இல் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டம்.

காகவும் அலைந்துகொண்டு, அரசை வீழ்த்தத் தயங்கோம் என்று வேடிக்கையாகப் பேசும் அரசியல்வாதிகள் பட்டியலில் பிரபாவைக் கொண்டுவந்து சேர்க்கமுடியாது.

இறுதி இலக்கு தமிழ் ஈழம் என்று வகுத்து அதற்காக ஏழாயிரத்துக்கு மேற்பட்ட உறுப்பினர்களை இழந்துவிட்ட இயக்கம்.

நீண்டகாலப் போர், புலிகளுக்கு ஆயிரக்கணக்கான உறுப்பினர்களின் இழப்புக்கு காரணமாகியபோதும், உறுதியான அடித்தளத்தைப் போட்டுக்கொடுத்துவிட்டது.

'இன்னும்சில தூரம்தான் இருக்கிறது விடுதலையை சென்றடைய' என்று புலிக

ஆனால், இப்போது வேறு வழியில்லை. யாழ் குடாநாட்டில் உள்ள மக்களை 'அடைந்தால் தமிழீழம் இல்லையென்றால் சுடுகாடு' என்று ஊர்வலம் நடத்தவைக்க முடியாது. 1985-86களில் அப்படி நடத்த முடிந்தது.

சந்திரிக்கா பிரச்சனையைத் தீர்ப்பார் என்று தமிழ் மக்கள் நம்புகிறார்கள்.

எதிர்த்துப் பேசினால் 'சந்திரிக்கா செய்திருப்பார்- புலிகள்தான் விடவில்லை' என்று மக்கள் நினைப்பார்கள்.

எனவே- புலிகள் எடுத்தேன், கவிழ்த்தேன் விதமாகப் பேசாமல் அரசியல் முதிர்ச்சியோடு பேசுகிறார்கள்.

தகவலை ஆராய்வோம்.

கடந்த 17 வருட ஆட்சி பற்றியும், அதன் முக்கியஸ்தர்கள் பற்றியும் சாடுவதில் நாட்டில் பலத்த போட்டி நிலவுவதால் நாம் அதில் கலந்துகொள்ள வேண்டாம்.

தகவலில் சாரமில்லை. ஏனெனில் புலிகள் தொடர்பான ஒரு திட்டவட்டமான கணிப்புக்கே அரசாங்கம் இன்னமும் வந்து சேரவில்லை.

பேசவும் வேண்டும், போர் நிறுத்தமும் செய்ய வேண்டும். அதேசமயம் கடந்தகால அரசு புலிகளோடு நடத்திய பேச்சில் தம்மால் முன்வைக்கப்பட்ட

## எக்ஸ்ரே ரிப்போர்ட்

**நாரதர்**

# இரகசிய ஒப்பந்த செய்தி உண்மையா?

ஆனையிறவுப் பாதை திறப்பு விடயத்தில் புலிகளது ஒத்துழைப்பை அரசு பெறமுடியாது என்பது உறுதியாக ஏற்கனவே தெரிந்த விடயம்.

அரசும், படைகளும் உஷாராக இருப்பதற்கு காரணம், யாழ்ப்பாணத்திலிருந்து வரும் மக்களோடு மக்களாக புலிகளும் வந்து சேர்ந்து விடுவார்களோ என்று நினைப்பதால்தான்.

எனவே- கடும் சோதனை நடவடிக்கைகளை எதிர்பார்க்கலாம்.

பாப்பரசர் இலங்கை வந்து செல்வது இலங்கைக்கு உலக அரங்கில் கௌரவமான விசயம்.

அவர் இங்கு நிற்கும்போது நாட்டின் எந்தவொரு பகுதியிலும் துப்பாக்கி வேட்டுக்களின் சத்தம் கேட்காமலிருந்தால் அரசுக்கும் பெருமை.

அதனால்தான் போர் நிறுத்தம் கேட்டு பிரதிபாதுகாப்பு அமைச்சர் புலிகளுக்கு கடிதம் எழுதினார்.

போர்நிறுத்தம் ஒன்றைச் செய்வதோடு, இரண்டாம் சுற்றுப் பேச்சையும்

காலத்தில் இலங்கை கம்யுனிஸ்டுக்கள் சிலர் முன்வைத்த திட்டம்.

சமஷ்டிக் கோரிக்கையை தமிழரசுக் கட்சி முன்வைத்தபோது கம்யுனிஸ்டுக்கள் அதனை எதிர்த்தனர். சமஷ்டியால் நாடு பிரியும். எனவே பிரதேச சுயாட்சியே தீர்வாக அமையும் என்றார்கள். யாரும் அதனை காதில் போட்டுக்கொள்ளவில்லை.

அப்போதே இந்த நிலமை என்றால் இப்போது - தனியாட்சி நிர்வாக அமைப்புக்களோடு உள்ள புலிகள் பிரதேச சுயாட்சியோ, பிராந்திய சுயாட்சியோ கோருவார்களா?

'தமிழ் ஈழம் இறுதித் தீர்வு' என்று போராடும் புலிகள் ஆகக் குறைவான அதிகாரமுடைய ஓர் அமைப்பு முறையைக் கோருவார்கள் என்று சில விமர்சகர்கள் நினைத்ததுதான் வேடிக்கை. நல்லகாலம் நகர சுயாட்சிதான் பிரபா கோருகிறார் என்று நினைக்காமல் விட்டார்கள்.

புலிகளுக்காக பரிந்து பேசுவதாக நினைத்துக்கொண்டு புலிகளையே கொச்சைப் படுத்துகிறார்கள்.

அந்த விமர்சகர்களை விட்டுவிடுவோம்.

ளது பத்திரிகை, ஆசிரியர் தலையங்கம் எழுதியிருக்கிறது.

இந்த நேரத்திலே புலிகளை அரசு பேச்சுக்கழைக்கிறது.

கடந்தகால பேச்சுக்கள் பற்றி பிரபா என்ன சொல்கிறார்? **"பேச்சுவார்த்தை என்ற பொறிகள் வைக்கப்பட்டபோதும் நாம் அவற்றை தகர்த்தெறிந்தோம்"** என்கிறார்.

அப்படியானால் என்ன அர்த்தம்? இலட்சியத்தை அடைய செல்லும் பாதையில், வைக்கப்படும் பொறிகளே பேச்சுவார்த்தை முயற்சிகள்!

புலிகள்தான் பிரச்சனையைத் தீர்க்க தடை என்றும், போர் வெறியர்கள் என்றும் வெளியே சொல்வதற்காக பேச்சுக்கு வா என்று அழைப்பார்கள். அந்த தந்திரத்தை முறியடிக்க புலிகள் பேசத்தயார் என்று முன்வந்து தமது புத்திசாலித்தனத்தைக் காட்டுவார்கள்-காட்டியுமிருக்கிறார்கள். அதனைத்தான் பிரபா கூறியிருக்கிறார்.

புலிகள் மட்டுமல்ல; 1985 திம்பு பேச்சுக் காலத்தில் சகல தமிழ் இயக்கங்களும் இப்படித்தான் நடந்துகொண்டன.

நாங்கள், வேறு வழி இல்லை என்று ஒரு பாதையை தெரிந்தெடுத்து வெற்றிகரமாக முன்னேறிக் கொண்டிருக்கிறோம். வேறு பாதை இதைவிட சிறப்பாக இருந்தால் சொல்லுங்கள். நாங்கள் வரமாட்டோம் என்று ஒன்றும் பிடிவாதம் பிடிக்கவில்லை. 'என்ன வேறு பாதை ஏதாவது சொல்ல முடியுமா?' என்பதுதான் புலிகளது விவேகமான கேள்வி.

இதனைப் புரியாமல் புலிகளே தாமாக முன்வந்து வேறுபாதையும் இருக்கிறது என்று சுட்டிக்காட்டுவார்கள் என்று நினைப்பது எத்தனை அப்பாவித்தனம்!

எனவே- மாற்றுத் திட்டத்தை முன்வைக்க வேண்டிய நிலையில் அரசு இருக்கிறது.

ஆனையிறவுப் பாதையை திறக்க முடிவெடுத்திருப்பதாக அரசாங்கம் கூறியதாக செய்தி வருகிறது.

"பாதையில் கண்ணிவெடி இருந்தால் மக்கள் பயணம் செய்ய முடியாதே! அதனை அகற்றுவீர்களா?" என்று பத்திரிகையாளர் கேட்கிறார்.

"அதனையும் கவனிக்கத்தான் வேண்டும்"

விமர்சனங்கள் இப்போது தம்மீது திரும்பாமலும் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நிலைப்பாடுகளிடையே அரசாங்கம் சிக்கிப்போயிருக்கிறது.

அமைச்சர் சி.வி. குணரத்தின பாராளுமன்றத்தில் சமீபத்தில் ஆற்றிய உரையில், கடந்தகால அரசு புலிகளுக்கு நிதி கொடுத்தது என்றும் தாம் அந்தத் தவறை செய்யப்போவதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, பத்திரிகைப் பேட்டி ஒன்றில் புலிகள் இணக்கத்திற்கு வந்தாலும் வராவிட்டாலும் அரசியல் தீர்வை நாம் முன்வைக்க வேண்டும் என்ற நல்ல கருத்தை கூறியிருக்கிறார்.

இந்தியா சென்று பேச்சுவார்த்தை பற்றி எடுத்துக்கூறிவிட்டு வந்திருக்கிறார் வெளிநாட்டமைச்சர்.

இந்திய-இலங்கை உறவு புதிய கட்டத்திற்குள் பிரவேசித்துள்ளது.

(தொடர்ச்சி 6ம் பக்கம்)



சமீபத்திய யாழ்ப்பாண ஜோக் என்ன தெரியுமோ? பொன்னுத்துரை, யோகநாதன் என்ற பெயர்கள் எல்லாம் பெஞ்சமின், ஜோன்சன், மைக்கல் என்று மாற்றப்படுகுதாம். ஏனாம் தெரியுமோ? பாப்பரசரைத் தரிசிக்க ரெண்டு எழுத்தார் அனுமதிக்கப்போகினம் எண்ட கதை அடிபடத் தொடங்க, நீண்டகாலமா பயண முயற்சி 'பாஸ்' தடையால் கைகூடாத ஆட்கள் கச்சிதமான திட்டம் போட்டால் எப்படியிருக்கும்? அதை நினைத்துத்தான் அந்த ஜோக்!

யாழ்ப்பாணத்திலை ரெண்டு எழுத்து தலைவர் கம்பியூட்டர் யுகம் பற்றிப் பேசினவரல்லோ. அந்த விசயம் தலைநகர இரகசிய துப்பறிவோர் காதிலை விழுந்திருந்தால் கம்பியூட்டர் கடைகளுக்கு முன்னாலே போய் நிக்கப்போகினம் எண்டு சிலர் கதைக்கினம். பகிடிதான் என்றாலும் குட்டி உண்மையும் இருக்குமோ?

அரச கட்டுப்பாட்டில் உள்ள வெகுஜன தொடர்பு சாதனங்கள் செய்திச் சுதந்திரம் எண்ட பெயரிலை அடிக்கிற கூத்து நிற்கிறமாதிரித் தெரியேல்லை. ஆனையிறவு பாதை விசயத்திலை வெளியிட்ட செய்தி அரசாங்கத்தையே கையைப் பிசைய வைத்துப்போட்டுது. அரச விசயத்தைக்கூட உண்மை பொய் அறிஞ்சு வெளியிடமுடியாமல் போனா அதற்குப் பெயர் செய்திச் சுதந்திரமோ? அப்படியெண்டா பிறகு ஏன் அரச கட்டுப்பாட்டிலை இருக்கவேணும்? தனியார் கையிலை விடலாமல்லோ? சிலர் வெளிநாட்டிலை இருந்து வந்து புதுசா ஏதோ வெட்டிப் பிடுங்கிறமாதிரி காட்ட உள்ளதையும் கெடுக்கினம். அது மட்டும் நல்லாப் புரியுது!

## அதிரடி அய்யாத்துரை

சில வாரங்களுக்கு முன்பு கொழும்பிலை அரசாங்கம் ஆடிப்போச்சு! படை வட்டாரம் பயத்திலை உறைந்துபோச்சு! கொழும்புக்கும் மட்டக்களப்புக்கும் இடையிலை சமாதானத் தூதுகள் தரையாலும், வான் மூலமும் பறந்து ஒரே அமளி துமளி! என்ன விசயம் எண்டு யோசிக்கிறியளோ? தேனக சிங்கத்தார் 'அரசை வீழ்த்தத் தயங்கோம்' எண்டு பேசினவரல்லோ. அதுதான் இலங்கை முழுக்க அப்செட்டாகிப் போச்சு. பின்கதவால் போய் சரணம் ஐயப்பா. மேடையிலை மட்டும் சன்னதமாக்கும். பேச்சை அறிஞ்ச அதிகார வட்டத்தினர் கிச்சு கிச்சு மூட்டின மாதிரி விழுந்து விழுந்து சிரிச்சவையாம். சிங்கத்தார் பேச்சுக் காதிலை பூ! அமளி துமளி எண்டு நான் சொன்னதும் அப்படித்தான்!

திருவான மலையிலை தங்கமானவர் செய்த சிபாரிசு ஒண்டின் காரணமாக கட்சிக்காரர் கேள்விமேலை கேள்வி கேட்டு துளைச்சுப்போட்டினமாம். கூட்டம் நடந்த அறையிலை ஒரே சத்தம். வெகுஜனப் பிரதிநிதிக்கு இரண்டு நாள் தொடர் காய்ச்சல்.

வடக்கு-கிழக்கு கவர்னர் விடயத்திலை அடிபடும் பெயர் பட்டியலிலை இன்னொரு பெயரும் சேர்ந்திருக்கு. அவர் முன்னாள் நடிகர். பெரும்பான்மை இனத்தைச் சேர்ந்தவர். நல்லாத் தமிழ் தெரியும். பச்சை அணியில் இருந்து நீலத்திற்குப் போனவர். யார் நியமிக்கப்பட்டாலும் கூட்டான கட்சி ஆள்மட்டும் நியமிக்கப்படமாட்டார் எண்டு அதிகார மட்டம் உறுதியா சொல்லிப்போட்டுதாம். ரெண்டு எழுத்தாரோடு பேச்சு நடக்கிற நேரம் அது நல்லாயிருக்காது எண்டதும் காரணமாம். கிடைக்காது எண்டு உறுதியாகத் தெரிந்த பிறகு, 'சீச்சீ உந்தப் பழம் புளிக்கும்' கதைமாதிரி பேசுகிறாராம் சம்பந்தமான ஆள். போனது- கேட்டது- நடையாய் அலைஞ்சது எல்லாம் அதிகார மட்டம் அறியும். முடிஞ்சா அப்படிக் கேக்கவேயில்லை எண்டு அறிக்கை விடட்டும். அதிகார மட்டமும் கூட்டான கட்சியின் குணவிசேஷம் அறிய வாய்ப்பிருக்கும். முக்கிய விஷயம்- விடுகிற அறிக்கையை ஆங்கிலப் பேப்பருகளில் விடவேணும்.

தந்தை பெரியாரைப் பாராட்டி, அரசியல்வாதிகளை கண்ணதாசன் அடிக்கிறார் பாருங்கோ ஒரு அடி. எப்பவும் பொருந்தும்?

"பொதுநலமோர் வியாபாரம்! கொள்கை எல்லாம்
பொய் சரக்கு! பகுத்தறிவோ இல்லாக் கூட்டம்.
இது சந்தை! தேர்தல்களோ கிராக்கி தேடும்
ஏற்பாடு! பொய் சரக்கை விற்பதற்குப்
பொதுமேடை சத்தமிட்டே ஏலங் கூறப்
போகுமிடம் என்றிருக்கும் இந் நாட்டில்
மதி நலத்தை பொது நலத்தால் வளர்க்க வந்த
மனிதரொரே ஒரு மனிதர் பெரியார்தானே?"

இதுதானுங்கோ நெத்தியடி!

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# அல்பிரட் துரையப்பா முதல் காமினி வரை

6 அரசியல் தொடர்
அற்புதன் எழுதுவது

# உறுதியற்ற தலைமையால் உருக்குலைந்த இயக்கம்!

## ஓடினார்கள்–ஓடினார்கள்..... பேசியதை மறந்து ஓடினார்கள்!

### சன்சோனிக் கமிஷன்

பொலிஸ் அதிகாரி குருசாமியின் வீடு யாழ்ப்பாணத்தில் ஒட்டுமடம் என்ற இடத்தில் இருந்தது.

1977ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் பொலிசார் வன்முறை நடவடிக்கைகள், துப்பாக்கிப் பிரயோகங்கள் போன்றவற்றில் ஈடுபட்டனர்.

யாழ்ப்பாண நகரமே சுடுகாடாக மாறியது.

பொலிசாரின் மீது யாழ் மக்கள் தீராத வெறுப்புக்கொள்ளக் காரணமாக அமைந்த சம்பவங்களில் 1977ம் ஆண்டின் அத்துமீறல்கள் முக்கியமானவை.

ஜே.ஆர். ஜயவர்த்தன தலைமையிலான அரசு சன்சோனிக் கமிஷனை நியமித்தது.

விசாரணை நடப்பதாக காட்டவும், மக்களது கோபத்தை தணிக்கவும் உபயோகமான ஒரு தந்திரம் கமிஷன் அமைப்பதுதான்.

இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் அநேகமான விசாரணைக் கமிஷன்களின் நோக்கம் அதுதான்.

கமிஷன் அமைக்கும் செய்திக்கு முக்கியத்துவம் கொடுக்கப்படும்.

கமிஷனின் விசாரணையில் கண்டறியப்படும் உண்மைகள் மட்டும் ஒரு ஓரத்தில் தூக்கிப்போடப்பட்டுவிடும்.

சன்சோனிக் கமிஷனும் அவ்வாறான நோக்கத்தில் நியமிக்கப்பட்ட ஒன்றுதான்.

எனினும், சன்சோனிக் கமிஷன் முன்பாக சொல்லப்பட்ட சாட்சியங்கள் பத்திரிகைகளில் வெளிவந்தன.

### குருசாமியின் சாட்சி

பொலிசார் எப்படியெல்லாம் சட்டத்தை மீறி நடந்துகொண்டனர் என்பதையெல்லாம் மக்கள் அறிந்து கொள்ளக்கூடியதாக அது அமைந்தது.

அந்தவகையில் சன்சோனிக்கமிஷன் விசாரணை அரசுமீதான - அதன் பொலிஸ்படையினர் மீதான அதிருப்தியை உருவாக்க உதவியதுதான் போராட்டத்திற்கு கிடைத்த இலாபம்.

பொலிஸ் அதிகாரிகளும் விசாரிக்கப்பட்டனர். இன்ஸ்பெக்டர் தாமோதரம் பிள்ளை நியாயமாக சாட்சி சொன்னார்.

சீருடையில்- இலக்கத்தகடுகள் இல்லாத பொலிசார் தீவைப்புக்கள் போன்ற அத்துமீறல்களில் ஈடுபட்டதாக அவர் சாட்சி கொன்னார்.

இன்ஸ்பெக்டர் குருசாமியும் சன்சோனிக் கமிஷனால் அழைக்கப்பட்டார்.

பொலிசார் அத்துமீறல் எவற்றிலும் ஈடுபடவில்லை என்று நிரூபிக்கும் விதமாக சாட்சி சொன்னார் குருசாமி.

பத்திரிகைகளில் குருசாமியின் சாட்சியத்தை படித்தவர்கள் அதிர்ச்சியடைந்தனர்.

தீவிரவாத இளைஞர்கள் அவரை ஒரு துரோகி என்று குறித்துக்கொண்டனர்.

அரசு குருசாமிக்குரிய பாதுகாப்பை அதிகரித்தது.

தானியங்கி இயந்திரத் துப்பாக்கி ஒன்றுடன் யாழ்ப்பாணத்தில் நடமாடினார் குருசாமி.

குட்டிமணி குழுவினர் குருசாமி வீட்டிற்கு சென்றபோது எதிர்பாராத ஒரு வாய்ப்பு அவர்களுக்கு சாதகமாக அமைந்தது.

குருசாமியின் வீட்டுக்கு அருகில் திருமண வைபவம் ஒன்று நடந்துகொண்டிருந்தது.

திருமண வீட்டார் பட்டாசுகளை கொளுத்தி ஆரவாரித்துக் கொண்டிருந்தனர்.

இன்ஸ்பெக்டர் குருசாமி வீட்டிற்குள் சென்ற குட்டிமணி குழுவினரில் ஒருவர் ஒபரோய் தேவன்.

கொழும்பில் உள்ள ஒபரோய் ஹோட்டலில் பணியாற்றியவர் என்பதால் அப்படி அழைக்கப்பட்டார்.

ஒபரோய் தேவன்தான் குருசாமியை சுடவேண்டும் என்பதுதான் திட்டம்.

குருசாமி எதிரில் வர ஒபரோய் தேவனைப் பார்த்து 'சுடடா' என்றார் குட்டிமணி.

முதல் சம்பவம், முதல் அனுபவம் என்பதால் தேவனுக்குப் பதட்டம்! தயங்கி நின்றார்!!

"சுடடா டேய்" என்றார் இரண்டாவது தடவையாக குட்டிமணி.

'சுட்டார்' ஒபரோய் தேவன்.

வெளியே-திருமண வைபவத்தில் கேட்ட பட்டாசு சத்தங்களோடு சத்தமாக துப்பாக்கி வேட்டொலிகளும் சேர்ந்துகொண்டன.

எவ்வித இடையூறும் இல்லாமல் குட்டிமணி குழுவினர் தப்பிச் சென்று விட்டனர்.

**'இன்ஸ்பெக்டர் குருசாமி கொலை!' என்ற செய்தி மறுநாள் 'ஈழநாடு' பத்திரிகையில் தலைப்புச் செய்தியாக வெளிவந்தது!**

குருசாமி கொலைக்குப் பின்னர் குட்டிமணி குழுவினரால் மேற்கொள்ளப்பட்ட மற்றொரு நடவடிக்கை குமார் கொலை! குமார் ஓய்வு பெற்ற ஒரு பொலிஸ் அதிகாரி.

வரும் வாரம்



**இலங்கை அரசை உலுக்கிய மிகப்பெரிய நடவடிக்கை சி.ஐ.டி.இன்ஸ்பெக்டர் பஸ்தியாம்பிள்ளை குழுவினரின் படுகொலை! அவர்கள் சிக்கியதே ஒரு தனிக்கதை! அதை அறிய வரும் வாரம்வரை பொறுத்துக்கொள்க!**

வடமராட்சியில் உள்ள தீவிரவாத இளைஞர்கள் பற்றிய விபரங்களை ஓய்வு பெற்ற பின்னரும் திரட்டிவந்தார் என்று சந்தேகிக்கப்பட்டு கொல்லப்பட்டார்.

இந்த நடிவடிக்கைகளையடுத்து குட்டிமணி பொலிசாரால் தீவிரமாகத் தேடப்பட்டார்.

### சிறைக்குள் பிரிவுகள்

ஏற்கனவே பொலிசாரால் கைதுசெய்யப்பட்டு குட்டிமணி சிறையில் இருந்திருக்கிறார்.

குட்டிமணி பற்றிய ஒரு சம்பவம்– சிறையில் இருந்தபோது குட்டிமணியிடம் சிறையில் கூட இருந்த ஏனைய தமிழ் இளைஞர்களுக்கு பயம்.

குத்துச்சண்டை போன்றவற்றில் குட்டிமணி சூரன் என்று பேர் எடுத்திருந்தார்.

அச்சமயம் ஆனந்தன் என்னும் தமிழ் இளைஞரும் தீவிரவாத நடவடிக்கைகள் காரணமாக சந்தேகிக்கப்பட்டு சிறையில் இருந்தவர்.

குட்டிமணி ஒரு பயில்வான் போன்ற தோற்றத்தோடு இருப்பார்.

ஆனந்தனுக்கு பலவீன உடல்போன்ற தோற்றம்.

ஒருநாள் குட்டிமணிக்கும் ஆனந்தனுக்கும் தகராறு. தகராறு முற்றி கைகலப்பாகி விட்டது. ஆனந்தன் குட்டிமணியை அடித்து வீழ்த்திவிட்டார்.

குட்டிமணி அதனை எதிர்பார்க்கவில்லை. சிறையைவிட்டு வெளியே சென்றவுடன் ஆனந்தனை ஒருவழி பண்ணப்போவதாக குட்டிமணி சபதம் செய்தார்.

ஒரே இலட்சியத்திற்காக சிறைசென்றபோதும் உள்ளே முரண்பாடுகளும் மோதல்களும் மட்டுமல்ல; சாதிப்பிரிவுகள்கூட தலைதூக்கியிருந்தன என்பதுதான் மாபெரும் வேதனை.

தமிழர் விடுதலைக் கூட்டணியின் இளைஞர் பேரவையில் முக்கியமான மூவர் காசி ஆனந்தன், மாவை சேனாதிராஜா, வண்ணை ஆனந்தன்.

காசி ஆனந்தனும், வண்ணை ஆனந்தனும் வாய்த்தர்க்கப்பட்டுக் கொள்வார்கள். சோற்றுக் கோப்பைகளும் பறக்கும். மாவை சேனாதிராஜா மட்டுமே பிரச்சனைகளில் பட்டுக்கொள்ளாமல் இருந்தவர்.

### வியாபாரிகளான போராளிகள்

சிலர் நாட்டைவிட்டு சென்று வெளிநாடுகளில் வியாபாரிகளானார்கள். சிலர் உள்நாட்டிலேயே வியாபாரம் செய்தார்கள்.

தமிழர் கூட்டணியை விமர்சித்து ஈழ விடுதலை இயக்கம் உருவாகியபோது அதில் முக்கியமான ஒருவர் ஹென்ஸ் மோகன். புலோலி வங்கிக் கொள்ளையிலும் சம்பந்தப்பட்டவர்.

இதே ஹென்ஸ் மோகன் பின்னர் யாழ் பா.உறுப்பினராக இருந்த யோகேஸ்வரனுடன் தன்னை நெருக்கமானவராகக் காட்டிக்கொண்டார். அதன்மூலம் யாழ்ப்பாணம் வெலிங்டன் தியேட்டருக்கு முன்புறம் கடை ஒன்று நிறுவி சொந்த வியாபாரத்தை வளப்படுத்திக் கொண்டார். இப்போது வெளிநாட்டில் இருக்கிறார்.

மற்றொருவர் சந்திரமோகன். இவரும் புலோலிக் கொள்ளையில் பங்குகொண்டவர். பின்னர் யாழ்ப்பாணத்தில் கைக்கடிகார கடை நடத்திவிட்டு வெளிநாடு பறந்துவிட்டார்.

தங்கமகேந்திரன் என்று ஒருவர். திருமலையைச் சேர்ந்தவர். புலோலி வங்கிக் கொள்ளையில் கிடைத்த நகையில் ஒரு பகுதியை விழுங்கியவர். பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைப்பில் சேர்ந்து கொண்டார்.

அவர் தங்குவதற்காக வீடொன்று ஏற்பாடு செய்து கொடுக்கப்பட்டது. அது ஒரு பீடிக் கம்பனி உரிமையாளரது வீடு. மானிப்பாயில் இருந்தது. அங்கு ஒரு அறையில் இருந்த பெறுமதியான உடமைகள், மறைத்துவைக்கப்பட்டிருந்த வீட்டு உரிமையாளரது நகைகள் போன்றவற்றை இயக்கத்திற்கே தெரியாமல் கையாடினார்.

நடவடிக்கை எடுக்க விசாரித்தபோது 'கொள்கை முரண்பாடு' என்று விலகிவிட்டார்.

பெண்களும் போராட்டத்திற்கு வந்து விட்டார்கள் என்று கூட்டணி தலைவர்களாலும் சுட்டிக்காட்டப்பட்ட ஒருவர் அங்கையற்கண்ணி.

இவரும் ஈழ விடுதலை இயக்கத்தில் முக்கியமான ஒருவராக நடந்து கொண்டவர்.

அங்கையற்கண்ணிக்கு பெண் விடுதலை பற்றியும் தெரியாது. இயக்கத்தில் எப்படி நடந்துகொள்ள வேண்டும் என்றும் தெரியாது.

ஈழ விடுதலை இயக்கம் அழிந்த பின்

### ஈழ விடுதலை இயக்கம்

குட்டிமணியும் அவரது ஆதரவாளர்களும் தனி ஒரு பிரிவு.

இளைஞர் பேரவையினர் மற்றொரு பிரிவு. இதற்குள் ஈழவிடுதலை இயக்கத்தைச் சேர்ந்த இளைஞர்கள் தனி ஒரு பிரிவு.

இளைஞர் பேரவையில் இருந்து பிரிந்ததுதான் தமிழ் ஈழ விடுதலை இயக்கம். (இன்றைய ரெலோ அல்ல)

இதன் தலைவராக இருந்தவர் த.முத்துக்குமாரசாமி. ஈழ விடுதலை இயக்க இளைஞர்கள் மத்தியில் சிறைக்குள் சாதி முரண்பாடுகள்.

தமக்குள்ளாகவே முரண்பட்டுக் கொண்டு முட்டி மோதினார்கள்.

1976ல் புலோலி வங்கிக் கொள்ளையை நடத்தியது ஈழ விடுதலை இயக்கம்தான்.

இன்ஸ்பெக்டர் பத்மநாதனால் கொள்ளையில் ஈடுபட்ட அனைவருமே மடக்கிப் பிடிக்கப்பட்டார்கள்.

ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்தவர்களில் பலர் வாய்வீச்சில் கெட்டிக்காரர்களாக இருந்தார்களே தவிர செயல் முனைப்பு இருக்கவில்லை.

இதனால் புலிகளோ, குட்டிமணி குழுவினரோ அவர்களை நம்பவில்லை. நல்லுறவுகளும் இருக்கவில்லை.

காலக்கிரமத்தில் ஈழ விடுதலை இயக்கம் தானாகவே அழிந்தது. அதன் முக்கியஸ்தர்கள் மக்களையும், தமது உறுப்பினர்களையும் கைவிட்டு ஒதுங்கினார்கள்.

புலிகள், ஈ.பி.ஆர்.எல்.எஃப்., ஈ.பி.டி.பி.– போன்ற பல இயக்கங்களோடு இழுபட்டார். எங்கும் நிரந்தரமாக தங்க அவரது குணவிசேஷம் இடமளிக்கவில்லை.

தற்போது புலிகளுக்கு ஆதரவாக லண்டனில் பேசித் திரிவதாக தகவல். இவரைப் புலிகள் நம்புவதில்லை என்பது வேறு விவகாரம்.

ஈழவிடுதலை இயக்கத்தில் இருந்தவர்களில் க. பத்மநாபா மட்டுமே தொடர்ச்சியாகப் போராட்டத்தில் பங்கு கொண்டார்.பின்னர் ஈ.பி.ஆர்.எல்.எஃப். செயலதிபராக இருந்தவரும் அவரே!

### இந்திய எதிர்ப்பு

வரதராஜப் பெருமாளும் ஈழ விடுதலை இயக்கத்தில் இருந்தவர். பின்னர் ஒதுங்கிக்கொண்டு பல்கலைக் கழக விரிவுரையாளராக இருந்தவர். புலிகளுக்கு ஆதரவான கருத்துக்களை வெளியிட்டு வந்தவர்.

சகல இயக்கங்களுடனும் தனக்கு உறவு உண்டு. தான் ஒரு நடுநிலைவாதி என்று கூறிவந்தார்.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்களுக்கு கார்ல் மாக்ஸ் பற்றிய வகுப்பு எடுக்க மட்டக்களப்புக்கு அழைக்கப் பட்டார்.

அங்குவைத்து பொலிசாரால் ஈ.பி.ஆர்.எல்.எஃப். உறுப்பினர்கள் கைதானபோது வரதரும் கைதானார்.

அப்போது டக்ளஸ் தேவானந்தா சிறையில் இருந்தார். ஈ.பி.ஆர்.எல்.எஃப். மத்திய குழு உறுப்பினராக இருந்த தேவானந்தாவால் வரதர் இயக்கத்தில் சேர்க்கப்பட்டார்.

இந்திய விஸ்தரிப்பு வாதத்திற்கு எதிராக யாழ்ப்பாணத்தில் 1980–82களில் தத்துவ விளக்கம் சொன்னவர் வரதராஜப் பெருமாள்.

அவரே பின்னர் இந்தியாவின் ஆசிர்வாதம் பெற்ற வடக்கு-கிழக்கு மாகாண முதல்வராக மாறியதுதான் சுவாரசியம்.

ஈழவிடுதலை இயக்கம் பற்றியும் அதன் முக்கியஸ்தர்கள் பற்றியும் இங்கே குறிப்பிடக் காரணம் இருக்கிறது.

### செயலிழந்த இயக்கம்

அந்த இயக்கம் மட்டுமே ஆயுதப் போராட்டம் பற்றிய வாய்வீச்சுக்களோடு உருவாகி அழிந்துபோன வரலாற்றைக் கொண்டதாகும்.

அந்த இயக்கத்தில் இருந்தவர்களில் பலர் பிரபலமான பெயர்கள் உடையவர்களாக இருந்தார்கள்.

அந்தக் காலத்தில் புலிகளில் இருந்தவர்கள் பற்றியோ, குட்டிமணி குழுவில் இருந்தவர்கள் பற்றியோ வெளியே தெரியாது.

ஆனால், அவர்கள் காரியத்தில் கண்ணாக இருந்தார்கள்.

ஈழவிடுதலை இயக்கத்தில் பத்துப் பேர் இருந்தால் 9 பேர் தலைவர்கள்.

## குறியைத்தேடி பிரபா கொழும்பு வந்தார்

யாரை யார் கட்டுப்படுத்துவது என்பதுதான் பிரச்சனை.

ஒரே ஒரு கொள்ளை நடவடிக்கையோடு சுருண்டு போனார்கள்.

உறுப்பினர்கள் விலகிச் சென்றமை சகல இயக்கங்களிலும் நடந்திருக்கிறது.

ஆனால், இயக்கத்தின் தலைவர் உட்பட முக்கியமானவர்களே விலகி ஓடியது ஈழ விடுதலை இயக்கத்தில் மாத்திரமே நடந்தது.

அதுவும் போராட்டம் பற்றிய நம்பிக்கைகள் நிலவிய வளர்ச்சிக் கட்டத்தில் கஷ்டங்களைத் தாங்காமல் ஓடினார்கள் என்பதுதான் முக்கியமானது.

அந்த தமிழ் ஈழ விடுதலை இயக்கம் செயலிழந்த பின்னர் குட்டிமணி-தங்கத்துரை குழுவினர் அந்தப் பெயரை தமது குழுவுக்கு சூட்டிக்கொண்டனர்.

தற்போதுள்ள தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) குட்டிமணி-தங்கத்துரை குழுவினரால் உருவாக்கப்பட்டதாகும்.

ஆனால் இன்றைய ரெலோ அமைப்பினர் தமது பிரசார பாடல் கசெட் ஒன்றில் 'முதன் முதல் தோன்றிய இயக்கம் தமிழீழ விடுதலை இயக்கம்' என்று ஒரு வரியையும் சேர்த்துக் கொண்டதுதான் வேடிக்கை.

### கொழும்பில் பிரபாகரன்

குட்டிமணி குழுவினர் பொலிசாரால் தேடப்பட்டுக் கொண்டிருந்த போது, புலிகள் துரோகிகள் பட்டியலில் இருந்த ஒருவரை குறிவைத்தனர்.

பிரபாகரன் குறியைத் தேடி கொழும்புக்கு வந்தார்.

கொழும்பில் அவருக்காக இன்னொருவர் காத்திருந்தார்.

(தொடர்ந்து வரும்)

### எக்ஸ்ரே ரிப்போர்ட் தொடர்ச்சி

இவ்வாறான நிலையில் புலிகளோடு இரகசிய ஒப்பந்தம் செய்யக்கூடிய சாத்தியம் பற்றிய பேச்சுக்கே இடமில்லை.

அரசாங்க தரப்புக்குள்ளும் அதற்கு ஆதரவிருக்காது.

தனக்கு விரோதமான ஒரு அமைப்போடு இலங்கை அரசு இரகசிய ஒப்பந்தம் செய்வதை இந்தியாவும் விரும்பாது.

போர் நிறுத்தம் ஒன்றைச் செய்வதற்கே படையினரின் சம்மதத்தை பெறவும், அவர்களை திருப்தி செய்யவும் நீண்ட முயற்சி அரசுக்கு தேவைப்பட்டிருக்கிறது.

வடக்கே பற்றிகளைக் கொண்டு செல்வதைக்கூட படையினரால் அனுமதிக்க முடியாதிருக்கிறது. கவனமாக எண்ணிப் பார்த்துத்தான் அனுமதிக்கிறார்கள்.

அரசாங்கத்தால் கடுமையான உத்தரவுகளை பிறப்பிக்க முடியாது. ஏனெனில் நாளை மீண்டும் போர் உக்கிரமானால் படையினர் அரசு மீதும் கோபம் கொள்வார்கள். "தடுக்காதே என்று சொன்னீர்களே இப்போது நாம் தானே அதன் விளைவுகளை சந்திக்கிறோம்" என்று படையினர் கூறக்கூடும்.

பற்றிகள் விடயத்திலே கூட நிலமை இப்படியிருக்கும் போது, படையினரை அனுசரித்துப்போக வேண்டியுள்ள போது ஒரு பகுதியை புலிகளிடம் விட்டுக்கொடுக்கும் ஒப்பந்தம் செய்ய 'முடியுமா? முடியாது!

புலிகளும் இரகசிய ஒப்பந்தம் எதற்கும் முன்வரப்போவதில்லை.

அரசாங்கத்தால் ஆகக்கூடிய பட்சம் எவ்வாறான திட்டத்தை முன்வைக்க முடிகிறது என்பதை வெளிப்படுத்திவிட்டு, அதில் தமது நிலைப்பாட்டை தமிழர்களும், வெளியுலகும் ஏற்கக்கூடியதாக முன் வைப்பதே பேச்சு தொடர்பான புலிகளது சாணக்கியமான நடவடிக்கையாக அமையும்.

அதற்கிடையே நீண்டகாலப் போரினால் களைப்படைந்துள்ள மக்கள் மூச்சு விட்டுக் கொள்ளக்கூடிய போர்நிறுத்தம் புலிகளுக்கு எந்தவகையிலும் பாதகமாக அமையாது.

புலிகள் போர் நிறுத்தத்தை வற்புறுத்தி வருகிறார்கள். அதனால் அரசு போர் நிறுத்தத்தை அறிவித்தாலும் புலிகளது கோரிக்கையை ஏற்று செய்யப்பட்ட ஒன்றாகவே அது கருதப்படும்.

போர்நிறுத்தம் மூலமான அரசியல் இலாபத்தையும் அரசு தனக்காக்கிக் கொள்ளமுடியாது.

அதுமட்டுமல்லாமல், அரசுக்கு அனுப்பும் கடிதங்கள், அரசால் அனுப்பப்படும் கடிதங்கள் அனைத்தும் புலிகளால் பொதுமக்கள் பார்வைக்காக வெளிப்படுத்தப் படுகின்றன.

தமது நடவடிக்கைகள் மீது மக்களுக்கு சந்தேகம் வரக்கூடாது என்பதில் புலிகள் மிகுந்த கவனத்தோடு செயற்படுவதையே அவை வெளிப்படுத்துகின்றன.


தமது கொள்கையில் உறுதியாக நிற்கும் ஒரு அமைப்பு அக் கொள்கைமீது தனக்கே நம்பிக்கையில்லை என்று மக்கள் நினைக்குமளவுக்கு செயற்படாது.

கரும்புலிகளை உருவாக்கிக் கொண்டிருக்கும் ஒரு தலைவர் இரகசிய ஒப்பந்தம் செய்ய முன்வரமுடியாது. தனது தலையில் தானே மண் அள்ளிப் போடும் காரியத்தை பிரபா செய்வார் என்று நினைக்க இடமில்லை!

எனவே- இரகசிய ஒப்பந்தச் செய்தி அற்புதமான வதந்தி என்பதில் ஐயமில்லை.

□□

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



அலசுவது – இராஜதந்திரி

# பாப்பரசர் வருகையின் அரசியல் முக்கியத்துவம்!

**ப**ரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் மத ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகவும் முக்கியம் பெற்றிருக்கவே காணப்படுகின்றது.

இலங்கைக்கு சுமார் 25 வருடங்களில் பரிசுத்த பாப்பரசர் ஒருவர் விஜயம் செய்யவிருப்பது இதுவே முதல் தடவையாகும்.

உலக கத்தோலிக்க மக்களின் ஏக மதத் தலைவராக பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் விளங்குகின்றார். மத ரீதியாக மட்டுமல்ல அரசியல் ரீதியாகக்கூட சர்வதேச ரீதியாக பாப்பரசரின் பணிகள் முக்கியம் வாய்ந்தவையாக இருக்கின்றன.

இலங்கைக்கு அடுத்த ஆண்டு ஜனவரி 20ந் திகதி ஒருநாள் விஜயமொன்றை மேற்கொள்ளவிருக்கும் பரிசுத்த பாப்பரசர் கொழும்பு காலிமுகத் திடலில் பிரமாண்டமான ஆராதனை நிகழ்ச்சி யொன்றையும் நிகழ்த்த ஏற்பாடாகியுள்ளது.

இந்த ஆராதனை நிகழ்ச்சியில் நேரில் பங்குகொள்ளவென இலங்கையின் அனைத்துப் பாகங்களிலிருந்தும் இலட்சக்கணக்கானவர்கள் கொழும்பு வரவிருப்பதாக அறிக்கைகள் கூறுகின்றன.

பாப்பரசரின் தரிசனம் என்பது கத்தோலிக்க மக்களைப் பொறுத்தவரை மிகவும் உன்னதமானதாகவே இருக்கின்றது.

இத்தாலியில் பாப்பரசரின் உத்தியோக பூர்வவாசஸ்தலமான வத்திக்கானில்கூட வருடந்தோறும் இடம்பெறும் முக்கிய மத வைபவங்களின்போது இலட்சக்கணக்கானவர்கள் கூடி நிற்பது வழக்கமாகும். பல்வேறு நாடுகளையும் பலமொழிகளைப் பேசுபவர்களையும் கொண்ட இம்மக்களை ஆசீர்வதிக்கும் போது, ஒவ்வொரு நாட்டுக்கும், மக்களுக்குமுரிய மொழியிலேயே பாப்பரசர் தமது ஆசீர்வாதத்தை வழங்குவது வழக்கமாகும்.

கடந்த சில வருடங்களாக நத்தார், மற்றும் ஈஸ்டர் பண்டிகைக் காலங்களில் வத்திக்கானில் கூடி நிற்கும் மக்களை ஆசீர்வதிக்கையில் தாம் குறிப்பிடும் பல்வேறு உலக மொழிகளுடன் சிங்களம், தமிழ் ஆகியனவற்றிலும் பாப்பரசர் தனது ஆசீர்வாதத்தை வழங்குவது வழக்கமாக இருந்துவருகின்றது.

பாப்பரசர் இவ்வாறு ஒவ்வொரு மொழிகளிலும் தனது ஆசீர்வாதத்தை வழங்கும்போது அம் மொழிகளுக்குரிய மக்கள் தமது நாட்டுக் கொடிகளை அசைத்து மகிழ்ச்சி ஆரவாரஞ் செய்வர்.

பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் இன்னும் ஒரு மாத காலத்தில் இடம்பெறவிருக்கிறது.

இலங்கையின் அனைத்துப் பாகங்களிலும் வாழுகின்ற சிங்கள, தமிழ் மற்றும் வேறு சமூகங்களைச் சேர்ந்த கத்தோலிக்க மக்கள் பாப்பரசரின் தரிசனத்தை நேரில் பெறுவதென்பதனை தமது வாழ்நாளில் கிடைத்தற்கரிய பெரும் பேறாகவே கருதுகின்றனர்.

கொழும்பில் இரு வாரங்களுக்கு முன்னர் இலங்கையின் அனைத்துப் பாகங்களையும் சேர்ந்த கத்தோலிக்க மத ஆயர்மார்கள் கூடி பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயம் குறித்து விரிவாக ஆராய்ந்திருந்தனர்.

அக்கூட்டத்தில் யாழ்ப்பாண ஆயர் அதிவண தோமஸ் சௌந்தரநாயகம் அவர்களும் கலந்துகொண்டிருந்தார்.

ஆயர் சௌந்தரநாயகம் கருத்து வெளியிடுகையில், வட பகுதி கத்தோலிக்க மக்களும் கொழும்பு வந்து பரிசுத்த பாப்பரசரின் தரிசனத்தைப் பெற பேராவல் கொண்டிருப்பதனைத் தெரிவித்திருந்தார்.

கூடவே அரசாங்கம் அம் மக்களின் நன்மை கருதி பாதுகாப்பான தரைப் பாதையொன்றைத் திறந்துவிட முன்வரவேண்டுமெனவும் கேட்டிருந்தார்.

வடபகுதி கத்தோலிக்க மக்கள் தமது மதம் தொடர்பாக மிக நீண்ட பாரம்பரியத்தைக் கொண்டிருக்கக் காணப்படுகின்றனர். யாழ்ப்பாணத்தில் ஒல்லாந்தர், போர்த்துக்கீசர் காலம் முதற்கொண்டு கத்தோலிக்க மதம், கிறிஸ்தவ மதம் என்பன நன்கு பண்பட்ட முறையில் சிறப்புற்றிருக்கக் காணப்படுகின்றன.

கல்வி, மற்றும் சமூக சீர்திருத்த விடயங்களில் கத்தோலிக்க, கிறிஸ்தவ மிஷனரிமார்களே இலங்கையில் முன்னோடிகளாக விளங்கியிருந்தனர்.




நாட்டில் கல்விக்கூடங்கள், வைத்திய சாலைகள் போக்குவரத்துப் பாதைகள் மற்றும் பிரமாண்டமான தேவாலயங்கள் என்பவற்றை நிறுவி மக்களின் நாகரிக வாழ்க்கைக்கு வழியமைப்பதில் கத்தோலிக்க- கிறிஸ்தவ மிஷனரிமார்கள் பெரும் பங்குவகித்திருந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.

இலங்கையின் ஏனைய பகுதிகளில் போன்று வடக்கு, கிழக்கு பிரதேசங்களிலும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மிஷனரிமார் கல்விக்கூடங்கள், வைத்தியசாலைகள் என்பவற்றை அமைத்திருந்தனர்.

1981ம் ஆண்டு யாழ் நகரில் தீயிட்டுக் கொளுத்தப்பட்ட யாழ் பொது சன நூலகமும் வண லோங் அடிகளார் என்ற கத்தோலிக்கப் பாதிரியாராலேயே ஆரம்பிக்கப்பட்டிருந்தது. யாழ் பொதுசன நூலகத்தில் காணப்பட்ட பெருந்தொகையான ஆவணங்கள், அரிச்சுவடிகள் என்பன வடக்கிலும், மற்றும் இலங்கையின் ஏனைய பாகங்களிலும் கத்தோலிக்க, கிறிஸ்தவ மிஷனரிமார்கள் புரிந்த பெருஞ் சேவைகளை எடுத்துக் கூறுவனவாக இருந்தன.

இது தவிர வடக்கே வண தனிநாயகம் அடிகளார் ஒரு தமிழ் ஆராய்ச்சியாளராக இருந்து மேற்கொண்ட பணிகள் உன்னதமானவை. 1974ம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் அனைத்துலக தமிழாராய்ச்சி மகாநாடு இடம்பெறுவதிலும் வண தனிநாயகம் அடிகளார் பெரும் பங்களிப்பை வழங்கியிருந்தார்.

பரிசுத்த பாப்பரசர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பரின் கொழும்பு விஜயத்தின்போது இடம்பெறவிருக்கும் நிகழ்ச்சிகளில், 17ம் நூற்றாண்டில் வாழ்ந்த வண ஜோசப் வாஸ் என்ற கத்தோலிக்க மதப்பெரியாரை ஒரு புனிதராக திருநிலைப்படுத்துவதே மிக முக்கியமானதாக அமையவிருக்கின்றது.

இந்தியாவின் கோவா மாநிலத்தில் இருந்து இலங்கை வந்தவரே வண ஜோசப் வாஸ் அடிகள். 17ம் நூற்றாண்டில் இவர் இலங்கையில் வாழ்ந்து நாட்டின் பல்வேறு பகுதிகளிலும் சமயப் பணிபுரிந்தவரென வர்லாற்றுக் குறிப்புகள் கூறுகின்றன.

வடபகுதியிலும் வண் ஜோசப் வாஸ் அடிகள் இருந்துள்ளார். யாழ்ப்பாணம் இளவாலைப் பகுதியில் நடமாடித் திரிந்து கத்தோலிக்க மதப் பணிகளை அவர் மேற்கொண்டிருந்தார்.

அப்போது ஒல்லாந்தரின் நிர்வாகம் யாழ்ப்பாணத்தில் இடம்பெற்றிருந்தது. இந்நிலையில் ஜோசப் வாஸ் அடிகளை ஓர் உளவாளி என்று யாழ்ப்பாணத்தில் அன்று இருந்த ஒல்லாந்த அதிகாரிகள் சந்தேகித்து அவரை சிறையில் இட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

அச்சமயம் நத்தார்கால ஆராதனைகளை யாழ்ப்பாணம் இளவாலையில் நடத்திக்கொண்டிருந்த வண ஜோசப் வாஸ் அடிகள், ஒல்லாந்தரின் கெடுபிடிகளிலிருந்தும் தப்பும் வகையில் யாழ்ப்பாணத்திலிருந்தும் தலைமறைவாகி தென்னிலங்கைக்கு வந்திருந்தார்.

தென்னிலங்கையிலும் மிகுந்த சிரமங்களுக்கு மத்தியிலேயே அவர் தமது மதப் பணிகளை மேற்கொண்டிருந்தார். வறுமை, மற்றும் அசௌகரியங்களைப் பொருட்படுத்தாது தெய்வீகப் பணியில் ஜோசப் வாஸ் அடிகள் தம்மை முழுமையாக அர்ப்பணித்திருந்தார்.

இதன் காரணமாகவே தற்போது மூன்று நூற்றாண்டுகளுக்குப் பின்னர் ஜோசப் வாஸ் அடிகளார் ஒரு மகானாக பரிசுத்த பாப்பரசரால் திருநிலைப்படுத்தப்படவுள்ளார்.

இந்நிகழ்ச்சியையும், அதனைத் தொடர்ந்து கொழும்பு காலிமுகத்திடலில் இடம்பெறவுள்ள பாப்பரசரின் ஆராதனையையும் காண்பதற்கு இலட்சக் கணக்கானவர்கள் கொழும்பு காலிமுகத் திடலில் கூடுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

காலிமுகத் திடல் ஒரு மாபெரும் சனப் பிரவாகத்தை எதிர்கொள்ளும் வகையில் கடந்த ஆண்டு மேதினத்திலன்று சோடனைகளால் களை கட்டியிருந்தது. ஆயினும் சென்ற ஆண்டில் மேதின ஊர்வலத்தை ஆரம்பித்து வழிநடத்திய அன்றைய ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசா பெரும் குண்டுவெடிப்பொன்றில் கொலையுண்டிருந்தார்.

அக்குண்டு வெடிப்புடன் தனது சோபையை இழந்த காலிமுகத்திடல் ஒரு வருடத்தின் பின்னர் தற்போது மீண்டும் புதுப் பொலிவு பெற ஆரம்பித்துள்ளது.

பாப்பரசரின் ஆராதனை நிகழ்ச்சிகளை முன்னிட்டு பிரமாண்டமான மேடை காலிமுகத்திடலில் போடப்பட்டு வருகின்றது. அத்துடன் விரிவான வகையில் இத்திடல் புனரமைக்கப்பட்டும் வருகின்றது.

பரிசுத்த பாப்பரசரின் பாதுகாப்பென்பது உலக அரங்கில் மிகவும் முக்கியமானதாகவே இருக்கின்றது. ஏனெனில் சில வருடங்களுக்கு முன்னர் வத்திக்கானில் உள்ள சென்பீட்டர் சதுக்கத்தில் (St Peter's Square) பரிசுத்த பாப்பரசர் மக்களைக் காண வந்தபோது துருக்கிய இளைஞர் ஒருவரால் சுடப்பட்டார்.

ஆயினும் பாப்பரசரின் மெய்ப்பாதுகாவலர்கள் அவருக்கு எதுவித உயிராபத்தும் ஏற்படாது காப்பாற்றினார். இது தவிர பல தடவைக்ள் பரிசுத்த பாப்பரசரை நோக்கி கொலைப் பயமுறுத்தல்களும் விடுக்கப்பட்டிருந்தன.

இதனையடுத்து பாப்பரசரின் பாதுகாப்புக்கென குண்டு துளைக்க முடியாத விசேட வாகனமும் (Bullet proof Wagon) வடிவமைக்கப்பட்டுள்ளது. பாப்பரசரின் விஜயங்களின்போது அவரது இந்த குண்டு துளைக்க முடியாத வாகனமும் கூடச் செல்வது வழக்கமாக இருந்து வருகின்றது.

இலங்கையிலும் பாப்பரசரின் பாதுகாப்பை முன்னிட்டு விரிவான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

உலக வரைபடத்தில் ஒரு பாதுகாப்பற்ற பிரதேசமாகவும் பல அரசியல் கொலைகளின் களமாகவும் ஒரு தசாப்த காலத்துக்கும் மேற்பட்ட உள்நாட்டு யுத்தத்தைக் கொண்ட ஒரு நாடாகவுமே இலங்கை தற்போது இடம்பிடித்துள்ளது.

இந்நிலையில் பல தடவைகள் பயமுறுத்தல்களுக்குள்ளான பரிசுத்த பாப்பரசரின் இலங்கை விஜயத்தையும் மிக்வும் பாதுகாப்பான நிலையிலேயே இடம்பெறச் செய்வதில் இலங்கை அரசு மட்டுமல்ல, வத்திக்கான் வட்டாரங்களும் விழிப்பாக இருக்கின்றன.

உலகில் இன்று எவருமே பாதுகாப்பற்ற நிலையில் இருப்பதையே காண முடிகின்றது. அரசியல் தலைவர்கள், மதத் தலைவர்கள், மற்றும் எழுத்தாளர்கள், பத்திரிகையாளர்கள், உட்பட அனைத்துத் தரப்பினருமே பயமுறுத்தல்களுக்கும், கெடுபிடிகளுக்கும் உள்ளாகியுள்ளனர்.

பிரபலமானவர்கள் மட்டுமல்ல அப்பாவி மக்களின் உயிர்கள்கூட இன்று துச்சமென மதிக்கப்பட்டு பந்தாடப்பட்டு வரும் கொடிய சூழ்நிலைகளே உலக அரங்கில் 'தலைவிரித்தாடி' வருகின்றன. பொஸ்னியா, ருவாண்டா, ஆப்கானிஸ்தான் உட்பட உலகின் பல்வேறு பாகங்களிலும் ஆயுதக் கெடுபிடிகள் அசுரத்தாண்டவமாடி வருகின்றன.

இலங்கையும் கடந்த ஒரு தசாப்த காலமாக இத்தகைய கொடிய சூழ்நிலையில் சிக்கித் தவிக்கும் பிரதேசமாகவே இருந்துவருகின்றது.

இருந்தபோதிலும் பகைமை, எதிர்ப்புகளுக்கெதிராக எதிர் நீச்சல் போடும் நடவடிக்கைகளும் இடம்பெறவே செய்கின்றன.

பரிசுத்த பாப்பரசர்கூட சில வருடங்களுக்கு முன்னர் தம்மைச் சுட்டுக்கொல்ல முயன்ற அலி அக்கா என்ற துருக்கிய இளைஞனின் தாயாரை சில தினங்களுக்கு முன்னர் வத்திக்கானில் வைத்து சந்தித்து தமது ஆசீர்வாதத்தை வழங்கியிருந்தார்.

இது தவிர முன்னர் ஒரு சந்தர்ப்பத்தில் தம்மைச் சுட்டுக்கொல்ல முயன்ற அத்துருக்கிய இளைஞனுடன் அவன் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் சிறைக்கூடம்வரை சென்று பரிசுத்த பாப்பரசர் அளவளாவியிருந்தார்.

எனவே இத்தகைய விடயங்கள் உலகில் தீயனவற்றுக்கெதிராக நல்ல சிந்தனைகள், நல்ல நடவடிக்கைகள் என்பனவும் திடமாக இருந்து வருவதனையே புலப்படுத்துவனவாக இருக்கின்றன.

இலங்கையைப் பொறுத்தவரை பாப்பரசரின் விஜயம் குறித்த விவகாரம் இராணுவ, அரசியல் வட்டாரங்களின் கவனத்தைப் பெற்றதாகவுமிருக்கக் காணப்படுகின்றது.

வட பகுதி கத்தோலிக்க மக்கள் பரிசுத்த பாப்பரசரின் தரிசனத்துக்காக ஏங்கி நிற்கின்றனர்.

வடக்கின் கத்தோலிக்க மக்கள் இலங்கையின் கடந்த ஒரு தசாப்த காலப் போரில் மிகவும் பாரதூரமான இழப்புக்களை அடைந்திருக்கக் காணப்படுகின்றனர்.

யாழ்ப்பாணத்தில் இன்று யுத்தக் கெடுபிடிகளுக்குள்ளாகியுள்ள பிரதேசங்களில் அனேகமானவை கத்தோலிக்க மக்கள் வாழும் பகுதிகளாகவே இருக்கின்றன.

யாழ்ப்பாணத்தின் கரையோரப் பகுதிகளான குருநகர், பாஷையூர் பிரதேசங்கள் குண்டு வீச்சுக்களால் குட்டிச் சுவராகியுள்ளன. இப் பிரதேசத்தில் மீன்பிடித் தொழிலையே பிரதானமாகக் கொண்ட கத்தோலிக்க மக்கள் அனைத்தையும் இழந்து இன்று தமது நாளாந்த ஜீவனோபாயத்துக்காக தரையிலும், நீரிலுமாக ஜீவ மரணப் போராட்டத்தை நடத்த வேண்டியவர்களாக இருக்கின்றார்கள்.

இவை தவிர பலாலி இராணுவ தளத்தை அண்டிய தோலகட்டிப் பிரதேசம் ஒரு மயானபூமியாகவே காட்சி தருகின்றது.

யாழ்ப்பாணத்தில் அமைதி தாண்டவமாடிய காலத்தில் தோலகட்டிப் பிரதேசத்தை ஒரு 'சிறிய இத்தாலி' (Little Italy) என்றே அழைத்தார்கள்.

ஏனெனில் அங்கே மலர்கள், பழவகைகள் என்பவற்றை உற்பத்தி செய்து அதனை ஒரு பூங்கனிச் சோலையாகவே கத்தோலிக்க பாதிரிமார்கள் உருமாற்றியிருந்தனர். ஆனால் தற்போது 'தோலகட்டி' ஒரு நரகலோகம்போல காட்சி தருகின்றது.

மேலும் ஜோசப் வாஸ் அடிகளார் நடமாடித் திரிந்ததாகக் கூறப்படும் இளவாலைப் பிரதேசமும் இன்று யுத்தக் கெடுபிடியினால் சூழப்பட்டிருக்கின்றது.

இந்நிலையில் இத்தகைய கெடுபிடி நிலைமைகளிலிருந்தும் ஓரளவு ஆறுதலையும், மனச் சாந்தியையும் பெறும் வகையிலேயே வடபகுதி கத்தோலிக்க மக்கள் பாப்பரசரின் தரிசனத்துக்காக ஏங்கித் தவிக்கிறார்கள்.

அம் மக்கள் கொழும்வு வரும்வகையில் பாதுகாப்பான பாதையொன்றுக்கு வழிவிடுமாறு யாழ் ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் அரச தரப்பினரைக் கேட்டுள்ளார்.

இதேவேளை தாம் ஆனையிறவுப் பாதையை திறந்துவிடத் தயாராக இருப்பதாகவும், தமிழீழ விடுதலைப் புலிகள் இதற்கு தம்முடன் ஒத்துழைக்கவேண்டுமென்றும் பாதுகாப்புப் படை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

எனவே வடபகுதி மக்களுக்கு பாப்பரசரின் தரிசனத்துக்காகப் பாதுகாப்பான பாதையொன்றைத் திறப்பது குறித்த விவகாரம் தற்போது முக்கியம் பெற்றிருக்கக் காணப்படுகின்றது.

அரச தரப்பினரும் தமிழீழ விடுதலைப்புலிகளும் இப்பாதை திறப்பு விடயத்தில் ஓர் இணக்கமான முடிவுக்கு வரவேண்டுமென்றே வட பகுதியின் கத்தோலிக்க மக்கள் பிரார்த்திக்கின்றனர்.

இத்தருணத்தில் இப்பாதை திறப்பு விடயத்தில் ஓர் இணக்கப்பாடு ஏற்படும் பட்சத்தில் அது வடக்கு-கிழக்கில் ஒரு நிரந்தர சமாதானத்தை நோக்கித் திறந்துவிடப்பட்ட பாதையாகவே இருக்கவேண்டுமென்பதே அனைத்து வட, கிழக்கு மக்களின் பிரார்த்தனையாகவுமிருக்கின்றது.

www.padippakam.com

நன்றி - நூலகத்திட்டம்

அறிந்து கொள்ளுங்கள்–ஆரோக்கியம் பெறுங்கள்–ஆனந்தமாய் வாழுங்கள்

# மருத்துவ விந்தைகள்

## குறைவான மறதி



மூளையை வருத்தி உழைத்துவரும் மனிதாகளுக்கு 'எல்சய்மர்' எனப்படும் மறதி நோயின் தாக்கம் குறைவாக ஏற்பட்டு வருவதாக கனடாவைச் சேர்ந்த மருத்துவ ஆராய்ச்சியாளர்கள் சமீபத்தில் கண்டு பிடித்துள்ளனர்.

இவ்வாராய்ச்சியாளர்களின் கூற்றுப் படி கிருமிநாசினி, இரசாயனப் பசளை போன்ற பொருட்களை அடிக்கடி கையாண்டு வரும் பணிகளில் ஈடுபட்டு வரும் மனிதர்களின் வயோதிப காலத்தில் 'எல்சய்மர்' எனப்படும் இந்த மறதி நோயின் தாக்கம் உருவாவதற்கு அதிகமான வாய்ப்புள்ளது என்று தெரிய வருகிறது.

இந்த நோயைக் குணப்படுத்துவதற்கு வல்ல தீர்க்கமான மருந்துகள் எதுவும் இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என்றாலும் கூட மருத்துவர்கள் மருந்தைக் கண்டுபிடிக்கும் முயற்சியை கைவிடாது தொடர்ந்தும் முயன்று வருகின்றனர்.

இதன் ஆரம்பகால கட்டத்தை இனங்கண்டு கொண்டால் 'ட்ரொப்பிக்காமைட்' (Tropicamaite) போன்ற மருந்துகளை உபயோகிப்பதன் மூலம் ஒரு குறிப்பிட்ட அளவில் இந்நோயை கட்டுப்படுத்திக் கொள்வதற்கு உதவியாக அமையலாமென்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வயிற்றுப் புழுக்களைப் பற்றி சில தகவல்கள்

அனைத்து தர வயதினருக்கும் வயிற்றுப் புழுக்களின் தாக்கம் ஏற்படக் கூடும். எனினும் சிறு வயதினர்களே இத் தாக்கங்களினால் அதிகம் பாதிப்படைந்து வருகின்றனர்.

- சிறு பிள்ளைகள் மண், அரிசி, கரி போன்றவைகளை சாப்பிடுவதற்கு காட்டிவரும் நாட்டத்தின்மூலம் அவர்களின் உடலில் வயிற்றுப் புழுத் தாக்கம் ஏற்படுகின்றது என்பதன் அறிகுறிகளாக கொள்ளுதல் வேண்டும். இவற்றை சிறு பிள்ளைகள் இரத்தக் குறைவின் நிமித்தமே உண்பதற்கு விரும்புகின்றனர். குறிப்பாக இவர்களின் உடலில் இப் புழுக்கள் குடி கொண்டிருப்பதன்மூலமே இரத்தக் குறைவு ஏற்படுகிறது.
- தேங்காய் சாப்பிடுவதன் மூலம் வயிற்றில் புழுக்கள் ஏற்படுகின்றன என்ற தர்க்கத்தில் எந்தவித உண்மையும் கிடையாது.
- வயிற்றுப் புழுக்கள் நாம் உட்கொள்ளும் ஆகாரத்தின் ஊடாகவும் நமது அவயவங்களின் ஊடாகவும் உடலைச் சென்றடைந்து தன் இனத்தை பெருக்கிக் கொள்கின்றன. இப்புழுக்களினால் மனித உடலுக்கு தீமையைத் தவிர நன்மையேதும் ஏற்படுவது கிடையாது. மனித உடல் இயக்கத்திற்கு இப் புழுக்களின் செயற்பாடும் அவசியமெனத் தெரிவிப்பது ஆதாரமற்ற கூற்றாகும்.
- பக்கவிளைவு ஏதுமின்றி முழுமையாக இப் புழுக்களை அழிக்கவல்ல மருந்தினங்கள் பல இருக்கப் பெறுகின்றன.

## ஆண்கள் கவனிக்க!

வாலிப வயதைக் கொண்ட ஆண்களின் விந்தை விருத்தியாக்கிக்கொள்வதற்கு இதோ சில ஆலோசனைகள் கீழே தரப்படுகின்றன:

• உங்களின் நாளாந்த உணவில் விட்டமின் 'சி' அடங்கப்பெறும் பதார்த்தங்களை சேர்த்துக்கொள்வது அவசியமாகும். (250 மி. கிராம்வரை) விட்டமின் 'சி' பதார்த்தம் மனித விந்தின் செயற்பாட்டை ஊக்குவிக்க உதவுவதோடு விந்தின் மூலம் உயிரணுக்களுக்கு விளையவுள்ள பாதிப்பையும் குன்றயச் செய்கிறது. தோடை, எலுமிச்சை, தக்காளி, போன்ற கனி வகைகளில் விட்டமின் 'சி' பதார்த்தங்கள் ஏராளமாக அடங்கப்பெற்றுள்ளன.

• உங்களின் நாளாந்த உணவில் 'சிங்க்' எனப்படும் கனி உப்புக்களும் இடம்பெறுதல் அவசியமாகும். 15.மி. கிராம்வரை) விந்தின் உற்பத்திக்கு 'சிங்க்' கனியுப்பு பேருதவியாக அமையப் பெறுகிறது. இந்த சிங்க் கனிஉப்பு கொழுப்புத் தன்மையற்ற மாட்டிறைச்சியிலும், கோழி, இறைச்சி வகைகளிலும் அதிகமாக அடங்கப்பெற்றுள்ளன.

• அளவான தேகப்பியாசம் மேற்கொள்ளப்படுதல் வேண்டும். தேக அப்பியாசத்தின் மூலம் விந்துக் கோளங்களின் தொழிற்பாடுகள் எழுச்சியடைந்து வருவதாக ஆராய்ச்சிகள் கூறுகின்றன. எனினும் அளவுக்கு மீறிய அப்பியாசங்களை மேற்கொள்ளுதலாகாது.

• தொடர்ச்சியாக தேக அப்பியாசத்தில் நீங்கள் ஈடுபட்டு வருபவரானால் காபோவைதரேற்று அடங்கப் பெறும் கிழங்கு வத்தாளை போன்ற




மாப்பொருட்களை உட்கொள்ளுதல் அவசியமாகும்.

• எப்பொழுதும் சுறுசுறுப்பாக நீங்கள் செயலாற்றப் பழகிக்கொள்ளவேண்டும். மன நிலை ஆரோக்கியத்திற்கும் விந்துற்பத்திக்கும் நெருங்கிய தொடர்பு இருந்து வருவதால் சீரான மன நிலையை ஏற்படுத்திக்கொள்ள விழைதல் அவசியமாகும் என 'மென்ஸ் ஹெல்த்' என்ற சஞ்சிகை ஆலோசனை கூறியுள்ளது. ■

# காதலனை கண்டுபிடிக்க காதலி செய்த தந்திரம்

## கைமாறும் பணநோட்டில் காதல் குறிப்பு!






அமெரிக்க- தெற்கு ஃபுளோரிடா மாநிலத்தில் புளக்கத்திலிருந்த ஒரு டொலர் நோட்டுக்கள் பலவற்றில் திடீரென ஒரு வாசகம் காணப்பட்டது. "ஜோன் ஃபெர்னான்டஸ்! உன்னைச் சந்தித்த பெண்ணுடன் தொடர்பு கொள்" இவ்வாறு டொலர் நோட்டின் ஓரங்களில் எழுதப்பட்டு அத்துடன் ஒரு திகதியும் தொலைபேசி இலக்கமும் தரப்பட்டிருந்தன.

பெண் விடுத்திருக்கும் செய்தி என்றவுடன் சபல மன ஆண்கள் பலர் தொடர்பு கொண்டனர்.

குறிப்பிட்ட தொலைபேசிக்கு பல அழைப்புக்கள் வந்தன. பெற்றி ஃபௌலர் என்ற 27 வயதுப் பெண்தான் பதிலளித்தாள். மூன்று நாட்கள் அவ்வாறு அவளுடன் அதே இலக்கத்தில் தொடர்பு கொண்ட எவருடைய அழைப்பும் அவளுக்குத் திருப்தி தரவில்லை. அடுத்தநாள் தன் தோல்வியை ஏற்றுக்கொண்டு தனது நாடான இங்கிலாந்து திரும்ப பெற்றி தீர்மானித்தாள்.

நான்காவது நாள் மதியம் ஓர் அழைப்பு வந்தது. அவள் அகமும் முகமும் மலர்ந்தன. 'அவனேதான்' அவள் உள்ளத்தைக் கொள்ளை கொண்ட ஜோன் ஃபெர்னான்டஸ்தான் அவன். அவன் குரலிலேயே அடையாளம் கண்டுகொண்டாள். டொலர் நோட் மூலம் தான் விடுத்த காதல் தூது உரிய காதலனிடம் தவறாமல் போய்ச் சேர்ந்துவிட்டதால் பெரு மகிழ்ச்சியில் கூத்தாடினாள் அவள்.

அன்று மாலையே பெற்றியும் ஜோனும் சந்தித்தனர். தாங்கள் முதன் முதலில் சந்தித்து-காதல் கதை பேசி இனிய முத்தங்களைப் பரிமாறிய அதே மியாமி கடற்கரையில் இருவரும் தங்களை மறந்து சுகித்திருந்தனர். இருவரும் திருமணம் புரிந்துகொள்வதற்கான திகதியும் குறிப்பிடப்பட்டாயிற்று.

இங்கிலாந்தில் ஒரு நிறுவனத்தின் செயலாளராகப் பணிபுரியும் பெற்றி ஃபௌலர் அமெரிக்காவுக்கு உல்லாசப் பயணம் சென்றிருந்தபோது மியாமிக் கடற்கரைக்கும் சென்றாள். அங்கே ஜோன் ஃபெர்னாண்டஸ் என்ற வங்கி [illegible] கண்டாள். [illegible] காதல் கொண்டனர். ஒரேயொரு நாள் மட்டும்தான். அடுத்த நாள் பெற்றி தனது விடுமுறை முடிந்து இங்கிலாந்து திரும்பவேண்டியிருந்தது. தனது முகவரி-தொலைபேசி போன்ற விபரங்களனைத்தையும் ஜோன் கொடுத்திருந்தார். தன்னுடைய விபரங்களை வாயால் கூறினாளே தவிர பெற்றி எதனையும் ஜோனிடம் எழுதிக் கொடுக்கவில்லை.

தனது ஹோட்டலுக்குத் திரும்பிய பெற்றி அடுத்த நாள் அதிகாலையில் தனது பயணத்துக்கான ஆயத்தங்களைச் செய்தாள். புறப்படுவதற்கு சற்று முன்னர் தன் காதலர் ஜோனிடம் பிரியாவிடைகூற அவருடைய முகவரி அட்டையைத் தேடினாள். காணவில்லை. மேசையில் கிடந்த தேவையற்ற காகிதங்களுடன் ஹோட்டல் அறைத் துப்பரவுத் தொழிலாளி அதனையும் சேர்த்து அகற்றி விட்டிருந்தார். அழுத கண்களுடன் தனது பயணத்தைத் தொடர்ந்தாள் பெற்றி.

இங்கிலாந்து திரும்பியவளால் ஒழுங்காகப் பணியினைக் கவனிக்க முடியவில்லை. பல்லைக் கடித்துக் கொண்டு மூன்று மாதங்கள் வேலை பார்த்துவிட்டு ஒரேயொரு வார விடுமுறையில் அமெரிக்கா- தென் ஃபுளோரிடா சென்றாள். பல வங்கிகளிலும் இரண்டு நாட்கள் அலைந்தும் ஜோனைக் காண முடியவில்லை.

அப்போதுதான் பெற்றிக்கு ஒரு உபாயம் உதித்தது. ஒரு டொலர் நோட்டுகளாக 50 நோட்டுக்களை எடுத்து மேற்கண்ட வாக்கியத்தை எழுதினாள்.

இனி ஜோனின் கதையையும் கேட்போம்:

"நான் பெரும்பாலும் பெண்களுக்குப் பிடி கொடுத்து நடப்பவனல்ல. ஆனால் மியாமி கடற்கரையில் பெற்றியை முதன் முதலில் நான் கண்டதும் என்னை அறியாமலே அவள் பால் என் மனம் தாவியது. அவளும் நெடு நேரமாக என்னையே பார்த்துக்கொண்டிருந்தாள். முன்பு எப்போதுமே கண்டிராத எம்மிருவருக்குமிடையில் ஏதோ ஒரு வகை உறவு இருப்பது போன்ற உள்ளுணர்வு ஏற்பட்டது. இருவரும் ஒன்றானோம். ஒரே நாள் உறவுடன் பிரிய வேண்டியதாயிற்று.

அவளுடைய நினைவாகவே கடந்த மூன்று மாதங்களையும் கழித்தேன். 'இங்கிலாந்துக்காரி என்னை மறந்து-ஏமாற்றிவிட்டுப் போய்விட்டாள்' என்று எண்ணியிருக்கும்போதுதான் தற்செயலாக நான் வங்கியில் நோட்டுக்களை எண்ணிக் கணக்குப் பார்த்துக்கொண்டிருந்தபோது ஒரு டொலர் நோட்டில் பெற்றியின் 'தூது' கிடைத்தது."

இவ்வாறு ஜோன் கூறுகிறார். பிரிந்தவர் கூடினால் பேசவும் வேண்டுமா? மியாமிக் கடற்கரையே பெற்றி-ஜோனின் இன்பபுரியாகக் காட்சி அளிக்கிறது. ■

# வித்தியாசமான விமானக் கல்யாணம்

திலீப்–சுனிதா இருவரும் தங்கள் கல்யாணத்தை கல–கல கல்யாணமாக நடத்த ஆசைப்பட்டார்கள்.

"எங்கள் திருமணத்தை எல்லோர் மனமும் வியக்கும்படி செய்தால் என்ன?"

திலீப் கேட்டான். சுனிதாவுக்கும் அந்த யோசனை பிடித்துவிட்டது.

"ஓ.கே.திலீப்: என்ன செய்யலாம்?"

திலீப் யோசித்தான். திலீப்பின் தந்தையிடம் கரன்ஸி நோட்டுக்கள் கத்தை கத்தையாக இருக்கின்றன.

அதையும் எப்படியாவது செலவழிக்க வேண்டுமே?

ஐடியா உற்பத்தியானது. கல்யாணத்தை பறக்கும் விமானத்தில் நடத்த முடிவு செய்யப்பட்டது.

## பறந்தபடி கெட்டி மேளம்

திலீப்பின் தந்தையார் இந்தியரான– குவைத்தில் வாழும் தொழிலதிபர் பாப்ஸிக்கு ஒரு யோசனை வந்தது,

"மகனே ராக்கெட்டில் திருமணத்தை நடத்தினால் என்னடா?"

"முடியாதப்பா."

"ஏனடா?"

"அந்நிய செலவாணி விதிப்படி 15 இலட்சம்தான் செலவழிக்க முடியுமாம்."

மகன் திலீப் கவலையோடு சொன்னான்.

'செலவழிக்கக்கூட உரிமையில்லையா?'


தந்தைக்கு ஒரே சோகம்.

இறுதியில் விமானத்தில் திருமணம் நடந்தது.

விமானம் பறந்து கொண்டிருந்தபோது "மாங்கல்யம் தந்துனானே...." மந்திர முழக்கத்தோடு தாலி கட்டப்பட்டது.

விமானத்திற்கு ஆன செலவு 14 இலட்சம். திருமணத்திற்கு முன்பு பம்பாயில் உள்ள ஐந்து நட்சத்திர விடுதியில் 10 நாட்களாக தடபுடலான விருந்து– தினமும் சில இலட்சங்கள் இறைக்கப்பட்டன.

மண மக்களுக்கு வாங்கப்பட்ட செருப்புக்களின் விலை எவ்வளவு தெரியுமோ? அதிகமில்லை– பத்தாயிரம் ரூபாய்!



ஆடை, அணிகளுக்கு மேலும் சில இலட்சங்கள்.

இந்த 'எளிமையான' திருமணம் உலக சாதனைப் புத்தகமான கின்னஸில் இடம் பெற்றுவிட்டது.

திருமணத்தின் சிறப்பு அம்சம், ஈ.டி.வியில்– விமானத்திற்குள் நடந்த திருமணக் காட்சிகள் சுடச்சுட நேரடி ஒளிபரப்பு செய்யப்பட்டன.

துபாயில் உள்ள மக்களும் கண்ணாரக் கண்டு களித்தனர்.

அரச குடும்பத்தைச் சேராதவர்களது திருமணம் நேரடியாக ஒளிபரப்பு செய்யப்பட்டது உலகிலேயே இதுதான் முதற்தடவை.

தற்போது தேன் நிலவுக்காக தம்பதியினர் சுவிட்ஸர்லாந்துக்கு சென்றுள்ளனர்.

குஷி மூடில் இருந்த தம்பதியினர் தேன் நிலவுக்கு முன் சொன்னது இது:

"நிறைய குழந்தைகளைப் பெறப் போகிறோம். அவர்கள் அனைவருக்கும் விமானத்தில்தான் திருமணம் நடத்தப் போகிறோம்."

பணத்தை செலவழிக்கவும் வழி வேண்டும்தானே? செய்வார்கள். செய்யட்டும்.

www.padippakam.com நன்றி - நூலகத்திட்டம்

## எப்படி....எப்படி? இந்த சைக்கிள் எப்படி?



மிஞ்சிப் போனால் மூன்று பேருக்கு மேல் நம்மூர் சைக்கிள்களில் சவாரி செய்ய முடியாது. படத்தில் இருக்கிறது பாருங்கள் சைக்கிள். எவ்வித சிரமமும் இல்லாமல் ஜாலியாக 34 பேர் பயணம் செய்யலாம். வின்னிபெக் என்னும் இடத்தில் பிரமாண்ட சைக்கிளில் 34 ஆண்களும், பெண்களும் ஏறிக் காலசைக்க கிளம்பிவிட்டது சைக்கிள். மகிழ்ச்சியில் நம்மைப் பார்த்து கைகளை அசைக்கிறார்கள். தற்போதைக்கு உலகில் மிகவும் நீளமான சைக்கிள் இது மட்டும்தான். சவாரி செய்பவர்களுக்கும் பொழுது போகும். காண்பவர்களுக்கும் பொழுது போக்கும்.

ஜனரஞ்சகமான பொழுதுபோக்கு சைக்கிள்.



## வரவேற்பு

விருந்தினர்களை வரவேற்று மகிழ்ச்சியை வெளிப்படுத்தும் முறைகள் நாட்டுக்கு நாடு வேறுபடும். கை குலுக்குவது, கை கூப்பி வணக்கம் சொல்வது, அன்போடு மெல்ல கட்டி அணைப்பது என்று பல்வேறு முறைகள் இருக்கின்றன. நியூசிலாந்து நாட்டில் மோயரி என்னும் பழங்குடி மக்கள் வரவேற்பை தெரிவிக்கும் முறையே ஒரு தனிரகம். விருந்தினரைக் கண்டால் போதும் உற்சாகத்தோடு ஓடி வந்து மூக்கோடு மூக்கை உரசி வரவேற்பார்கள். ஒரு விருதாளி வரவேற்கப்படுவதுதான் 'கிளிக்' ஆகியிருக்கிறது.

## நண்பர்கள்




இந்த மாணவனின் சிறந்த நண்பன் யார் தெரியுமா?
அருகில் இருக்கும் மிஸ்டர் நாயார்தான்!
இருவரும் நீண்டதூரம் நடந்துசென்று திரும்பிவந்து கால்களை தண்ணீர் உள்ள பாத்திரத்தில் குளிர வைக்கிறார்கள். சுற்றுவதும் ஒன்றாக. ஓய்வெடுப்பதும் ஒரேவிதமாக!

## தகவல் பெட்டி



## ஒரே காம்பில் ஏழு கதிர்

தமிழ்நாட்டில் திருவள்ளூரில் உள்ள பட்டறைப் பெருமத்தூர் கிராமத்தைச் சேர்ந்த பாப்பால கோவிந்தசாமி நாயுடுவின் வயலில் விளைந்த அதிசயக் கம்பு (தானியவகை) இது. சாதாரணமாக ஒரு காம்பில் ஒரேகதிர் மட்டும்தான் விளையும். ஆனால் இந்த அதிசயக் கம்பில் ஒரே காம்பில் ஏழு கதிர்கள் விளைந்துள்ளதைப் படத்தில் காணலாம்.





## ஏன் இந்தக் கோலம்?

கமராவின் கண்களுக்குள் இந்தக்காட்சி 'லபக்'கென்று சிக்கியது ஜப்பான் தலைநகரமான டோக்கியோவில்! உலகில் மிக பிஸியான நகரங்களில் ஒன்று டோக்கியோ. சுறுசுறுப்புக்கு பேர் போன ஜப்பானில் தூங்கும் இவர்கள் சோம்பேறிகளுமல்ல, பிச்சைக்காரர்களுமல்ல! வியாபாரிகள்! உண்டகளை தொண்டனுக்குமுண்டல்லவா? இவர்களுக்கு உண்டகளையோடு உழைத்த களையும் சேர பூங்காவில் சற்றுக் கண்ணயர்ந்தார்கள். வீட்டில் போய் நிம்மதியாக சாய நேரமில்லை. உழைப்பு! உழைப்பு! உழைப்பு! வெற்றியின் இரகசியம் அதுவே. அதுசரி- தூங்குவதிலும் ஒரு நளினம் தெரிகிறதல்லவா?!

www.padippakam.com

## விஜு எங்கே?

நடிகர் விஜுசக்கரவர்த்தியை இப்போது அதிகமான தமிழ் படங்களில் காண முடிவதில்லை. காரணம் அவர் மலையாளத்தில் பிஸியாகிவிட்டார். அவரது அழுத்தமான குரலும், நடிப்பும் மலையாளப் பட இரசிகர்களுக்குப் பிடித்துவிட்டதாம். அதனால் மலையாளப் பட தயாரிப்பாளர்கள் விஜு சக்கரவர்த்தியை கெட்டியாகப் பிடித்துக்கொண்டார்கள்.

## யானை வாங்கும் நடிகை!

நடிகை பல்லவி குரங்கு வளர்த்தார், நாய் வளர்த்தார், கிளி வளர்த்தார் ஆனால் யானை வளர்க்கவில்லை. கேரளாவுக்கு சென்ற பல்லவி வித விதமான யானைகளை இரசித்துப் பார்த்தாராம். ஒரு யானை அவருக்குப் பிடித்துவிட்டதாம். எனவே விரைவில் அதனை வாங்கும் திட்டத்தில் இருக்கிறார்.

## வடிவேலுவின் யோகம்

வடிவேலுவின் காட்டில் அடை மழை. கொடுக்கும் வேடம் எதுவானாலும் பிய்த்து உதறுகிறார். அதனால் வாய்ப்புக்கள் குவிகிறது. கூடவே பணமும் குவிகிறது. சொந்தமாக பெரிய வீடு வாங்கி விருந்தார். இப்போது டாட்டா சியாரா காரும் வாங்கியிருக்கிறார்.



கமல்-ஹீரா
படம்-சதிலீலாவதி

## சர்ச்சையை கிளப்பியுள்ள சினிமா நகர்

தமிழக முதல்வர் ஜெயலலிதா திறந்து வைத்துள்ள சினிமா நகர் படப்பிடிப்புகளுக்கு எந்தளவுக்கு பயன்படப் போகிறதோ இல்லையோ சினிமா நகர் விவகாரம் ஜெயலலிதாவுக்கு எதிராக பயன்படுத்தப்படுகிறது.

சினிமா நகருக்கு எம்.ஜி.ஆர் பெயரை வைத்திருக்கலாம். அதனை சிவாஜி திறந்து வைத்திருக்கலாம் என்பது பொதுவான அபிப்பிராயம்.

விழாவுக்கு வந்திருந்த சிவாஜியை மேடைக்கு அழைத்து தமிழக முதல்வர் பாராட்டாதது குறித்தும் பலருக்கு வருத்தம்.

இதே சமயம் சமீபத்தில் தமிழக சட்டப் பேரவையில் தமிழக முதல்வர் ஒரு கேள்விக்கு பதிலளிக்கும்போது, "இனிமேல் என் பெயரை எதற்கும் சூட்டத் தேவையில்லை" என்று அறிவித்துள்ளார்.

சினிமா நகர் விவகாரத்தில் பட்ட அடிதான் ஜெயாவின் புதிய முடிவுக்கு காரணம் என்று கூறப்படுகிறது.

## யுவராணியின் தந்திரம்

கதாநாயகியாக அறிமுகமானவர் யுவராணி. 'செந்தூர பாண்டி' படத்தில் 'கபடி' விளையாட்டுக் காட்சியில் நடித்து ரசிகர்களை அதிர வைத்தவர். சகல கவர்ச்சியையும் காட்டிவிட்டதால் கதாநாயகி வாய்ப்பு கவிழ்ந்துவிட்டது. கதாநாயகியாகத்தான் நடிப்பேன் என்று அடம்பிடிக்காமல் எந்த வேடத்திலும் நடிக்கத் தயார் என்று முடிவு செய்துவிட்டார் யுவராணி. 'பாட்ஷா' படத்திலும் ரஜினிகாந்தின் தங்கையாக நடித்துக்கொண்டிருக்கிறார்.

## கிசு-கிசு நியூஸ்

### புலம்பல்

மகளிர் மட்டும் ரோகிணி நடிகை புலம்பிக்கொண்டிருக்கிறார். தமது இழுப்புக்கு உடன்படும் நடிகைகளைத்தான் பெரிய ஹீரோக்கள் சிபாரிசு செய்கிறார்களாம். திறமையை காட்டினால் யாரும் கண்டு கொள்வதில்லை என்று வருத்தப்படுகிறார். அவர் கவலை அவருக்கு!

### கோபம்

தமிழ் பத்திரிகைகள் பேட்டி கேட்டால் பிகு பண்ணுகிறாராம் சோபன நடிகை. அவுஸ்ரேலியாவில் மாப்பிள்ளை தேடிய சமாச்சாரத்தை வெளியிட்டதே பத்திரிகைகள்மீது கோபப்பட காரணமாம்.

## திறமைக்கு வேலை

சொந்தப்படம் தயாரிக்கும் எண்ணத்தில் இருந்த 'கௌ' நடிகை தற்போது அதனை கைகழுவிவிட்டு இந்தியில் பிரபலங்கள் சிலரோடு நெருக்கமாகியிருக்கிறாராம். ஏற்கனவே தமிழ் படவுலகிலும் திறமைகளை காட்ட முயன்றார். பெரிய ஹீரோக்கள் சிலர் முகத்தை திருப்பிக் கொண்டனர். அதனால்தான் இந்தியில் போய் ஜமாய்க்கப் பார்க்கிறார்.

## ஷர்மிலியின் தூது

கவர்ச்சிக் குண்டு என்று வர்ணிக்கப்பட்ட ஷர்மிலிக்கும் கவுண்டமணிக்கும் இடையே தகராறு முற்றியதும் உறவு முறிந்ததும் தெரிந்த சமாச்சாரம்.

கவுண்டமணியை வசை பாடிய ஷர்மிலி இப்போது புதிய வாய்ப்புக்கள் இல்லாமல் திண்டாடுகிறார். சமீபத்தில் ஷர்மிலி கவுண்டமணிக்கு தூது அனுப்பியதாகத் தகவல். "நடந்ததை மறப்போம். உங்களை விட்டால் எனக்கு வேறு யார் உதவ இருக்கிறார்கள்" என்று தூதுச் செய்தியில் உருகியுள்ளாராம் ஷர்மிலி. ஆனால் மணி இளகுவது மாதிரித் தெரியவில்லையாம்.

## விசுவின் வேதனை

இயக்குநர் விசு நொந்துபோய் இருக்கிறார். அவரதுபடங்கள் சமீப காலமாக அடிவாங்கிக் கொண்டிருக்கின்றன. 'வா மகனே வா' படத்தை குஷ்பூவை எடுத்து வெளியிட்டார். 'போ மகனே போ' என்றுவிட்டனர் ரசிகர்கள். "பட்டுக்கோட்டை பெரியப்பா" என்னும் படமும் சோகக் கதையாக இருக்கிறது. விசுவின் தம்பி கிஷ்மு இறந்ததுதான் விசுவின் பலவீனமாகிவிட்டதாம்.

## குஷ்பூவின் பாய்ச்சல்

ரஜினி-கமல்-பிரபு-சத்யராஜ் ஆகியோரோடு நடித்த குஷ்பு பின்னர் சரத்குமார், அர்ஜுன் ஆகியோரோடு நடித்தார். ஜெயராம், நெப்போலியன் போன்றோரோடும் நடித்துவிட்டார்.

இது பற்றி குஷ்பு சொல்லியிருப்பதாவது.

"எந்த ஹீரோவையும் நம்பி நான் இல்லை. புது நடிகை ஒருத்தி வந்துவிட்டால் பழைய ஹீரோயினை கழற்றி விட்டுவிடுவதுதான் ஹீரோ நடிகர்களின் குணம். இதனால்தான் படத்தின் ஹீரோ யார் என்று நான் பார்ப்பதில்லை. பாத்திரம் பிடித்திருந்தால் நடிக்க ஒப்புக்கொள்கிறேன்" என்கிறார் குஷ்பு. குஷ்பு சொல்வதற்குள் ஒரு வருத்தமும் தெரிகிறது.

## பாதிப்பில்லாத இருவர்

குஷ்பூ வருகையால் முன்னர் பாதிக்கப்பட்டவர்கள் கவுதமி, பானுப்பிரியா. அதுபோல் வினிதா வருகையால் பாதிக்கப்பட்ட இருவர் கனகா, கஸ்தூரி.

பாதிக்கப்படாத இருவர் ரோஜா, ரஞ்சிதா. தெலுங்கில் ரோஜா கொடிகட்டிப் பறக்கிறார். ரஞ்சிதா தனது நிபந்தனைகளைத் தூக்கியெறிவிட்டு வாய்ப்புக்களை கெட்டியாக பிடித்துக்கொள்ளத் தொடங்கிவிட்டார்.

## எப்போது டும்...டும்?

இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரகுமானின் திருமணம் எப்போது என்று எல்லோரும் கேட்கிறார்களாம். அதற்கு ரகுமான் சொல்லும் பதில் "எனக்கு ஒரு சகோதரி இருக்கிறார். அவரது திருமண முடிந்தபின்னர்தான் எனது திருமணம்" என்பதுதான் அவரது பதில்.

## இழுக்கும் மனிஷா கொய்ராலா

மணிரத்னம் இயக்கிவரும் 'பம்பாய்' படம் விரைவில் வெளிவரப்போகிறது. சத்தமில்லாமல் படப்பிடிப்பை நடத்தி முடித்திருக்கிறார். அரவிந்தசாமியோடு மனிஷா கொய்ராலா ஜோடி சேர்ந்துள்ளார்.

'1942 லவ் ஸ்டோரி' என்ற இந்தி படத்தின் மூலம் இளம் நெஞ்சங்களை கொக்கிபோட்டு இழுத்தவர் மனிஷா. 'ஏக் லட்கி கோ தேகா' பாடல் காட்சியில் மனிஷா கொய்ராலா அந்தப் படத்தில் ஒரு கலக்கு கலக்கியிருந்தார்.

இப்போது 'பம்பாய்' படத்தின் மூலம் இந்தி ரசிகர்களை மட்டுமல்ல தமிழ்ப்பட ரசிகர்களையும் கவர்ந்திழுக்கப் போகிறார்.

## சிவாஜிக்கு புகழாரம்

நடிகர் திலகம் சிவாஜி கணேசன் பற்றி விழா ஒன்றில் கவிஞர் வைரமுத்து பாராட்டிப் பேசியது இது

"சில நடிகர்களுக்கு உடல் மட்டும்தான் நடிக்கும். சிவாஜிக்கு கண், புருவம், கன்னத்து சதைகள், தலைமுடி, விரல், விரல் நகம் எல்லாமே நடிக்கும். நடிப்புக்கும் இலக்கணம் சிவாஜி. அவர் இல்லாவிட்டால் உலக சினிமா வரலாற்றில் தமிழ்பட உலகம் பற்றி தெரியாமல் போயிருக்கும். சிவாஜி அவர்கள் திரைப்பட துறையின் கலங்கரை விளக்கு."



மனிஷா கொய்ராலா
படம்-பம்பாய்

## சத்யராஜ் 125

சத்யராஜ் நடித்த முதலாவது படம் 'சட்டம் என் கையில்' (1978) 25வது படம் 'நான் மகான் அல்ல', 50வது படம் 'சபாஷ் விக்ரம்' (கன்னடம்) 75வது படம் 'விடிஞ்சா கல்யாணம்'. 100வது படம் 'வாத்தியார் வீட்டுப் பிள்ளை'. அடுத்து வெளிவரவுள்ள படம் 'எங்கிருந்தோ வந்தான்'. அதற்கு அடுத்ததாக வரப்போகும் படம் 125 படமாக இருக்கும். அது சத்யராஜ் இயக்கும் 'வில்லாதி வில்லன்'.



செந்தில்-கவுண்டமணி
படம்-லக்கிமேன்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்



## பூஜாபட் சொல்லும் யோசனை!

இந்தி நடிகை பூஜாபட் உடை விசயத்தில் தாராளமானவர். இடைக்கிடையே மனதில்பட்டதை உடைத்துச் சொல்வதிலும் தாராளமானவர். இப்போது பூஜாபட் சொன்ன தத்துவ முத்து ஒன்று "நான் செய்யும் செயல் யாரையாவது பாதித்தால் அதை நான் செய்யமாட்டேன். பாவம், புண்ணியம், சொர்க்கம், நரகம் என்பதெல்லாம் போகா ஒரு மனிதனுக்கு எதில் நம்பிக்கை இருக்கிறதோ, அதைச் செய்ய அவனை அனுமதிக்க வேண்டும். இரவில் பொழுதை அமைதியாக கழிக்க சிலருக்கு பிரார்த்தனை துணையாக இருக்கும். சில மதுவின் துணையை நாடுவோர் சிலருக்கு வேறு ஏதாவது விருப்பமாகிருக்கும். அடுத்தவனுக்கு உலைவைக்காமல் எதை செய்தாலும் சரிதான்."

பூஜாபட் சொல்வது சரிதானா?



## அதிரடியான கிசு கிசு

ஹீரோயில் இடையே வரும் கொம்பைத் தூக்கிவிட்டால் வரும் பெயரையுடைய நடிகை அவர். அந்த நடிகைக்காக சென்னை வளசரவாக்கம் பகுதியில் வீடொன்றைக் கட்டி முடித்துள்ளார் ஒரு இளம் ஹீரோ. வீடு கட்டும்போது இருந்த நெருக்கம் தற்போது இல்லையாம். காரணம் யாதெனில், அந்த நடிகை பம்பாய் சென்ற இடத்தில் தொழில் அதிபர் ஒருவரை காதலிக்கத் தொடங்கிவிட்டாராம். வீட்டைக்கட்டிவிட்டு காவல் இருக்கும் ஹீரோவுக்கு வாழ்க்கையே வெறுத்துப்போய்விட்டதாம்.

## குரல் சொந்தம்

'வீட்ல விஷேசங்க', 'பெரிய மருது' ஆகிய படங்களில் சொந்தக் குரலில் பேசாத பிரகதி, 'தாத்தா சொல்லைத் தட்டாதே' என்ற தொலைக்காட்சி நாடகமொன்றில் சொந்தக்குரலில் பேசி நடித்துள்ளார். பிரகதியின் தாய்மொழி தெலுங்கு.

## ஆடம்பர பங்களா



## நெருக்கம்

நடிகைகள் ரேவதியும், ரோஜாவிடையும் நெருக்கமான தோழிகள். 'மகளிர் மட்டும்' படத்தில் நடித்த பின்னர்தான் ...



## அடுத்தது ஒரு பிரமாண்டம்



முகப்பில்

கார்த்திக்

படம்- நந்தவன தேரு

மோகினி

படம்- வனஜா கிரிஜா

## மினிசினி

- பிரபு நடித்துவரும் 'கட்டுமரக்காரன்' படத்தில் பிரபுவுக்கு ஜோடியாக ஹேமா என்ற இந்தி நடிகை நடித்து வருகிறார். முதலில் இந்த வேடத்தில் நடிக்க இருந்தவர் இந்தி நடிகை தபு. சம்பளமாக தபு 12 இலட்சம் கேட்டதால், ஹேமாவை ஒப்பந்தம் செய்தனர்.
- சிபிமலையில் இயக்கத்தில் உருவான 'சாகரம் சாட்சி' என்ற மலையாளப் படத்தில் மம்முட்டி-சுகன்யா ஜோடியாக நடித்துள்ளனர். 'மகாநதி' படத்தில் வருவதுபோல் இறுதிக் கட்டக்காட்சியில் இளம் பெண் ஒருவருக்கு அம்மாவாக வயதான தோற்றத்தில் நடித்துள்ளார் சுகன்யா.
- முதன் முதலாக மக்கள் இயக்குநர் பிவாசுவின் இயக்கத்தில் கதாநாயகனாக சரத்குமார் நடிக்கும் படத்திற்கு 'கூலி' என்று பெயரிடப்பட்டுள்ளது. இந்தப் படத்தை 'புதிய தென்றல்' படத்தை தயாரித்த செவன்த் சனல் நிறுவனம் தயாரிக்கவுள்ளது.
- தெலுங்கில் ஜனனி என்ற பெயரில் நடித்துவரும் சிவரஞ்சனி, தெலுங்கு சுப்ரீம் ஸ்டார் சிரஞ்சீவிக்கு ஜோடியாகப் புதிய படமொன்றில் நடித்துவருகிறார்.
- பிரேம் இயக்கி, நடித்த 'வீரமணி' படத்தின் மூலம் இசையமைப்பாளராக அறிமுகமானவர் ஏகாந்தன். இவர் 500க்கும் மேற்பட்ட மேடை நாடகங்களுக்கு இசையமைப்பாளராகப் பணியாற்றியுள்ளார்.
- வேற்று மொழிகளில் வெற்றி பெற்ற படங்கள் தமிழில் மொழிமாற்றப்பட்டு வந்துகொண்டிருக்கும் நேரத்தில், தெலுங்கில் கார்த்திக்- விஜயசாந்தி நடித்து படு தோல்வியடைந்த 'சூரகாடு' என்ற படம் 'மிஸ்டர் மகாராணி' என்ற பெயரில் வெளியாகவுள்ளது.
- 'பாரிஷ்' என்ற இந்திப் படத்திற்காக அமீர் கானும், தக்மாவும் மழையில் நனைந்து ஆடிப்பாடுவது போன்ற ஒரு பாடல் காட்சியை ஒருவாரகாலமாக படமாக்கியுள்ளனர்.
- 'புன்னகை அரசி' கே.ஆர்.விஜயாவின் சகோதரி மகள் அனுஷா, 'அப்பாவுக்குக் கல்யாணம்' என்ற படத்தில் கே.ஆர்.விஜயாவுடன் இணைந்து நடிக்கிறார். இதில் இவர்கள் மாமியார், மருமகள் வேடங்களில் நடிக்கின்றனர்.
- 'ஆத்தா உன் கோவிலிலே' படத்தின் மூலம் அறிமுகமாகியவர் கஸ்தூரி. இவர் இதுவரை தமிழில் 24 படங்களிலும், தெலுங்கு, கன்னடம் ஆகிய மொழிகளில் தலா இரண்டு படங்களிலும் நடித்து முடித்துள்ளார்.



## திணறவைக்கும் சங்கவி

'ரசிகன்' படத்திற்கு பின்னர் சங்கவியை கவர்ச்சியின் உச்சத்துக்கு தூக்கிச் செல்வதில்தான் தயாரிப்பாளர்களும், இயக்குநர்களும் படு கவனமாக இருக்கிறார்கள்.

'முத்தும் குளிக்க வாரீகளா?' என்னும் படத்தில் சங்கவியால் சென்சார் அதிகாரிகள் திணறப் போகிறார்கள். ஒரு பாடல் காட்சியில் சங்கவி கொடுத்துள்ள அசைவுகள் அந்தளவுக்கு இருக்கிறதாம்.

சென்சார் மட்டும் இல்லை என்றால் சங்கவியின் அசத்தலே தனி விதமாக இருக்கும்.

## சில்க் சொல்லும் விளக்கம்

சில்க் சுமிதா தனது கவர்ச்சி பற்றி சொல்லியுள்ள கருத்து இது: "நான் கவர்ச்சி காட்டுவதற்கு தயாரிப்பாளர்களும் இயக்குநர்களும்தான் காரணம். நான் நடிச்ச படம் ஓடுகிறது. என் படம் பத்திரிகைகளில் வருகிறது. இரசிகர்கள் ஜொள்ளு விடுகிறார்கள். இவர்கள் எல்லாருந்தான் என் கவர்ச்சிக்கு காரணமே தவிர என்னை மட்டும் குறை சொல்லக்கூடாது" என்கிறார் சில்க்.

## ராதிகாவுக்கு குஷ்பூ முத்தம்

பிரபு நடிக்கும்'பெரிய குடும்பம்' படத் துவக்க விழாவுக்கு வந்திருந்த ராதிகாவுக்கு குஷ்பூ பாராட்டு மழை பொழிந்துவிட்டு போனசாக ஒரு முத்தமும் கொடுத்தார்.

'வனஜா கிரிஜா' படம் வந்த பின்னர் மீண்டும் ஒரு ரவுண்ட் வரலாம் என்று நம்பிருக்கும் குஷ்பூ மேலும் ஒரு சுற்று பருத்துள்ளார். 'நாட்டாமை' பட வெற்றியும் குஷ்புவுக்கு ஏமாற்றம்தான்.



# இதழ்களும்-விழிகளும்

## சிறக்கவும்-செழிக்கவும்

சில யோசனைகள்



ஒரு பெண்ணிற்குக் கவர்ச்சியே அவளது கண்களும், உதடுகளும்தான். கண்களைக் கவர்ச்சியாகக் காட்ட சில பிரத்தியேக குறிப்புக்கள் உள்ளன. தினமும் அடிக்கடி கண்களைக் குளிர்ந்த நீரில் கழுவ வேண்டும். கண்கள் கவர்ச்சி யாக இருக்க வேண்டுமென்றால் முதலில் புருவங்களைச் சீர்செய்ய வேண்டும். புருவங்களை மிக அடர்த்தியாகவோ மிக மெல்லியதாகவோ இல்லாமல் சீராகத் திருத்திக்கொள்ள வேண்டும். புருவங்களில் அதிக முடி இல்லாதவர்கள் தினமும் இரவில் அவற்றின்மீது தேங்காய் எண்ணெய் தடவி வந்தால், விரைவில் அடர்த்தியான புருவங்களைப் பெறலாம்.

கண்களைப் பொறுத்தவரை முதலில் 'ஐ லைனர்' மூலம் மேல் புறமும், கீழ் புறமும் தீட்டிக்கொள்ளலாம். பிறகு கண் இமைகளில் மஸ்காரா தடவலாம். இதன் மூலம் இமைகள் பெரியதாகவும், அடர்த்தி யாகவும் காணப்படும். அடுத்து கண் இமை களுக்கு மேல் 'ஐ ஷடோ' தடவ வேண்டும். இவை பலவித நிறங்களில் கிடைக்கின்றன. காலை நேரங்களில் மிகவும் வெளிறிய நிறங்களையும், மாலை மற்றும் விழா நேரங்களில் அடர்ந்த அல்லது உடைக ளுக்கேற்ற நிறங்களையோ உபயோகிக்கலாம்.

மிகவும் கவர்ச்சியாகத் தெரிய இவற் றையே மிக அழுத்தமாகவும், தங்க நிற ஐ ஷடோவுடன் கலந்தும் போடலாம்.

அடுத்தது உதடுகள். லிப்ஸ்டிக்குகள் பல நிறங்களில் கிடைத்தாலும், சருமத்திற் கேற்றபடி, உதடுகளின் நிறங்களைப்போன்று இருப்பதாகப் பார்த்து உபயோகிக்க வேண்டும். முதலில் உதடுகளைச் சுற்றி ஒரு அவுட் லைன் வரைந்து கொண்டு பிறகு, லிப்ஸ்டிக் போட வேண்டும். கவர்ச்சிக்காக சற்று அழுத்தமாகப் போட்டுக் கொள்ளலாம். இதன்மேல் 'லிப்க்ளாஸ்' தடவுவதால் லிப்ஸ்டிக் நீண்ட நேரம் கலையாமல் இருக்கும். முகத்தின் மேக்கப் முழுவதும் முடிந்ததும் அவரவர் முகத்திற்கேற்றவாறு பொட்டுக்களை வைத்துக்கொள்ளலாம்.

முக்கியமாகக் கவனிக்க வேண்டியது, இந்த லிப்ஸ்டிக், ஐ லைனர், மஸ்காரா போன்றவற்றைத் தினமும் உபயோகிப்பதைத் தவிர்க்க வேண்டும். இவற்றிற்கும் மேலாக ஒரு பெண்ணிற்குக் கவர்ச்சி என்பதே அவள் கண்களில் உள்ள குறுகுறுப்பான, கருணையான பார்வையும் இதழ்களில் தவழவிடும் லேசான புன்னகையும் தான்.

---

அட்வைஸ்

# உங்கள் குடும்ப வாழ்க்கையை மாமியார் வீட்டார் பாழடிக்காமலிருக்க......!

ராணி அக்கா

திருமணமாகி கணவனும் மனைவியும் மாமியார் வீட்டுடனிருந்தாலும் அல்லது தனிக்குடித்தனம் நடத்தினாலும் மாமியார் வீட்டினால் அனாவசியத் தொந்தரவுகள் வராமல் பாதுகாத்துக்கொள்வது அவசிய மாகும்.

பெரியவர்களுடன் தங்கியிருப்பதால் நல்ல பலனுமுண்டு; தீய விளைவுகளும் ஏற்பட இடமுண்டு. நமது நாடுகளில் மட்டும்தான் குடும்பங்களில் மாமியார் வீட்டு ஆதிக்கத் தொல்லை இருக்கிறது என்று சொல்வதற்கில்லை. மேலை நாடுகளிலும் இந்தப் பிரச்சனை இருக்கவே செய்கிறது. இதனால் புதுமணத் தம்பதி யினர் கணவன் வீடோ மனைவி வீடோ என்று தஞ்சமடைந்துவிடாமல் தனிக் குடித்தனம் நடத்துவதே சிறந்தது என்கிறார் டாக்டர் அந்தனி பியற்றோ பின்ரோ.

கணவனுடைய பெற்றோருடனோ அல்லது மனைவியினுடைய வீட்டிலோ தங்கியிருக்கும் தம்பதியினருக்கு பெற்றோரின் 'அறிவுரை'கள் சில சந்தர்ப்பங்களில் தேவை யற்றவையாக இருக்கக்கூடும். அவற்றை கணவனின் பெற்றோர் கூறும்போது மனைவி பெரும் சங்கடப்படுவார். அவ்வறிவுரை தனக்கு ஏற்றதல்ல என்று தெரிந்தாலும் கணவனின் முகத்தை முறித்துவிடலாகாதே என்று தயங்குவார். ஆனால் கணவன்மாரோ மனைவியின் பெற்றோர் கூறும் அறிவுரை தனக்கு ஏற்புடையதல்ல என்று கண்டால் தன் மனைவியிடம் எரிந்து விழுந்தே தன் கருத்தை வெளிப்படுத்திவிடுவார்.

இத்தகைய சந்தர்ப்பங்களில் கணவனும் மனைவியும் மனம் விட்டுப் பேசி ஒரு முடிவுக்கு வர வேண்டும். தங்களுக்கு ஒவ்வாத அறிவுரையாக இருந்தாலும் அதனைக் கூறுபவர்களின் வெறுப்பினைச் சம்பாதிக்காமல் காது கொடுத்துக் கேட்பது அவசியம். பின்னர் இருவரும் கலந்து பேசி தாங்களாகவே ஒரு முடிவினை எடுப்பது நல்லது.



தம்பதியினர் பெற்றோரின் பொருளாதார பலத்தில் ஒட்டிக்கொண்டிருப்பவர்களா னால் இதுவிடயத்தில் கொஞ்சம் சிக்கல்தான். இருப் பினும் தங்கள் சுய நிர்ண யத்துக்கு இடமளிப்பது பிரதானமானது.

தனிக்குடித்தனம் நடத் தும்போதும் பல பிரச்ச னைகள் தோன்றலாம். முக்கியமாக தங்கள் பொருளாதார நிலை யினை முழுமையாக மாமியார் வீட்டார் தெரிந்து கொள்ளாமல் பாதுகாப்பது அவசியம். உங்கள் பொருள் வளம் சற்று தாழ்ந்திருந்தால் தங்கள் செல்வாக்கை அவர்கள் உங்கள்மேல் திணிக்க முற்படுவார்கள்.

தனிக் குடித்தனம் நடத்தும் காலங்க ளில் மாமியார் வீட்டிலிருந்து திடீர் விருந் தாளிகள் வந்து உங்கள் அந்தரங்கங்களை அநர்த்தமாக்கி விடவும் வாய்ப்புண்டு. ஆகவே எவர் வருவதானாலும் முன்னதாகவே அறிவித்துவிட்டு வரும்படி கூறி வையுங்கள்.

தங்கள் தங்கள் பெற்றோர்மீது அலாதி யான பற்றும் பிரியமும் வைத்திருப்பது இயல்பு. ஆனால் உங்கள் வாழ்க்கைத் துணை ஐயப்படுமளவுக்கு இடம் தராமல் பார்த்துக்கொள்ள வேண்டும். தன்னைவிட தன் பெற்றோர்மீது அக்கறை அதிகம் இருக்கிறதே என்று கணவனோ மனை வியோ தன் வாழ்க்கைத் துணை மீது 'பொறாமை' கொள்ளாதிருப்பது குடும்ப நல்லுறவுக்கு இன்றியமையாதது. ■

---

# உங்கள் குழந்தைகளுக்கும் உணவில் நாட்டமில்லையா?

## -இதோ உங்களுக்கு சில ஆலோசனைகள்-

வேலைஸ் ஸ்ப்ரெச்சு



உணவில் நாட்டமற்ற குழந்தையை உணவருந்த வைப்பதென்பது பெற்றோ ருக்கு பெரும் தலையிடியைத் தோற்று விக்கும் சமாச்சாரமாக இருந்து வருகிறது. இவற்றை குறைத்துக்கொள்ளும் பொருட்டு பெற்றோர் கடைப்பிடிக்கவேண்டிய ஆலோசனைகள் கீழே தரப்படுகின்றன:

- □ குழந்தைக்கான ஆகாரங்களில் அடிக்கடி மாற்று அம்சங்களை இடம்பெறச் செய்தல் அவசியமாகும். ஒரே வகையான ஆகாரத்தை குழந்தை கள் மாத்திரமல்ல வளர்ந்தோர்கள்கூட விரும்புவது கிடையாது.
- □ ஆகாரத்தை சுவையாக தயாரித்து அளித்தலும் முக்கியமாகும். என்றாலும் கூட சுவை சேர்க்கும் பொருட்டு அளவுக்குமீறிய வாசனை மற்றும் சுவைப்பொருட்கள் உடலுக்கு தீங்கை விளைவிக்க காரணமாக அமையும்.
- □ ஒரே இடத்தில் இருந்து குழந்தைக்கு தினந்தோறும் உணவு ஊட்டுவதை தவிர்த்து வெவ்வேறு இடங்களில் அமர்ந்தோ, அல்லது நின்றோ ஆகாரத்தை ஊட்டுவது அவசிய மாகும். குழந்தைகளும் இவற்றை பெரிதும் விரும்புவார்கள். மாற்றுச் சூழலில் குழந்தைகள் ஆகாரத்தை விரும்பி உண்பது அவர்களுக்கு இயல்பான செயலாகும்.
- □ உணவு நாட்டம் குறைந்த குழந்தையின் உணவு விடயத்தில் நாம் காட்டும் கரிசனையை அவர்களிடம் வெளிக் காட்டலாகாது. அவற்றைப்போல் அவர்களை வற்புறுத்தி உணவருந்தச் செய்தலும் கூடாது.
- □ உணவில் நாட்டம் குறைந்த குழந்தை களுக்கு விட்டமின் சிரப், டொனிக் போன்றவைகள் அநேகமாக அவசிய மற்றதாகும். உடலுக்கு தேவையற்ற விட்டமின் பதார்த்தங்கள் கழிவுப் பொருளாக வெளியே தள்ளப்படு கின்றன என்பதை நாம் அறிந்து வைத்திருத்தல் முக்கியமாகும். ●

---

# ஒன்றில் இல்லாத சில





இந்த இரண்டு படங்களும் ஒரேவிதமாகத் தோன்றினாலும் பத்து வித்தியாசங்கள் இருக்கின்றன. நீங்கள் கண்டுபிடிக்கும் வித்தியாசங்களை வட்டக் குறியீட்டால் குறித்துவிட்டு, சரிபார்க்க பக்கம் 15க்குச் செல்லுங்கள்.

---

## சமைப்போம் சுவைப்போம்

தொகுத்துத் தருவது—சுகந்தினி

### இத்தாலி கோல் ஸோன்ஸ்

**தேவையானவை:**

மா- 2 கப்
தயிர்- 1/2 கப்
அப்பச்சோடா- 1/2 தேக்கரண்டி
எண்ணெய்- 2 தேக்கரண்டி
உப்பு- அளவாக
பொரிப்பதற்கு எண்ணெய்- தேவையான அளவு
வெஜிட்டபிள் கலவைக்கு
தக்காளி-2
பெரிய வெங்காயம்-2
கத்தரிக்காய்-2
உருளைக்கிழங்கு-4
மல்லி இலை- சிறிது
மிளகுத்தூள்- 2 தேக்கரண்டி
உப்பு-அளவாக

**செய்முறை:**

மாவில் தயிர், எண்ணெய், அப்பச் சோடா, உப்பு, தண்ணீர் சேர்த்து சப்பாத்தி மாவுப் பதத்தில் பிசைந்து கெட்டியாக்கிக் கொள்ள வேண்டும். சுமார் ஆறுமணிநேரம் ஊறவைக்கவேண்டும். பின்பு சிறு உருண்டை களாகச் செய்துகொள்ள வேண்டும்.

உருளைக்கிழங்கை வேக வைத்து உரித்து நன்கு பிசைந்து கொள்ளவேண்டும். கத்தரிக்காயை நறுக்கி எண்ணெயில் சிவக்க வறுத்துக்கொள்ளவேண்டும். அத்துடன் நறுக்கிய தக்காளி, வெங்காயம், மல்லி இலை, உப்பு, மிளகுத்தூள் போட்டு மசித்த உருளைக் கிழங்கைச் சேர்த்துக் கிளறி, கலவை தயார் செய்து கொள்ள வேண்டும். மாவு உருண்டைகளைச் சிறு சிறு சப்பாத்திகளாக உருட்டி நடுவில் மேலே உள்ள கலவையை வைத்து இரண்டாக மடித்து கலவை வெளியே தெரியாமல் மூடி எண்ணெயைக் கொதிக்க வைத்து அதில் போட்டுப் பொரித்து, பொன்னிறமாக வந்தவுடன் எடுக்கவேண்டும். ●

---

யார் அந்த 50 அதிஷ்டசாலிகள்?

# முரசின் பரிசு

தினமுரசு நடத்தும் பரிசுப் போட்டி.

* 50 பேர் அதிஷ்டசாலிகளாகத் தெரிவு செய்யப்படுவார்கள்.

முரசின் பரிசு
கூப்பன் இல 20
உண்மை—நேர்மை—
வெளிப்படைத்தன்மை

* பெண்கள் மட்டுமே பங்கு கொள்ள முடியும்.
* பரிசுக் கூப்பன்களை 1-25 வரை பத்திரமாக சேர்த்து வைக்க வேண்டும்.
* நாம் அனுப்பச் சொல்லும் போது 25 கூப்பன்களையும் அனுப்பி வைக்கலாம்.
* மிக்ஸி- ரைஸ் குக்கர்கள்-இட்லி குக்கர்கள், கைக் கடிகாரங்கள், நவீன ரக இல்லப் பொருட்கள் என்பன பரிசுகளாக வழங்கப்படவுள்ளன.
* இன்றுமுதல் கூப்பன்களை சேகரிக்க ஆரம்பியுங்கள். உங்கள் அதிஷ்டத்தைப் பரிசீலிக்கலாமே.

---

சிலேடை கேளுங்கோ


# கொய்யாப்பழமே சுவை!

தமிழறிஞர் கி.வா. ஜகநாதன் சில அன்பர்களுடன் பேசிக்கொண்டிருந்தார். அப்போது ஒருவர் கொய்யாப் பழம் வாங்கிக்கொண்டு அங்கு வந்தார். அதைக்கண்ட கி.வா.ஜ. "எந்தப் பழத்திலும் கொய்யாப்பழமே சுவையுடையது" என்றார்.

"ஏன், மாம்பழம், பலாப்பழம், வாழைப்பழம் என்று முக்கனிகள் சுவையில்லையா?" என்று கேட்டார் ஒரு அன்பர்.

"அவையும் சுவைதான்" என்றார் கி.வா.ஜ.

"அப்படியானால் கொய்யாப்பழம் மட்டும் சுவையுடையது என்று கூறினீர்களே, அதன் காரணம் என்ன?"



என்றார் அன்பர்.

"நான் இந்தக் கொய்யாப்பழத்தைச் சொல்லவில்லை. எந்தப் பழமானாலும் கொய்த பழத்தைவிட கொய்யாத பழமே சுவையுடையது என்றேன். அதாவது தானே முதிர்ந்து உதிர்வதனால் சுவை அதிகமாக இருக்கும்" என்று விளக்கினார் கி.வா.ஜ.


www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தேன் கிண்ணம்

## இனியும் இந்தப் போர்...!

இனியும்
இந்தப்
போர்
போகாது
போனால்...!
□□
மனித
உடல்கள்
விறகுக்
கட்டைகளாய்
வீதியெங்கும்
விழுந்து கிடக்கும்!
மண்டையோடுகள்
சிரட்டைத்
துகள்களாய்
சிதறிக் கிடக்கும்;
நெருக்
குழிகளில்
குருதி தேங்கும்!
□□
எரிந்த
நகரங்கள்,
சரிந்த
கோபுரங்கள்,
சாம்பல்
மேடுகளில்
புதைந்து கிடக்கும்!
□□
அருவிகளின்
இசையும்
குருவிகளின்
பாஷையும்
ஆயுதக்
கருவிகளின்
அலறல்களில்
அடங்கிப்
போகும்!
□□
போரின்
கரும்புகை
கறுப்பு மேகமாய்
வானில் மிதந்து
சூரிய
ஒளியின்
வழியினைத்
தடுக்கும்!
பகல் என்பது
பழங்கதையாகி
இரவென்பதே
நிரந்தரமாகும்!
□□
பசுந்தரைகளும்
பயிர் நிலங்களும்
அமில மழையால்
அழிந்து போகும்!
□□
பறவை இனங்கள்
பள்ளியெழுச்சி
பாட மறந்து
முகாரிகளையே
முணுமுணுக்கும்!
□□
போரின்
வெப்பத்தால்
பொசுங்கியோர்
போக
எஞ்சிய
கொஞ்சப்பேர்
ஊனமுற்றும்
ஊணுமற்றும்
பிணி பிடித்தும்
பித்தர்களாகவும்
பிதற்றித் திரிவர்!

ரேணுகா நிபாய்தீன்
ஏறாவூர்.



□□

## நீ போதும் எனக்கு!

ஓயா துன் நினைவுகள்
ஓங்கி யெழுந்தென் நெஞ்சில்
தேயாத பிறை போலாகி
தேங்கி யெழுந்தெ ன்றும்
சாயாத மலையாக ஒரு
சாதனை படைக்குதடி! பெருந்
தீயாக எரிந்து நெஞ்சை
தினம் தினம் கொல்லுதடி!

மாறாத காதல் கொண்டேன்
மங்கையுன் மீதில் நீயும்
பாராது போனா யென்றால்
பார் மீதில் வாழேன்! ஓர் நாள்
ஊரார் மெச்சும் வண்ணம்
உன்னையே நான் மணப்பேன்!
நேராக என்னைப் பார்த்து
நீ கொஞ்சம் சிரித்துப்போடி!

மீன் விழிகள் நீ சிமிட்ட ஓர்
மின்னல் வெட்டியதோவென்று
நான் பயந்தே போனேனடி!
நாற்குணமும் நற்பண்பும்
வான் போன்ற உன் மனமும்
வடிவழகே நான் பெற்றால்
ஏன் எனக்குச் சீதனங்கள்?
ஏந்திழை நீயே போதுமடி!

நாரனையூரான்
கே.கனகராஜா.



## இதற்குக்கூட......

என் கனவை
யார்
களவாடியது.........?
என்
இரத்தில்
ஒண்டிக்கொண்டிருந்த
அந்த
ஒற்றைக் கனவை
எங்கே
ஒளித்து வைத்துள்ளீர்கள்?
••
யாராவது
உண்மையை
உச்சரிக்கமாட்டீர்களா?
••
பறி போய்விட்டது
இருந்த
எல்லாமே..........!
இழந்தாகிவிட்டது
இந்தக்கனவு
கூடவா..?
ஓ...
சரண்டைப்பட்ட
சுதந்திரத்தின்
முழு
சூட்சுமத்தையும்
சுமந்த நினைவுகளுடன்
பேச்சற்று
நிற்கின்றேன்.
••
கல்லறை
மண்ணில்
கட்டப்படவில்லை.........!
இப்பொழுதுதான்
புரிகிறது
அது
வாழ்வின் தளங்களில்தான்
இது காலமும்
வடிவமைக்கப்பட்டு
வந்திருக்கிறதென்று!
••
என்
கனவை யார்
களவாடியது.....?
••
இனியம்
இங்கு
பயந்து பயந்து
சுவாசத்தை
நுரையீரல்களுக்குள்
இழுத்துக்கொண்டிருப்பதில்
அர்த்தமே
இல்லை
அதனால்_
••
என் கனவின்
கதறல் எங்கோ
காற்றுடன்
காது வைத்துப் பேசுகிறது.
அங்கே அது
கழுத்து நெரிபட்டு
கண்கள் பிதுங்கி
நாக்குத்தள்ளி...
••
வெறிகொண்டு
வெருண்டு
ஓடுகிறேன்
நான்
வேண்டுவனவெல்லாம்
என்
இறுதிக் கனவும்
அதன் மூச்சும்...
••
எல்லாமே
என்
கைக்கெட்டாத
தூரத்தில்...
••
என் கனவை
யார்
களவாடியது?
கதறிக்கதறி
அழுகிறேன்
கண்களில்லாத
குழிகளில்
கண்ணீர்
ஊற்றெடுக்கிறது.


கிண்ணியா-சபறுள்ளா.



## மௌனமாய்!

மலரோடு
நறுமணம்
மௌனமாய்!
••
காற்றோடு
அவள்
தாவணி
மௌனமாய்!
••
விளக்கோடு
விட்டில்
மௌனமாய்!
••
பாலைவனப்
பட்டுவிரிப்பில்
ஒட்டகம்
மௌனமாய்!
••
அந்தியில்
கடலோரச்
சந்திப்பில்
சூரியன்
மௌனமாய்!
••
நெற்றியில்
வியர்வையின்
அபிநயம்
மௌனமாய்!
••
அவள்
கூந்தலில்
சிலந்திக்கூடு!
••
இவன்
மனசில்
சிக்கல்
மௌனமாய்!

ஷஹிர்ஷா தாஸிம்–தர்கா நகர்.



## குழந்தை மனம்!

எனக்குப்
பிறந்த நாள்!

அம்மா
அரபு மண்ணில்....
இரண்டு வருடமாய்
'ஆயா' வேலையில்!

இங்கே
'ஆயா' ஒருத்தி
எனக்கு 'அம்மா'வாய்!

வருகின்ற
என் பிறந்த நாளுக்கு
யாராவது
பரிசாகக்
கொண்டு வாருங்கள்;
'தாய்ப் பாசத்'தை

கோவுஸ்ஸ ராம்ஜீ
எல்ல.

## அமாவாசை!

இரவிற்காய்—
நிலவிடும்
யுத்த நிறுத்தம்!

## பனித்துளி...

இரவு...
மென்று விழுங்காத
எச்சில்!

## உயிர்!

உடலுக்கு...
எழுதப்பட்ட
உயில்!

## மரம்

இயற்கையின்
கைக்குட்டைகள்!

வி.சுதாகர்
அக்கரைப்பற்று–08.

## கத்தரித்த கடி ஜோக்ஸ்



அவர்: நாம் நம் சுற்றத்தாரை நேசிக்க வேண்டும் என்று என் மகனிடம் சொன்னது தப்பாப் போச்சு.
நண்பர்: ஏன்? என்னாச்சு?
அவர்: பக்கத்து வீட்டுப் பெண்ணை காதலிக்கிறானாம்.

□□

நிருபர்: இதுக்கு முன்பு நீங்கள் எந்த கட்சியில் இருந்தீர்கள்?
அரசியல்வாதி: இப்படி மொட்டையா கேட்டா எப்படி? எந்த தேதியில், எத்தனை மணிக்கென்று கேளுங்க..!

□□

நிருபர்: உங்கள் படம் தேசிய விருது வாங்கியிருப்பது பற்றி என்ன நினைக்கிறீர்கள்?
இயக்குநர்: அதுதாங்க எனக்கும் புரியவே மாட்டேங்குது!

□□

அவர்: அலுவலகத்திற்கு லேட்டா வந்தவரை மனேஜர் ஏன் பாராட்றாரு?
மற்றவர்: வழக்கமாக 12 மணிக்கு வர்றவர் இன்னைக்கு 11 மணிக்கு வந்ததும் மனேஜர் உணர்ச்சிவசப்பட்டுட்டாரு!

□□

கணவர்: எங்கே தெரிஞ்சிடுமோன்னு பயமா இருக்கு?
மனைவி: அப்படியென்ன தப்பு செய்தீங்க?
கணவன்: கடுகு டப்பாவில் இருந்து உனக்கு தெரியாம இருபது ரூபாய் எடுத்துவிட்டேன்!

### நோ கொமன்ற்ஸ்






## இந்த வாரம் உங்கள் பலன்

(18.12.94 முதல் 24.12.94 வரை)

சோதிட மாமணி
'தில்லை'

### மீனம்: சுப நேரம்

(பூரட்டாதி, நாலாங்கால், உத்திரட்டாதி, ரேவதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் மந்தம், செய்தொழில் நட்டம். | காலை 10 மணி |
| திங்கள்- | பொருள் இழப்பு, குடும்பக் கலகம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | பயனற்ற செயல், மனக்கவலை. | காலை 7 மணி |
| புதன்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 8 மணி |
| வெள்ளி- | வெளியிடப் பிரயாணம், பெரியோர் உதவி. | காலை 6 மணி |
| சனி- | தொழில் விருத்தி, செலவு மிகுதி. | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்-9

### மேடம்: சுப நேரம்

(அச்சுவினி, பரணி, கார்த்திகை முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் இழப்பு, செய்தொழில் நட்டம். | காலை 7 மணி |
| திங்கள்- | உயர்ந்த நோக்கம், மன மகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தூர இடப் பயணம், கௌரவம். | காலை 6 மணி |
| புதன்- | முயற்சி பலிதம், வரவுக்கு மிஞ்சிய செலவு. | காலை 7 மணி |
| வியாழன்- | துன்பம் நீங்கும், உயர்ந்த வாழ்வு. | பி.ப. 1 மணி |
| வெள்ளி- | உறவினர் பகை, மனக் கசப்பு. | காலை 8 மணி |
| சனி- | வெளியிட வாழ்க்கை, வீண் மனஸ்தாபம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-5

### இடபம்: சுப நேரம்

(கார்த்திகைப் பின்முக்கால், ரோகிணி,மிருகசீரிடத்துமுன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, மனப் பூரிப்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- | வீண் வாக்குவாதம், மனக் கலக்கம். | பி.ப. 1 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | பெரியோர் நட்பு, முயற்சி பலிதம். | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பொருள் பேறு, கௌரவம். | பி.ப. 2 மணி |
| வெள்ளி- | இடமாற்றம், வீண் பகை. | காலை 7 மணி |
| சனி- | உறவினர் உதவி, மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம்-4

### மிதுனம்: சுப நேரம்

(மிருகசீரிடத்துப் பின்னரை, திருவாதிரை, புனர்பூசத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் வரவு, தொழில் சிறப்பு. | பகல் 12 மணி |
| திங்கள்- | பயனற்ற செயல், இடமாற்றம். | காலை 7 மணி |
| செவ்வாய்- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | காலை 9 மணி |
| புதன்- | பயனுள்ள செயல், செலவு மிகுதி. | காலை 10 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனப் போராட்டம். | பகல் 12 மணி |
| வெள்ளி- | கௌரவக் கேடு, கடன் பயம். | காலை 6 மணி |
| சனி- | துன்பம் நீங்கும், செய்தொழில் வெற்றி. | பி.ப. 2 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-8

### கும்பம்: சுப நேரம்

(அவிட்டத்துப் பின்னரை, சதயம், பூரட்டாதி)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | துன்பம் நீங்கும், மனக்கவலை மறையும். | காலை 6 மணி |
| திங்கள்- | செய்தொழில் இலாபம், வீண் மனஸ்தாபம். | காலை 9 மணி |
| செவ்வாய்- | தொழில் கேடு, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| புதன்- | மனக்குழப்பம், குடும்பப் பிரச்சனை. | காலை 7 மணி |
| வியாழன்- | தனலாபம், உறவினர் பகை. | காலை 10 மணி |
| வெள்ளி- | அந்நியர் உதவி, அதிகார விருத்தி. | பகல் 12 மணி |
| சனி- | எடுத்த கருமம் வெற்றி, அற்ப சுகம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்- செவ்வாய், அதிஷ்ட இலக்கம்-1

### நவக்கிரக சஞ்சாரம்

| | |
|---|---|
| தனு | - சூரியன், புதன் |
| கும்பம் | - சனி |
| மேடம் | - கேது |
| சிம்மம் | - செவ்வாய் |
| துலாம் | - வெள்ளி, இராகு |
| விருட்சிகம் | - வியாழன் |

★ சந்திரன்– மிதுனம், கர்க்கடகம், சிம்மம் ஆகிய இராசிகளில் சஞ்சரிப்பார் ★

### கர்க்கடகம்: சுப நேரம்

(புனர்பூசத்து நாலாம் கால், பூசம், ஆயிலியம்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 6 மணி |
| திங்கள்- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | அந்நியர் நட்பு, சந்தோஷ நிலை. | காலை 10 மணி |
| புதன்- | குடும்ப சுகம், சுபகாரிய மகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | வீண்குறை கேட்டல், கடன்தொல்லை. | பகல் 12 மணி |
| வெள்ளி- | மனக்கலக்கம், செலவு மிகுதி. | பி.ப. 2 மணி |
| சனி- | ஆடம்பரச் செலவு, கௌரவம். | காலை 6 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 3

### மகரம்: சுப நேரம்

(உத்தராடத்துப் பின்முக்கால், திருவோணம், அவிட்டத்து முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, மனக்குறை நீங்கும். | காலை 6 மணி |
| திங்கள்- | பெரியோர் பகை, தொழில் கேடு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| புதன்- | அந்நியர் சகவாசம், அதிகார விருத்தி. | பி.ப. 1 மணி |
| வியாழன்- | மறைமுக எதிர்ப்பு, கௌரவக் கேடு. | காலை 7 மணி |
| வெள்ளி- | வீண் குறை கேட்டல், பொருட் செலவு. | பகல் 12 மணி |
| சனி- | தொழில் சிறப்பு, பொருள் விரயம். | காலை 8 மணி |

அதிஷ்டநாள்- திங்கள், அதிஷ்ட இலக்கம் -2

### சிம்மம்: சுப நேரம்

(மகம், பூரம், உத்தரத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | பகல் 12 மணி |
| திங்கள்- | அந்நியர் பகை, மனக் கலக்கம். | காலை 6 மணி |
| செவ்வாய்- | துயர் நீங்கும், மனமகிழ்ச்சி. | பி.ப. 1 மணி |
| புதன்- | வீண் மனஸ்தாபம், முயற்சி தோல்வி. | காலை 7 மணி |
| வியாழன்- | புதிய முயற்சி, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | பெரியோர் நட்பு, கௌரவம். | காலை 7 மணி |
| சனி- | செலவு மிகுதி, பொருள் விரயம். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-வியாழன், அதிஷ்ட இலக்கம்-4

### தனு: சுப நேரம்

(மூலம், பூராடம், உத்தராடத்து முதற்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் நன்மை, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| திங்கள்- | துன்பம் நீங்கும், பொருள்வரவு. | காலை 6 மணி |
| செவ்வாய்- | மனக்குறை நீங்கும், காரியானுகூலம். | பி.ப. 1 மணி |
| புதன்- | காரியசித்தி, பொருள்பேறு. | பி.ப. 2 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, மனமகிழ்ச்சி. | பகல் 12 மணி |
| வெள்ளி- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 7 மணி |
| சனி- | மனமகிழ்ச்சி, வெளியிட வாழ்க்கை. | பி.ப. 1 மணி |

அதிஷ்டநாள்-புதன், அதிஷ்ட இலக்கம் -3

### விருட்சிகம்: சுப நேரம்

(விசாகத்து நாலாங்கால், அனுஷம், கேட்டை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தூரஇடப் பயணம், செலவு மிகுதி. | காலை 6 மணி |
| திங்கள்- | செய்தொழில் நட்டம், மனக் கவலை. | பகல் 11 மணி |
| செவ்வாய்- | அந்நியரால் தொல்லை, பதவியிழப்பு. | காலை 7 மணி |
| புதன்- | வீண் குறை கேட்டல், மனக் குழப்பம். | காலை 10 மணி |
| வியாழன்- | தனலாபம், செலவு மிகுதி. | பகல் 11 மணி |
| வெள்ளி- | துன்பம் நீங்கும், பணக்கஷ்டம் மறையும். | காலை 6 மணி |
| சனி- | பெரியோர் சகாயம், காரிய சித்தி. | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-வெள்ளி, அதிஷ்ட இலக்கம்-4

### துலாம்: சுப நேரம்

(சித்திரையின் பின்னரை, சுவாதி, விசாகத்து முன் முக்கால்)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | தொழில் சிறப்பு, முயற்சி பலிதம். | காலை 8 மணி |
| திங்கள்- | மனக்குறை நீங்கும், பணவரவு. | பகல் 12 மணி |
| செவ்வாய்- | இடமாற்றம், குடும்ப சுகம் பாதிப்பு. | காலை 6 மணி |
| புதன்- | தனலாபம், குடும்பசுக நன்மை. | பகல் 11 மணி |
| வியாழன்- | வெளியிட வாழ்க்கை, செலவு மிகுதி. | காலை 6 மணி |
| வெள்ளி- | துன்பச்சுமை அதிகம், உறவினர் தொல்லை. | காலை 7 மணி |
| சனி- | பெரியோர் நட்பு, துயர் நீங்கும். | பகல் 12 மணி |

அதிஷ்டநாள்-செவ்வாய், அதிஷ்ட இலக்கம்- 7

### கன்னி: சுப நேரம்

(உத்தரத்துப் பின்முக்கால், அத்தம், சித்திரையின் முன்னரை)

| | | |
|---|---|---|
| ஞாயிறு- | பொருள் இலாபம், மன மகிழ்ச்சி. | காலை 6 மணி |
| திங்கள்- | பயனுள்ள செயல், கௌரவம். | பகல் 12 மணி |
| செவ்வாய்- | புதிய முயற்சி, மனக் குறை நீங்கும். | பி.ப. 2 மணி |
| புதன்- | எதிர்பார்த்த வெற்றி, பொருள் விரயம். | காலை 7 மணி |
| வியாழன்- | பெரியோர் நட்பு, செய்தொழில் இலாபம். | காலை 6 மணி |
| வெள்ளி- | தொழில் விருத்தி, பொருள் இலாபம். | பகல் 12 மணி |
| சனி- | மனக்குறை நீங்கும், உயர்ந்த நோக்கம். | காலை 7 மணி |

அதிஷ்டநாள்-திங்கள், அதிஷ்ட இலக்கம்- 5





## சூரியன்

கிழக்கு வானில் சூரியன்
உதித்து மேலே வருகிறான்
வழக்கம் போல பூமிக்கு
ஒளியைத் தந்து மகிழ்கிறான்

பயிர்கள் நன்றாய் வளரவே
மழையும் வெய்யிலும் தருகிறான்
உயிரினங்கள் எல்லாமே
உவக்க உதவி புரிகிறான்

பகல் பொழுது வருகையில்
வானின் நடுவில் நிற்கிறான்
வெயில் தந்து பொருட்களை
விரைவில் காய வைக்கிறான்

அந்தி நேரம் வந்ததும்
மேற்கில் சென்று மறைகிறான்
தீயைப் போன்ற கதிரவன்
காலை மீண்டும் உதிக்கிறான்

புனிதா இரங்கசாமி-டெமோரியா-பசறை.

"எண்ணிய முடிதல் வேண்டும்
நல்லவே எண்ணல் வேண்டும்;
திண்ணிய நெஞ்சம் வேண்டும்,
தெளிந்தநல் லறிவு வேண்டும்."
-சுப்பிரமணிய பாரதியார்-

## பாப்பா முரசு சிறுகதை

# தகுதி யாருக்கு?



மனிதர்களைப் படைத்த பிரம்ம தேவன், அவர்கள் வாழ்வதற்காகப் பூமியையும் படைத்தார். அதைப் பார்த்துப் பொறாமையடைந்த அரக்கர்கள் பிரம்ம தேவனிடம் சென்று, "பூமியை மனிதர்களுக்குக் கொடுக்கக்கூடாது, எங்களுக்கே கொடுக்க வேண்டும்," என்று முறையிட்டனர்.

அதைக்கேட்ட பிரம்மதேவன் சிரித்துக் கொண்டே, "கொடுக்கிறேன்! அதற்கு முன்னால் உங்களுக்கும், மனிதர்களுக்கும் ஒரு சோதனை வைப்பேன். அதில் யார் வெல்லுகிறார்களோ அவர்களுக்கே பூமியைக் கொடுப்பேன்," என்றார்.

அரக்கர்களும் அதற்குச் சம்மதித்தனர்.

ஒருநாள் பிரம்ம தேவன், மனிதர்களையும் அரக்கர்களையும், தன்னுடைய சத்திய லோகத்திற்கு வரும்படி அழைத்தார். இரு குழுவினரும் அங்கே சென்றனர். முதலில் ஒரு கூடத்திற்கு அரக்கர்கள் அழைத்துச் செல்லப் பட்டனர்.

அடுத்து, மணி அடித்ததும் சோதனை ஆரம்பமானது. அரக்கர்கள் அனைவரும் எதிரெதிராக இரண்டு வரிசைகளில் அமர வைக்கப் பட்டனர். பிறகு அவர்களுக்கு இலைபோட்டு, அதில் பழங்கள் வைக்கப்பட்டன. பின்னர் நீளமான கட்டைகளும், கயிறுகளும் கொண்டுவரப்பட்டன.

அரக்கர்கள் குழப்பமாக அவற்றைப் பார்த்தார்கள். உண்ணுவதற்கு பழங்கள் வைக்கப்பட்டிருக்கின்றன. அப்படியிருக்கும்போது, இந்தக் கயிறுகள் கட்டைகளும் எதற்கு? என்று நினைத்தனர்.

அப்பொழுது பிரம்ம தேவனின் ஆட்கள் சிலர் வந்து அந்தக் கட்டைகளை எடுத்து அரக்கர்களின் இரு கைகளில் வைத்து, கைகளை நீட்டவும் முடியாமல், மடக்கவும் முடியாமல் அந்தக் கயிற்றால் கட்டினர். பிறகு அவர்கள் சென்றுவிட்டனர். சிறிது நேரத்திற்குப் பின் வந்த பிரம்ம தேவன்,

"அரக்கர்களே! இப்பொழுது இலைகளில் வைக்கப்பட்டிருக்கும் பழங்களை உண்ணுங்கள்" என்றார்.

அரக்கர்களின் கைகள் நீட்டவும் முடியாமல், மடக்கவும் முடியாமல் கட்டப்பட்டிருப்பதால், அந்தப் பழங்களை கைகளால் எடுத்து உண்ண முடியாமல் மிகவும் கஷ்டப்பட்டனர். எவ்வளவோ முயன்றும் அவர்களால் முடியவில்லை. அப்பொழுது போட்டி நேரம் முடிந்ததற்கு அடையாளமாக மணி ஒலித்தது.

அரக்கர்கள் தோல்வியோடும், வெட்கத்தோடும் பந்தியை விட்டு எழுந்து சென்றனர்.

அடுத்து அந்த கூடத்திற்குள் மனிதர்கள் அழைத்து வரப்பட்டு, எதிர் எதிராக இரண்டு வரிசைகளில் அமர வைக்கப்பட்டனர்.

அரக்கர்களுக்கு நடந்தது போலவே, மனிதர்களுக்கும் இரு கைகளும் நீட்ட முடியாமல், மடக்க முடியாமல் கட்டை வைத்துக் கட்டப்பட்டன. பிறகு, அவர்களுக்கு எதிரே இலைகளில் வைக்கப்பட்டிருந்த பழங்களைச் சாப்பிடுமாறு உத்தரவிடப் பட்டது.

மனிதர்கள் பழங்களை எப்படி உண்ணப் போகிறார்கள்? என்பதை அறிய அரக்கர்கள் ஆவலோடும், பரபரப்புடனும் வெளியிலிருந்து பார்க்கத் தொடங்கினார்கள்.

கட்டுப்பட்டுள்ள கைகளினால் பழத்தை எப்படி எடுத்து உண்பது? என்று சிந்தித்த ஒரு மனிதனுக்கு 'பளிச்'சென்று ஒரு யோசனை தோன்றியது. தன் முன்னால் இலையில் வைக்கப்பட்டிருந்த பழத்தைத் தன் வாயினால் கவ்வி எடுத்து எதிர்திசையில் அமர்ந்திருக்கும் மனிதனின் வாயருகே நீட்டினான். உடனே, அந்த மனிதன் அந்தப் பழத்தைக் கொஞ்சம் கொஞ்சமாக கடித்துச் சாப்பிட்டான். அவன் சாப்பிட்டு முடிந்த பிறகு, அவன் தன் இலையில் வைக்கப்பட்டிருந்த பழத்தைத் தன் வாயினால் கவ்வி எடுத்து முதலாமவனிடம் நீட்ட, அவன் அதைக் கடித்துச் சாப்பிட்டான்.

அவனைப் பார்த்து மற்ற மனிதர்களும் அப்படியே செய்தனர். சிறிது நேரத்தில் இலையில் இருந்த அனைத்துப் பழங்களும் முடிந்துவிட்டன.


இவற்றை எல்லாம் பார்த்துக்கொண்டிருந்த அரக்கர்கள், அடடே இந்த விஷயம் எமக்குத் தெரியாமல் போய்விட்டதே, என்று எண்ணி வருந்தினார்கள்.

அப்பொழுது பிரம்ம தேவன் வெளியில் வந்து,

"அரக்கர்களே! பார்த்தீர்களா மனிதர்களின் அறிவை? இத்தகைய அறிவும், ஆற்றலும் மிக்கவர்கள் மனிதர்கள்தான். இப்பூமியில் வாழ, இவர்கள் தகுதி பெற்றவர்களா? அல்லது நீங்கள் தகுதி பெற்றவர்களா? என்பதை நீங்களே இப்பொழுது சொல்லுங்கள்," என்றார் பிரம்ம தேவன்.

"மனிதர்கள் தான்" என்று சொல்லிய அரக்கர்கள் அமைதியாக வெளியேறிச் சென்றார்கள்.

## எண்ணெய்க் கப்பல் (சுப்பர் டாங்கர்)



- 'டாங்கர்' என்றால் என்ன?
  எண்ணெய் கப்பல்களை 'டாங்கர்' என அழைப்பார்கள். இவற்றில் தானியம், இரசாயனப் பொருட்கள், நிலக்கரி ஆகியவற்றையும் ஏற்றிச் செல்லலாம்.
- 'சுப்பர் டாங்கர்' என்றால் என்ன?
  மிகப்பெரிய எண்ணெய் கப்பலுக்கு 'சுப்பர் டாங்கர்' என்று பெயர். இதில் மிக அதிகளவில் சுத்திகரிக்கப் படாத எண்ணெயை ஏற்றிச் செல்லும் வசதி உள்ளது.
- மிகப் பெரிய 'சுப்பர் டாங்கர்' எப்படி இருக்கும்?
  நீளம் 458 மீற்றர், அகலம் 69 மீற்றர். இதில் 55 கோடி கிலோ கிராம் எண்ணெயை எடுத்துச் செல்லலாம்.
- இதன் பயன்கள் என்ன?
  துறைமுகத்தில் ஒரே கப்பலிலிருந்து நிறைய எண்ணெயை இறக்குவதைவிட அதிக கப்பல்களில் இருந்து எண்ணெயை இறக்குவதால் அதிக செலவு ஏற்படும். அதனால் 'சுப்பர் டாங்கர்' ஒன்றைப் பயன்படுத்தினால் செலவு குறையும்.
- இதில் உள்ள குறைகள் என்ன?
  'சுப்பர் டாங்கர்' வேகமாகச் சென்று கொண்டிருக்கும்போது அதைத் திடீரென நிறுத்த முடியாது. 5 கிலோ மீற்றர் தூரம் சென்று, பிறகுதான் நிற்கும். விபத்து ஏற்பட்டு நிலத்தில் இந்தக் கப்பல் மோதினால் அதிலிருந்து தெறிக்கும் எண்ணெயால் நிலப்பகுதியில் பரவலாகப் பெரும் பாதிப்பு ஏற்படும். இதனால் சுற்றுப் புறச் சூழல் மாசடையும்.

## சிறந்த வர்ணத்திற்குப் பரிசுதரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி 24.12.1994.

வர்ணம் தீட்டும் போட்டி இல: 70
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.

### வர்ணம் தீட்டும் போட்டி இல. 67

**பரிசுக்குரியவர்**
செல்வன். இப்திகார் இஸ்மாயில், கடுகஸ்தோட்டை.

**பாராட்டுக்குரியவர்கள்:**

மொஹமட் வசீம் மஹ்ரூப்
அல்/ஹம்ரா மகாவித்தியாலயம், கண்டி.

ஜெ.ஜெனிட்டா-மாதா கோயிலடி-திருகோணமலை.

ந.சந்திரகுமார்-சிவானந்தா தேசிய பாடசாலை, மட்டக்களப்பு.

மூர்த்தி பிரசன்னாத்-அர்ச். மரியாள் தமிழ் மகாவித்தியாலயம் எட்டியாந்தோட்டை.

ராஜரட்னம் ராஜகணேசன்-கொத்தனி பாடசாலை, இறம்பொடை.

ஏ.டபிள்யூ.எம்.சப்ரான்- கொட்டருமுல்லை.

## இவர்கள் யார்?

- வில்லியம் ஷேக்ஸ்பியர் உலகின் தலைசிறந்த ஆங்கில நாடகாசிரியர்.
- கிரிஸ்டியன் பெர்னாட் இருதய மாற்று சத்திர சிகிச்சையை முதன் முதலாக செய்த உலகப்புகழ் பெற்ற டாக்டர்.
- தொலமி முதன் முதலில் திருந்திய சிறந்த உலகப்படத்தை வரைந்தவர்.
- நீல் ஆம்ஸ்ரோங் சந்திரனில் முதலில் காலடி வைத்தவர்.
- வலண்டினா திரஸ் கோவா விண்வெளியில் பூமியை வலம் வந்த முதலாவது பெண்.
- கோட்ஸே மகாத்மா காந்தியை சுட்டுக்கொன்றவன்.
- றொபர்ட் யாவிக் பிளாஸ்டிக்காலான செயற்கை இருதயத்தைக் கண்டுபிடித்தவர்.
- பிக்காஸோ நவீன ஓவியங்களின் தந்தை
- கொலம்பஸ் புதிய உலகத்தை (அமெரிக்கா) கண்டுபிடித்தவர்.
- அலக்சாண்டர் பாக்கர் பிளாஸ்டிக்கை கண்டுபிடித்தவர்
- மார்க்கோனி வானொலியைக் கண்டு பிடித்தவர்.
- அன்டன் லாவோசியர் பிராண வாயுவைக் கண்டறிந்த விஞ்ஞானி.
- சேர் ஃபிரான்ஸிஸ் கால்டன் இன்றைய விரல் அடையாள முறையைக் கண்டுபிடித்தவர்.

என்.எம்.பாஸீல்-மதீனா தேசிய பாடசாலை-சியம்பலாகஸ்கொடுவ.

## விடுகதைளும் விடைகளும்

01. வாரி வழங்கும் செல்வம், வாழ வைக்கும் செல்வம். அது என்ன?
02. புத்தாண்டில் புகுந்த விருந்தாளி தங்குவதோ ஓர் ஆண்டு, அவன் யார்?
03. பூமியிலே பிறந்தவன். புகையாகிப் போவான், அவன்யார்?
04. உயிரில்லாத நீதிபதி. உரிய தீர்ப்பு வழங்குவார். அவர் யார்?
05. அச்சு இல்லா சக்கரம் அழகு காட்டும் சக்கரம். அது என்ன?

**விடைகள்**

01. கல்வி 02. கலண்டர் 03. பெற்றோல் 04. தராசு 05. வளையல்

செல்வி.எஸ்.செந்தமிழ்ச் செல்வி
தமிழ் கலவன் பாடசாலை- மா/ எல்கடுவ.

01. நாம் அவளை வைத்திருப்போம். அவள் நம்மை வைத்திருக்க மாட்டாள். யார் அவள்-
02. வட்டமாக இருக்கும்- நிலா அல்ல. ஆயிரம் கண்கள் உண்டு- நட்சத்திரமல்ல. அது என்ன?
03. குற்றம் செய்யாத வெள்ளயனை கூட்டில் அடைப்பார்கள். யார் அவன்?
04. கையில்லாமல் அடிக்கும். கால் இல்லாமல் ஓடும். அது என்ன?
05. உயிருக்காக அழுவான். உலகுக்காக அழுவான். தனக்காக அழமாட்டான். அவன் யார்?
06. பாலிலும் இது உருவாகும். நூலிலும் இது உருவாகும். அது என்ன?
07. எழுத்துக்கள் நான்கு. எரித்தால் சாம்பலாகும். முதல் எழுத்தை எடுத்தால் அது கறியாகும். அது என்ன?


**விடைகள்**

01. பேனை 02. அரிபெட்டி 03. கடிதம் 04. அலை 05. மழை 06. ஆடை 07. சிகரட்

ஏ.எச்.எம். நஜ்மில்-சரஸ்வதி மத்திய மகாவித்தியாலயம், பதுளை.

## பச்சோந்தியின் வேகம்

ஓணான் வகையில் ஒன்று பச்சோந்தி. இது மிகவும் அதிசயப் பிறவி. பூச்சி, புழுக்களை விரைவாகவும், எளிதாகவும் பிடித்துத் தின்பதற்கு ஏற்ப இதன் உடல் உறுப்புகள் அமைந்துள்ளன. இதன் இரு கண்களும் ஒரே சமயத்தில் வெவ்வேறு திசைகளைப் பார்க்கக்கூடியவை. ஒரு கண் மேலே நோக்கும்போது மற்றொரு கண் இடது புறம் பார்த்துக்கொண்டிருக்கும்.



இதன் நாக்கு பசைபோன்றது. மிகவும் நீளமானது. இதனை நன்கு மடித்து வாய்க்குள் வைத்திருக்கும். ஆனால் மிக வேகமாக நாக்கை வெளியே நீட்டி மடக்கும் திறன் உடையது. ஒரு பச்சோந்தி 62 வினாடிகளில் 8 வெட்டுக்கிளிகளை விழுங்கியதை விஞ்ஞானிகள் பார்த்துள்ளனர்.

பாப்பா முரசுக்கு- உங்கள் ஆக்கங்கள் வரவேற்கப்படுகின்றன.
எழுதுங்கள். இதோ முகவரி-
பாப்பா முரசு
தினமுரசு வாரமலர்
த.பெ.இல. 1772
கொழும்பு.



அற்புதன்

## சிந்திக்கலாம் இங்கே

அளவுக்கு மிஞ்சினால் அமுதமும் நஞ்சாகி விடுகிறது.

ஆசைகளுக்கும் அது பொருந்தும். ஆசையே துன்பங்களுக்கு காரணம் என்ற கருத்தோடு கை கோர்த்துக் கொள்வதாக நினைக்க வேண்டாம்.

விமானத்தைக் கண்டுபிடித்த விஞ்ஞானிகளுக்கு ஆசை அவிந்து போயிருந்தால் இன்று விரைவான போக்குவரத்து சாதனத்தை நாம் பெற்றிருக்க முடியாது.

அவளவு ஏன்? பனை ஓலைக்கு பதிலாக பளிச்சென்று புரியக்கூடிய அச்சமைப்பில் ஆக்கங்களை தரும் இன்றைய முன்னேற்றத்திற்கும் யாரோ ஒருவரது ஆசைதானே அடித்தளமானது.

ஆனால், ஆசைகள் அடுத்தவர்மீது அழுத்தும் பாரங்களாகிவிடக்கூடாது.

பாரங்களாகிவிட்டால் அழுத்தப்படுகிறவர் எதிர்த்துப் போராட நினைப்பர். அழுத்துகிறவரும் போராட வேண்டிவரும்.

போராட்டத்தின் முடிவில் இருவரில் ஒருவர் தோல்வி கண்டேயாக வேண்டும்.

அநேகமாக அழுத்துகிறவர்தான் தோல்வியடைய வேண்டியிருக்கும்.

எந்தத் தாக்கத்திற்கும் மறு தாக்கம் உண்டு என்பதுதானே இயற்கை விதி.

நியாயத்தின் விதியும் அதுதான்.

தோல்வி கண்டவர் சோகம் தாளாமல் ஆசைகள் ஒழிக என்று அறிவுரை சொல்லத் தொடங்கிவிடுகிறார்.

ஆடி அனுபவித்து ஓய்ந்தபின்தான் அருணகிரிநாதருக்கு பெண்கள் மீதிருந்த பிடிப்பு தறிக்கப்பட்ட மரமாய் முறிந்து போனது.

ஆணுக்கும் பெண்ணுக்கும் இடையில் உள்ள ஈர்ப்பு என்பது ஆதாம் ஏவாள் காலத்தில் இருந்தே ஆரம்பமான அற்புதம்!

அதுவே மனித வாழ்க்கைக்கான உந்து விசைகளில் ஒன்றாகவும் இருந்து வருகிறது- ஒப்புக்கொள்ளப்படுகிறது.

ஆணும் பெண்ணும் ஆசைகளைத் துறந்து தவமிருக்கத் தொடங்கிவிட்டால் மனித குலம் வாழும் வரத்தை இழந்து விடும்.

அடுத்த தலைமுறை என்ற பேச்சுக்கே இடமிருக்காது.

ஆக, ஆண்மீது பெண்ணும் பெண் மீது ஆணும் ஒருவருக்கொருவர் ஈர்க்கப்படுவது இருந்தேயாக வேண்டும்.

'காதல் இன்றேல் சாதல்' என்ற பாரதி காதலை அளவோடு அனுபவித்தவன்.

பசியெடுக்கிறதே என்பதற்காக புசித்தால் புழுத்துச் சாகவைக்கும் கனிகளை நாடியவனல்ல.

அதனால்தான் கடைசிவரை காதல் நாகரிகமானது என்ற கருத்தை பாரதியால் காப்பாற்ற முடிந்தது.

அருணகிரிநாதர் அப்படியல்ல.



பிரேமானந்தா

தாகம் எடுத்தபோதெல்லாம் அவருக்கு தண்ணீர் தேவைப்பட்டது.

அது சாக்கடையில் இருந்தாலும் சரி சந்தனப் பொய்கையில் இருந்தாலும் சரி எடுத்து அருந்திக்கொண்டார்.

அதுதான் ஒரு கட்டத்திலே அவருக்கு குமட்டிக்கொண்டு வந்துவிட்டது.

சாக்கடைத் தண்ணீர்மீது காட்ட வேண்டிய கோபத்தை அருந்த உகந்த தண்ணீர்மீதும் காட்டிவிட்டார்.

அருணகிரிநாதர் மட்டுமல்ல சில சித்தர்களும் அப்படித்தான் அறிவுரை சொல்லிவிட்டு அமரராகிவிட்டார்கள்.

இப்போது பிரபலமாகியிருப்பவர் பிரேமானந்தா சுவாமி.

இந்தச் சாமிகள் பற்றிய மாயைகளில் இருப்பவர்களுக்கு அவரது வெட்ட வெளிச்சமாகிவிட்ட லீலைகள் குண்டு வெடிப்பால் ஏற்படும் அதிர்ச்சி மாதிரி அமைந்துவிட்டன.

பிரேமானந்தா சாமியும் ஒரு மனிதர் தான் என்று பார்த்தால் அவரது பலவீனத்தையும்-பலத்தையும் எடை போட இயலும்.

திவ்யாதேவியை அவர் பலவந்தம் செய்யவில்லை விரும்பித்தான் உடல் பரிமாற்றம் நடந்திருக்கிறது. அது இருவரதும் தனிப்பட்ட அந்தரங்கம்.

ஆனால், சாமியார் என்பதனால் கிடைத்த சமூக அங்கீகாரத்தை அதிகாரபலமாக மாற்றிக்கொண்டு சில பெண்களோடு, அவர்கள் விருப்பத்திற்கு மாறாக தனது ஆசையை அழுத்தம் செய்ததுதான் கண்டிக்கப்படவேண்டியது.

கண்டிக்கப்படவேண்டியது மட்டுமல்ல; உறுதியாகத் தண்டிக்கப்படவும் வேண்டிய வக்கிரம் அது.

உடல் பசிக்கு ஒத்துழைக்க மறுத்தவர்களை வயிற்றுப் பசிக்குள்ளாக்கி பிரேமானந்தா நடத்திய வேட்டை விதிவிலக்களிக்கப்படமுடியாத விபரீதம்.

பூஜையின் பெயரால் பெண்களை குளிக்கவைத்து படம் எடுத்து இரசித்த வக்கிரம் வீரிய மனிதனுக்குரிய ஆசையல்ல.

காட்டுமிராண்டித்தனத்தின் கடைசி எல்லைவரை செல்ல வசதியாக காவிப் போர்வைக்குள் புகுந்த மிருகம் ஒன்று அதனால் அழுத்தப்பட்டவர்களால் அடையாளம் காட்டப்பட்டிருக்கிறது.

ஆசைகளின் உந்துதலே காமம். விருப்பமான பரிமாற்றமே சுகம். அது பலாத்காரமானதாகிவிட்டால் முடிவு சோகமாகும்.

சாமியாருக்கு இருந்தது ஆசையல்ல- அடங்காத வெறி!

அவரது காமம் காதல் இல்லாதது. காட்டுமிராண்டித்தனமே முழுவதுமாக இருந்த காமம் அது.

அந்தக் காட்டுமிராண்டித்தனம் தான் அவரை இப்போது சிறையில் கம்பி எண்ணவைத்திருக்கிறது.

சாமி இப்போதும் குற்றங்களை மறுத்துக்கொண்டிருக்கிறார்.

அரசியல்வாதிகள் உதவி செய்வார்கள் என்று அவர் நம்பிக்கொண்டிருக்கிறார்.

அதனாலீதான் பட்ட பின்னரும் ஞானம் வரவில்லை.

சில அரசியல்வாதிகள் தாமும் திருந்த மாட்டார்கள். திருந்த நினைப்பவர்களையும் விடமாட்டார்கள்.

ஆனாலும் பிரேமானந்தாவும் ஒரு கட்டத்தில் தன்னையே வெறுத்து ஆசையே கூடாது என்று உபதேசம் செய்யக்கூடும்.

அதனை ஞானம் என்று நாம் நம்பிவிடக்கூடாது. பேராசையால் அவர் புரண்ட இடங்களில் இருந்து எழும் நாற்றமும் நோயும் ஏற்படுத்தும் குமட்டலால் வந்த வெறுப்பு.

நாம் எதையும் அளவோடு ஆசைப் படப் பழகிக்கொள்வோம்.

அடுத்தவரை எம் ஆசைக் கயிற்றால் கட்டிப்போட்டு கஷ்டப்படுத்தாமல் பார்த்துக்கொள்வோம்.

எனவே-முடிவு, ஆசை கூடாதென்பதல்ல, ஆசைக்கும் எல்லை உண்டு என்பதை மறக்கக்கூடாது என்பதுதான்!

## தேடல்........!

'ஒன்றின் இழப்பை இன்னொன்று பூர்த்தி செய்துவிடும்,' என்ற-எப்போதோ படித்த சிறுகதை ஒன்றின் முடிவை இப்போது ஞாபகப்படுத்திப் பார்க்கிறேன்... உண்மைதான். ஒன்றின் இழப்பை இன்னொன்று பூர்த்தி செய்துவிடும்.

கையில் சிகரெட் சுட்ட 'புண்'ணைப் பார்க்கிறேன்...

கொஞ்ச நாட்களாகத் தொடர்ந்து வலித்துக் கொண்டிருந்தது.

இப்போது புதுப்புண்....! பழைய புண் உள்ளாறி விட்டது.

இப்படித்தான்.

தன் அதிகபட்ச அழகுகளால், என்னை ஆக்ரமித்த என் முதலாவது காதலி றிரோஸா....

பிறகு,

சின்னக் குயில் சில்மி!

றிரோஸாவை நான் அடியோடு மறந்து விட்டதாக என் நண்பர்களிடம் அடிக்கடி சொல்லி வருகிறேன்.... சில்மியின் சிநேகத்தை நிறுத்தி விட்டதாக அழுது வழிகிறேன்—

எனக்கும் ஒரு கனவு இருந்தது.

அது-

என்னை— என் கவிதையை... நேசிக்கும் ஒரு கலைக்குயிலோடு இணைந்து... பறந்து.... இலக்கியச் சோலைக்குள் ஒன்றாகக் கூவ வேண்டும் என்று.

எனக்கும் ஒரு கனவு இருந்தது.

அது- கனவாகவே இருந்துவிட்டது.

'வெறும் கற்பனை வாழ்க்கையல்ல!'- மக்கள் வங்கி.

'கடலிலே ஒரு மீனா இருக்கு'-லொட்ஜ்.

'ஒரு பஸ் போனா இன்னொரு பஸ்'- புடவைக் கடை.

காதலிக்கப் படலாம். ஆனால் காதலிக்கக்கூடாது!' ஜப்பான் டெக்.

முறையே, அமீர்டீன்... ஜபீர் மெய்யன்... அல்ஜ அவ்வப்போது என் காதல் படும் அவஸ்த்தைகளுக்கு ஆறுதல் ஒத்தடமிட... வாழைத்தோட்ட வஸீரும்.... டாம் வீதி ராஸிக்கும் அதற்கு ஒத்தூத நாளொரு கடிகமும் பொழுதொரு கவிதையுமாக என் காதல்(கள்.) வளர்ந்து தேய்ந்து...



—குயில் ரசிகன்—

இரண்டு காதலுமே இதயங்கூடவில்லை. நான் என்னைத் தொலைத்து விட்டேன். தேடிக்கொண்டிருக்கிறேன். பழைய என்னையும்...புதிய வாழ்க்கையையும்..!

இனி-

நான் நேசிப்பவளைவிட... என்னை நேசிப்பவளைத்தான் நான் நேசிக்க வேண்டும்.... ஒரு இரசிகை எனக்கு எழுதி இருந்தாள் இப்படி: 'நம்மை நினைக்காதவர்களை நாம் ஏன் நினைக்க வேண்டும்?'

ஒரு மனிதனுடைய வாழ்க்கை அவனுடைய- வாலிபத்திலிருந்துதான் ஆரம்பிக்கின்றது. அந்த வயதில் அவன் எடுக்கின்ற கல்யாண முடிவில்தான்... அவனுடைய சந்தோஷமோ, துக்கமோ ஆரம்பிக்கின்றது...

அதோ...அந்த 'மூன்றாம் பிறை'யின் புன்னகையில் மிதந்து வந்துகொண்டிருக்கிறதே.... அது என்ன..?

சந்தேகமே இல்லை- நிச்சயமாக அது சந்தோஷம்தான்! முட்களில் நடந்து வந்த இந்தப் பாதங்களை... இந்தப் புதிய பூ...அர்ச்சித்துவிட்டது!

காயம்பட்ட இந்த மனசு இனிக் காலத்தை வெல்லத்தான் போகின்றது..!

ரோசா வாடிவிட்டது..

குயில் ஓடி விட்டது...

இந்த 'மூன்றாம் பிறை'தான் இனி என் இதய வானில் ஒளிவீசப் போகும்... வளர்ந்து வரும் முழு நிலவு!



### கண்டுபிடித்தது சரிதானா?

வட்டக் குறியீடுகளால் காட்டப்பட்டிருப்பதுதான் 10 வித்தியாசங்கள். என்ன, உங்கள் பார்வைக்கூர்மை சரிதானா? அப்படியானால் முதுகில் ஒரு ஷொட்!

மர்மக் கதைப்பிரியர்களுக்கு இனிப்பான செய்தி
அடுத்த வார
முரசில்
புதிய மர்மத் தொடர்!

திடுக்........ திடுக்
திருப்பங்களுடன்
காதல் ரசம் கலந்த தொடர்
மகா சூலம்
-எழுதப்போவது -

தமிழகத்தின் பிரபல
எழுத்தாளர்!
எழுத்து நடையை வைத்து
யார் அவர்?
என்று கண்டுபிடிக்கும் வாசகர்களுக்கு
சிறப்பு பரிசுகள்
வழங்கும் திட்டம்
தவறவிடாதீர்கள்!
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

## பேனா நண்பர் அரங்கம்



- ஆர். றொஹான்
- 74/3, விவேகானந்த மேடு, கொழும்பு-13.
- வானொலி, தொலைக்காட்சி, கதை, கவிதை வாசித்தல்.



- எம். அஜீம்
- 19
- 39, தர்மலிங்கம் வீதி, வவுனியா.
- பத்திரிகை, வானொலி, பேனா நட்பு.



- எஸ். சுதர்சினி
- 18
- வி.சி. றோட், தம்பிலுவில்.
- புத்தகம் வாசித்தல், பேனா நண்பர் தொடர்பு.



- எம். சி. மன்சூரா
- 'மன்சூரா மன்சில்', தண்ணீர்தாங்கிவீதி, புதிய காத்தான்குடி.
- வழமையான பொழுதுபோக்குகள்.



- ஆனந்தம்
- 35
- AL- HUDA ENGINEERING P.O.BOX. NO- 17015 DOHA, QATAR.
- பத்திரிகை, தொலைக்காட்சி.



- எம். கமால்டீன்
- 31
- P.O.BOX NO- 55068, CODE NO- 54561, SABAHIYA, KUWAIT.
- வானொலி, பத்திரிகை, பேனா நட்பு.

## கடிகாரப் போட்டி

சுவிஸில் உள்ள ஐக்கியத்தை விரும்புவோர் நடத்திய கடிகாரப் போட்டியில் பரிசு பெற்றோர் விபரம்:

01. திரு.ம.செல்வநாயகம்
சக்கடத்தார் வீதி, களுவாஞ்சிக்குடி.
02. திரு.எம்.எஸ்.எம்.சறூக்
228, தில்லையடி, புத்தளம்.
03. திருமதி. ஆர்.விக்கினேஸ்வரி
பூந்தோட்டம் அ.த.க.பாடசாலை வவுனியா.
04. செல்வி.ரி.உமேஷ்வரி
கஸ்தூரி லேன், கலஹா.
05. கா.தெய்வேந்திரராசா
162, கோவில் வீதி, வீரமுனை-02.
06. எஸ்.முரளீதரன்
வித்தியாலய வீதி, திருகோணமலை.
07. பி.பரமேஸ்வரன்
புதுரோட்,உப்புக்குளம், மன்னார்.
08. எஸ்.எமிலின்ஸ்
இல.8 B6, குருநகர்,யாழ்ப்பாணம்.
09. திருமதி.ஏ.ஜெயந்தி
அரிவத்த ரோட்,வத்தளை.
10. வி.தஜானி
தர்ஷினி கிளினிக்,வாழைச்சேனை.

100 ஆறுதல் பரிசுகள் வழங்க உதவிய நடராசா அன் கோ (நியூ ஏசியன் ஷொப்) சுவிஸ், லவினா எண்டர் பிரைஸ்பேர்ண், சுவிஸ் ஸ்தாபனத்தாருக்கு— எமது நன்றி! நன்றி!!

சுவிஸிலுள்ள ஐக்கியத்தை விரும்புவோர்

www.padippakam.com
நன்றி - நூலகத்திட்டம்

# தாய்

## மக்சீம் கார்க்கி

4




“நீ எப்போது பார்த்தாலும் எதையோ படித்த வண்ணமாயிருக்கிறாயே? அதைத்தான் கேட்க எண்ணினேன்” என்று அமைதியாகச் சொன்னாள் அவள்.

அவன் புத்தகத்தை மூடினான்.

“உட்கார், அம்மா!”

அவனது தாய் சிரமப்பட்டுக் கீழே உட்கார்ந்து, முதுகை நிமிர்த்தினாள்; ஏதோ ஒரு முக்கிய விஷயத்தைக் கேட்பதற்குத் தன்னைத் தயார்ப்படுத்திக்கொண்டாள்.

பாவெல் அவளைப் பார்க்காமலேயே பேச ஆரம்பித்தான்; அவனது குரல் தணிந்திருந்தபோதிலும், அது ஏனோ உறுதி வாய்ந்ததாக இருந்தது.

“நான் தடை செய்யப்பட்ட புத்தகங்களைப் படிக்கிறேன். இவை ஏன் தடை செய்யப்பட்டிருக்கின்றன, தெரியுமா? இவை நம் போன்ற தொழிலாளரைப் பற்றிய உண்மையைச் சொல்லுகின்றன. இவையெல்லாம் இரகசியமாக யாருக்கும் தெரியாமல் அச்சிடப் பெறுகின்றன. இந்தப் புத்தகங்களோடு, அவர்கள் என்னைக் கண்டுபிடித்தால் என்னைச் சிறையில்தான் போடுவார்கள். சிறையில் தான்! ஏன் தெரியுமா? நான் உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேனே, அதனால்தான். புரிந்ததா?”

திடீரென அவளுக்கு மூச்சு முட்டியது. அவள் தன் கண்களை அகலத்திறந்து, மகனைப் பார்த்தாள். அவன் ஒரு அன்னியன்போலத் தோன்றியது அவளுக்கு; அவனது குரல்கூட மாறிப்போயிருந்தது; அந்தக் குரலில் ஆழமும் அழகும் செழுமையும் நிறைந்து இருப்பதாகத் தோன்றியது. அவன் தனது அரும்பு மீசைய்யத் திருகினான்; குனித்து நின்ற புருவங்களுக்கு மேலாக, ஒரு மூலையை வெறித்துப் பார்த்துக்கொண்டிருந்தான். அவள் தன் மகனைக் கண்டு பயந்தே போனாள்; மகனுக்காகப் பரிதாபப்பட்டாள்.

“நீ ஏன் இப்படிச் செய்கிறாய், பாஷா?” என்று கேட்டாள்.

“ஏன் என்றால்-நான் உண்மையைத் தெரிந்துகொள்ள விரும்புகிறேன்!” என்று அவன் அமைதியாகவும் தெளிவாகவும் சொன்னான்.

அவனது குரல் மிருதுவாக இருந்தது. எனினும் உறுதி வாய்ந்திருந்தது. அவனது கண்களில் அசைவற்ற ஒரு ஒளியும் நிறைந்திருந்தது. தன் மகன் ஏதோ ஒரு பயப்படக்கூடிய, இரகசியமான காரியத்துக்குத் தன்னைப் பரிபூரணமாக அர்ப்பணித்துவிட்டான் என்ற உணர்ச்சி அவளது இதயத்தில் கிளர்ந்தது. வாழ்க்கையில் எதுவுமே தடுக்க முடியாதவை தாம் என்றே அவள் கருதினாள்; எனவே அதைப்பற்றி அவள் மேலும் கேட்காமல் அடங்கிப் போனாள். துன்பமும் துக்கமும் இதயத்தை அழுத்த, வார்த்தையின்றி அமைதியாக அழுதாள் அவள்.

“அழாதேயம்மா” என்று அன்பும் ஆதரவும் நிறைந்த குரலில் சொன்னான் பாவெல்; ஆனால் அவளுக்கோ அவன் பிரிவதற்கு விடை பெறுவது போலத் தோன்றியது.

“நாம் எந்த மாதிரி வாழ்கிறோம் என்பதைக் கொஞ்சமாவது எண்ணிப்பார், அம்மா. உனக்கு நாற்பது வயதாகிறது. இதுவரை நீ என்னத்தைக் கண்டுவிட்டாய்? அப்பா உன்னை அடித்தார்- அவரது தொல்லைகளையெல்லாம்- வாழ்வின் கசப்பையெல்லாம்- உன்னையடிப்பதன் மூலம் அவர் தீர்த்துக்கொண்டார் என்று இப்போது உணர்கிறேன் நான். கசப்புணர்ச்சிதான் அவரை ஆட்கொண்டிருந்தது. ஆனால் இந்த மாதிரிக் கசப்பும் தொல்லையும் எங்கிருந்து வருகின்றன என்பதை அவர் அறிந்துகொள்ளவே இல்லை. அவர் முப்பது வருஷகாலமாய் உழைத்தார்; இந்தத் தொழிற்சாலை இரண்டு கட்டிடங்களாக இருந்த காலத்திலிருந்து அவர் வேலை பார்த்தார். இப்போதோ அவை ஏழு கட்டிடங்களாகப் பெருகி விட்டன.”

அவன் சொல்வதை ஆர்வத்தோடும் பயத்தோடும் அவள் கேட்டாள். மகனின் கண்கள் அழகாகப் பிரகாசித்துக்கொண்டிருந்தன. தன் மார்பை மேஜையின்மீது சாய்த்தவாறு, கண்ணீர் படிந்து ஈரம் பாய்ந்த அவளது முகத்துக்கு நேராகக் குனிந்து, தான் புரிந்து கொண்டுள்ள உண்மையைப் பற்றி பிரசங்கத்தைத் தொடங்கினான் பாவெல். இளமையின் முழுப் பலத்தோடும், மாணவன் ஒருவனது அறிவின் அகந்தையோடும் உண்மையின் மீதுள்ள பரிபூரண விசுவாசத்தோடும், தனக்குத் தெள்ளத் தெளிவாகத் தெரிந்த விஷயங்களைப் பற்றி அவன் பேசினான். தாய்க்காகப் பேசியதை விடத் தன்னைப் பரீட்சித்துக்கொள்ளவே அவன் பேசினான். சில வேளைகளில் அவன் வார்த்தைகள் கிடைக்காமல் பேச்சை நிறுத்தினான்; அப்போது கண்ணீர்த் திரைக்கு அப்பால் ஒளி செய்யும் அன்பான கண்களைக் கொண்ட தன் தாயின் வேதனை நிறைந்த முகம் தன்னெதிரே இருப்பதை உணர்ந்துகொண்டான். அந்தக் கண்கள் அவனைப் பயத்தோடும் வியப்போடும் பார்த்தன. அவனோ தன் தாய்க்காக அனுதாபப்பட்டான்; மீண்டும் பேச ஆரம்பித்தான். இப்போது, அவன் அவளைப் பற்றியும் அவளது வாழ்வைப் பற்றியுமே பேசினான்.

“இதுவரை நீ என்ன சுகத்தைத்தான் அனுபவித்திருக்கிறாய்? நீ சிந்தித்து மகிழ்வதற்கு சென்றுபோன உன் வாழ்க்கையில் என்ன இருக்கிறது?” என்று கேட்டான்.

அவள் கேட்டுக்கொண்டிருந்தாள், தலையை மட்டும் சோர்வாய் ஆட்டினாள். இதுவரை அறியாத புதுமையான உணர்ச்சி, இன்பமும் துன்பமும் கலந்த ஏதோ ஒரு உணர்ச்சி தனது நொந்துபோன இதயத்துக்குள் குடிபுகுந்து அதை இதப்படுத்திச் சுகமூட்டுவதுபோல அவளுக்குத் தோன்றியது. அவளைப் பற்றியும் அவளது வாழ்க்கையைப் பற்றியும் யாரேனும் பேசுவதைக் கேட்பது, இதுதான் அவளுக்கு முதல் தடவை. மகனது வார்த்தைகள் அவளது மங்கி மக்கிப்போன பழைய நினைவுகளை, எந்தக் காலத்திலேயோ செத்தொழிந்து தேய்ந்துபோன பழைய இளமைக்கால சிந்தனைகளை நினைவுக்குக் கொண்டு வந்தன. வாழ்க்கையின் மறைந்துபோன மங்கலான அதிருப்தி உணர்வுகள் மீண்டும் ஞாபகத்துக்கு வந்தன. அப்போது அவள் தன் தோழிமாரோடு வாழ்க்கையைப் பற்றி, அனைத்தையும் பற்றி எவ்வளவோ பேசியிருக்கிறாள். ஆனால் அவளது தோழிகளும், ஏன் அவளும்கூட, தங்களது வாழ்க்கையின் துன்ப துயரங்களைப் பற்றிக் குறை பட்டுத்தான் பேசிக்கொண்டார்களே யன்றி, அதற்குரிய காரணத்தை ஆராய முனையவில்லை. ஆனால், இப்போதோ அவளது மகன் அவளெதிரே உட்கார்ந்திருந்தான். அவனது கண்களும் முகமும் பேச்சும் வெளியிடுவதெல்லாம் அவளது இதயத்தின் அடித்தளத்தையே தொட்டன. தன் தாயின் வாழ்க்கையை நன்றாகப் புரிந்து, அவளது துன்ப துயரங்களைப்பற்றி அவளிடமே அனுதாபத்தோடு பரிந்து பேசும் தன் மகனைக் கண்டு அவளது மனதில் பெருமை உணர்ச்சி நிரம்பித் ததும்பியது.

ஆனால் தாய்மார்கள் என்றும் அனுதாபத்துக்குரியவராகவே ஆவதில்லை.

அதுவும் அவளுக்குத் தெரியும். அவன் பெண்களின் வாழ்க்கையைப் பற்றிச் சொன்னவை அனைத்தும் கசப்பான, எனினும் ஊரறிந்த உண்மைகள்தாம். எனினும், அவளது இதயத்தில் பலவிதமான உணர்ச்சிகள் கிளர்ந்தெழுந்தன, இயல்புக்கு மீறிய அன்போடு இதம் செய்து சுகமூட்டுவதாகத் தோன்றியது.

“நீ என்னதான் செய்ய விரும்புகிறாய்?” என்று அவனது பேச்சில் குறுக்கிட்டுக் கேட்டாள் அவள்.

“முதலில் படித்துத் தெரிந்துகொள்ள வேண்டும்; பிறகு மற்றவர்களுக்குச் சொல்லிக் கொடுக்க வேண்டும். தொழிலாளர்களான நாம் கற்றுக்கொள்ளத்தான் வேண்டும். நம்முடைய வாழ்க்கை ஏன் இவ்வளவு கஷ்டம் நிறைந்ததாக இருக்கிறது என்பதை நாம் கண்டுபிடித்துத் தெரிந்துகொள்ளத்தான் வேண்டும்!”

உறுதியும் அழுத்தமும் நிறைந்த அவனது நீலக் கண்களில் அப்போது மென்மையும் அன்பும் கலந்த ஒரு ஒளி நிறைந்திருப்பதைக் காண, அவளுக்குக் குதூகலமாயிருந்தது. அமைதி நிறைந்த இளம் புன்னகை அவளது இதழ்களில் நெளிந்தது. எனினும் அவளது கன்னச் சுருக்கங்களில் கண்ணீர்த் திவலைகள் இன்னும் துடிதுடித்துக்கொண்டுதானிருந்தன. வாழ்க்கையின் கசப்பைத் தெள்ளத் தெளிவாக உணர்ந்துவிட்ட தன் மகனைப் பற்றிய அவளது பெருமை உணர்ச்சி ஒரு புறம்; மற்றவர்கள் பேசுவதற்கு மாறாக அவன் பேசுவது, அவள் உட்பட்ட இச்சமூகத்திலுள்ள ஒவ்வொருவருக்கும் பழகிக் காய்த்துப்போன வாழ்க்கையை எதிர்த்து, அவன் தன்னந்தனியனாகப் போராட முனைந்து நிற்பது, அவன் இன்னும் இளைஞனாக இருப்பது- முதலிய விஷயங்களால் ஏற்பட்ட அவளது நிதான புத்தி ஒரு புறம்: இவ்வித இரு உணர்ச்சிகளுக்கிடையிலகப்பட்டு அவள் தடுமாறினாள். எனவே, அவள் அவனிடம் ஒரு விஷயத்தைச் சொல்லிவிட நினைத்தாள்:

“கண்ணே, நீ மட்டும் தன்னந் தனியனாக என்னடா செய்துவிட முடியும்?”

ஆனால், திடீரென்று, சற்றே அன்னியனாக, ஆனால் பெரும் அறிவாளியாகத் தன்முன்னே தோன்றும் மகனைப் பற்றிய பரவசத்திலிருந்து விடுபட அவள் விரும்பவில்லை.

பாவெல் தன் தாயின் இதழ்களில் தோன்றிய புன்னகையை, அவளது முகத்தில் தெரிந்த கவன உணர்வை அவளது கண்களில் மிதந்த அன்பை- எல்லாம் கண்டான். உண்மையை அவள் உணர வைத்துவிட்டோம் என்று தோன்றியது. தனது வார்த்தைகளின் சக்தியால் ஏற்பட்ட இளமைப் பெருமிதம் அவனுக்குத் தன்மீதுள்ள நம்பிக்கையை வெகுவாக உயர்த்தியது. அவன் சிரித்துக்கொண்டும், முகத்தைச் சுழித்துக்கொண்டும் உணர்ச்சிமயமாகப் பேசினான்; சமயங்களில் அவனது பேச்சில் பகைமை உணர்ச்சி ஒலி செய்தது. ஆனால் இந்த மாதிரிக் கடுமை கலகலக்கும் வார்த்தைப் பிரயோகத்தைக் கண்டு அவனது தாய்க்கு நெஞ்சில் பயம்தான் அதிகரித்தது. எனவே அவள் தலையை மட்டும் ஆட்டிக்கொண்டு தன் மகனை நோக்கி மெதுவாகக் கேட்டாள்:

“இதெல்லாம் உண்மையா, பாஷா?”

“ஆமாம்!” என்று உறுதியோடு பதிலளித்தான் அவன். மனிதர்களுக்கு உதவ வேண்டும் என்ற விருப்பத்தினால், மனிதர்களிடையே உண்மையைப் பரப்பியவர்களைப் பற்றியும், அப்படிச் செய்தவர்களை மக்களின் எதிரிகள் மிருகங்களைப் போல வேட்டையாடி, சிறையில் தள்ளியதையும் சித்திரவதை செய்ததையும் அவன் தாயிடம் சொன்னான்.

“நான் அந்த மாதிரி ஆட்களைப் பார்த்திருக்கிறேன். அவர்கள்தான் இந்த உலகம் செழித்து வளர்வதற்கான உரம்!” என்று ஆர்வத்தோடு கத்தினான் பாவெல்.

இந்த மாதிரி மனிதர்களைப் பற்றிய எண்ணம் அவனது தாய்க்குப் பயத்தை ஊட்டியது எனினும் ‘நிலைமை இப்படித்தானா இருக்கிறது’ என்பதை அவள் மீண்டும் கேட்க விரும்பினாள்; ஆனால் கேட்கத் துணியவில்லை. தனக்குப் புரியாத மனிதர்களைப் பற்றிய, எனினும் தன் மகனை இந்த மாதிரியான பயங்கரமான விஷயங்களைப்பற்றிப் பேசவும் சிந்திக்கவும் கற்றுக்கொடுத்த அந்த மனிதர்களைப் பற்றிய-கதைகளை மகன் சொல்லும்போது திணறிப்போன மூச்சோடு அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்தாள். கடைசியாக, அவனைப் பார்த்துச் சொன்னாள்:

“சரி, பொழுது சீக்கிரம் விடியப் போகிறது. நீ போய்ப் படு; கொஞ்ச நேரமாவது தூங்கு, போ.”

(தொடர்ந்து வரும்)

**என்றும் முதலிடம்**

உலகில்
மிகச் சிறந்த நாவல்
எது?
ஒரே பதில்
தாய்! தாய்!! தாய்!!!

உண்மைகள்
எப்போதும் வசீகரமானவை
அதுதான்
‘தாய்’ நாவல்
எப்போதும்
முதலிடத்தில் இருக்கிறது!

தவறவிடாமல்
தொடர்ந்து வாசியுங்கள்!

ரகுநாதனின்
மொழி பெயர்ப்புநடை
பிரமாதப்படுத்துகிறது.

-ஆர்.

# சலனங்கள்

-மட்டுநகர் நர்மி-

இந்த அந்தகாரமும், மழையும், வழமையைப்போல் இவற்றை இரசிக்க முடியவில்லை அவனால். இந்த மலைப் பிரதேசமே இப்படித்தான். 6 மணிக்கு முன்பே இருட்டிவிடுகிறது. வேலை மாற்றலாகி வந்த புதிதில், மனைவியையும், பிள்ளையையும் பிரிந்திருந்த கவலையைத் தவிர இங்குள்ள எல்லாமே அழகானதாயும், இரசனைக்குரியதாயும்தான் இருந்தன. இந்த ஊரின் பசுமையை- அழகை வரி வரியாக மனைவிக்குக் கடிதமெழுதியிருக்கிறான். ஆனால் போகப் போக, சொந்த ஊரின் நினைவுகள்- எப்போ அம் மண்ணை மிதிப்போம் என்ற ஏக்கம் வந்தது. மனைவியின், பிள்ளையின் பிரிவு பாரமாகவிருந்தது. அவர்களின் அருகாமை தேடி மனம் தவித்துச் சுருண்டது. இதோ இன்னமும் ஒரு வருடம் எப்படியாவது கடத்திவிட்டால் ஊர் திரும்பலாம். என்னதான் இருந்தாலும் மழை என்றால் அவனுக்குள் சந்தோஷம் எட்டிப்பார்க்கும். ஊரில் என்றால் ஈரத்துடன் இணைந்த மண்வாசனை, இதை உணர்ந்து இரசித்திருக்கிறான். மழையில் குளித்திருக்கும் செடிகளை பார்க்கும்போது உள்ளே உற்சாகம் ஊற்றெடுக்கும்.

ஆனால் இன்று எதையுமே இரசிக்க முடியவில்லை. வெளியே ‘சோ’வென்று மழை தொடர்ந்து பெய்துகொண்டிருந்தது. காற்று வேறு பலமாக வீசி மரங்களை பேயாட்டம் ஆட வைத்துக்கொண்டிருந்தது. மெலிதாக தனக்குள் பயம் உணர்ந்தான். இரவு கண்ட கெட்ட கனவுவேறு நினைவில் வந்து பயங்காட்டியது. எதுவோ நடக்கப் போகிறது என்று உள்ளுணர்வு சொல்லியது. மூட நம்பிக்கைகளுக்கு இடங்கொடுக்கக் கூடாது என்று பகுத்தறிவு எச்சரித்தபோதும் அதை மீறிப் பயம் வந்தது. இதேபோல் ஒரு நாளில்தான் மாமாவின் இறந்த செய்தி வந்திருக்கிறது. நேற்று முன்தினம் மனைவியிடமிருந்து வந்திருந்த கடிதத்தில் மகனுக்குச் சுகமில்லை என்று வேறு எழுதியிருந்தாள்.

போன தடவை ஊருக்குப் போயிருந்த போது மனைவிக்குச் செய்துகொடுத்த சத்தியத்தை நேற்று மீறியதால் இந்தப்



பயங்களுக்கெல்லாம் காரணம் என்று மனச்சாட்சி சொல்லியது. “நான் எங்கே சத்தியம் செய்து கொடுத்தேன். அவள் பாட்டிற்குச் சத்தியம் என்றால் அது சத்தியமாகிவிடுமா?” தனக்குள்ளாகவே கேள்வி கேட்டக்கொண்டான்.

இந்த மலைப் பிரதேசத்தில் என் தனிமை, இங்குள்ள குளிர் இது எதுவுமே அவளுக்கு விளங்காது என்று தோன்றியது. ஆனால் அவளின் பக்கமும் நியாயம் இருப்பது புரிகிறது. இங்கு வந்துதான் அந்தப் பாழாய்ப் போன குடிப் பழக்கம் தொற்றிக்கொண்டது. கூட வேலை செய்யும் தீபக்தான் முதலில் ஊற்றிக்கொடுத்தான். ‘அவனைப் பிழை சொல்ல முடியாது. நான் தேவையில்லையென்று அப்போதே மறுத்திருக்க வேண்டும். இல்லை இந்தப் பழக்கத்தை ஊரில் தொடராமலிருந்திருக்க வேண்டும்.’ காலங்கடந்த பின் இந்த எண்ணமே வீண் என்று ஒதுக்கித் தள்ளினான்.

ஊருக்குப் போயிருந்த சமயம், நண்பர்களைக் கண்டபோது ஏற்பட்ட சலனம் மனைவி கண்டுபிடித்துவிட்டாள். தனிமை, குளிர் அதனால் இருந்துபோட்டுக் கொஞ்சம் எடுப்பேன் எல்லாவித சமாதானம் சொல்லியும் அவள் சமாதானமாகவில்லை.

“ஏங்க நீங்க அங்கே இங்கே நான் வேலைக்குப் போய் வந்து பிள்ளையைக் கவனித்து இரவில் படுப்போம் என்று தலை சாய்த்தால் இந்த மனுஷன் தனியே அங்கே என்ன கஷ்டப்படுகிறாரோ என்று உங்கள் எண்ணம். கொஞ்சம் கண்சாய அலாரம் அடிக்கும். மீண்டும் அதே கதை. இது போதாதென்று இப்போ உங்க இந்த பழக்கம். இந்த மனுஷன் வெறியோட அந்த மலைப் பாதையிலே வாகனம் ஒட்டி எதுவும் நடந்து விடுமோ என்று இனி ஒவ்வொரு நாளும் நான் செத்துப் பிழைக்க வேணும்.

இங்க பாருங்க. எங்களுக்கு உங்களை விட்டா யார் இருக்காங்க. உங்களுக்கு ஏதாவது நடந்தால் எங்களின் கதி? நம்ம பிள்ளை மேலே சத்தியமாகச் சொல்கிறேன். நீங்க இனிக் குடிக்கக்கூடாது.”

லீவு முடிந்து திரும்பியபின் கிட்டத்தட்ட 3 கிழமை மனைவியின் வாக்கைக் காப்பாற்றியாகிவிட்டது. ஆனால் நேற்றிரவு தீபக்கின் பிறந்தநாள் பாட்டியின்போது வாக்கைக் காற்றில் பறக்கவிட்டாயிற்று.

இன்று நேற்றிரவு கண்ட கனவு, மகனின் சுகயீனம் எல்லாம் சேர்ந்து அவனை ஆட்டி வைத்துக்கொண்டிருந்தது.

“ஐயா உங்களுக்கு போன்.” இரு வீடு தள்ளியிருக்கும் வீட்டின் வேலைக்காரன் மழையைப் பொருட்படுத்தாமல் குடையின் கீழ் நடுங்கிக்கொண்டிருந்தான்.

குப்பென்று பயம் நெஞ்சில் பந்தாய்ச் சுருண்டது. இருந்துபோட்டு மனைவி ‘போன்’ எடுப்பது வழக்கமென்றாலும், அதுவரை அவனைச் சுற்றியிருந்த பயமெல்லாம் மெய்யாவதுபோன்று உணர்ந்தான்.

குடையை எடுத்துக்கொண்டு அந்த இரு வீடுகளைத் தாண்டுவதற்குள் எல்லாத் தெய்வங்களிடத்தும் மானசீக வேண்டுதல் ஆயிரம் செய்தது மனம். “ஆண்டவா நான் வாக்கை மீறியதற்காக என்னை வேண்டுமானால் தண்டித்துவிடு. என் மனைவி பிள்ளைக்கு எந்த தீங்கையும் கொடுத்து விடாதே” மனம் புலம்பித் தவித்தது.

போனை கையில் எடுக்கவே கை நடுங்கியது.

“ஹலோ..”

“ஹலோ...என்னங்க. நான்தான் மாலதி பேசுகிறன். நம்ம மகனின் ஸ்காலஷிப் முடிவு வந்துவிட்டது. மகன் பாஸ். இந்த சந்தோஷத்தைச் சொல்ல காலையிலிருந்து ட்றை பண்ணுகிறேன். லைன் கிடைக்கவில்லை. இப்போதுதான்கிடைத்தது. அதுதான் நேரத்தைப் பார்க்காம போன் எடுத்தனான்... மனைவியின் தொடர்ந்த பேச்சு அவனின் காதில் விழவில்லை. இதுவரைச் சுற்றியிருந்த கயிறுகள் எல்லாம் அறுபட்டு நிம்மதிப் பெருமூச்சு வந்தது.

‘குட் நைட்’ சொல்லி போனை வைத்துவிட்டு, வீட்டுக்காரர்களிடம் நன்றியைச் சொல்லி வெளியில் வரும்போது வானம் பூஞ்சிதறலாக மெல்லிய தூறலைக் கொட்டிக் கொண்டிருந்தது. நேரம் பார்த்தான் மணி 7.00ஐ காட்டியது. இந்த சந்தோஷத்தை யாருடனும் பகிர்ந்து கொள்ள வேண்டும் போலிருந்தது. தீபக் வீடு பக்கத்தில்தான். சென்றால் ஒரு பெக் விஸ்கி சாப்பிட்டுக் கொண்டே பேசலாம் என்றெண்ணியபடியே தீபக்கின் வீட்டுத் திசை நோக்கி நடந்து கொண்டிருக்கிறான் அவன்.

சிறுகதை

# ஆண் மகள்

திரு மலை சுந்தா

பாவம் அப்பா. என்ன ஆசையாக இந்த வீட்டைக் கட்டி முடித்தார். 'என்னப்பா இவள் ரேகா கம்பசால வரப்போகிறாள். நீங்கள் உங்கள் பாட்டில் வேலை...வேலை...என்று இருந்தால்... இந்த தகரக் கொட்டகையையா கொடுப்பது அவளுக்கு....? அதுவும் அவள் ஒரு என்ஜினியர். வரப்போறவரும் என்ஜினியர்.'

இப்படித்தான் அம்மா; அப்பாவுடன் நாளாந்தம் சண்டைபோட்டு இந்த அழகான வீட்டை கட்டிமுடிக்க தூண்டுதலாக இருந்திருப்பாள்.

அப்பாவிடம் காசு இல்லை என்று சொல்வதற்கில்லை. யாழ்ப்பாணத்து அம்மாவின் சீதன காணி; பூமிகளையும் தன் முதிசங்களையும் பத்து வருசத்துக்கு முன்பே விற்று வங்கியில் 'ஃபிக்சற் டிப்போசிற்'றில் போட்டிருந்தார்.

இரண்டு தோணியில் கால் வைக்கக் கூடாது. ஒன்றில் யாழ்ப்பாணம். இல்லாட்டி திருகோணமலை. முடிவாக திருகோணமலையில்தான் வாழ்வது என்ற முடிவு ஏற்பட்ட போதுதான்.... யாழ்ப்பாண சொத்துக்களை விற்க அப்பா முடிவுசெய்தார். அம்மாவும் தலையாட்டினாள்.

"என்னடி ரேகா ரோஜா பூவுடன் ஏதோ கதைக்கிறாய்...?"

ரேகா ரோஜா பூவுடன் கதைத்துக் கொண்டிருப்பதை தாய் கேட்டுவிட்டே கேட்டாள்.

"இல்லை அம்மா...மனிசரைப் பார்க்கிலும்... இந்த பூ...செடி...கொடி...மரங்கள் எல்லாம் எவ்வளவோ உயர்ந்ததம்மா..... என்ன ரகசியத்தையும் பயமில்லாமல் நாங்கள் சொல்லலாம். நல்ல நண்பர்கள் அம்மா இவர்கள்..."

ரேகாவின் பேச்சு... பார்த்த பார்வை... வார்த்தைகள் வந்த தொனி... ரேகாவின் அம்மாவை ஏதோ செய்திருக்க வேண்டும். இவளுக்கென்ன வந்ததென்ற நினைவுடன்-

"என்னடி உனக்கு...?" ரேகாவின் அருகினில் ஓடி வந்தாள். கட்டியணைத்து "உனக்கென்னடி.... அப்படி..?" அழத் தொடங்குகிறாள் அம்மா.

ரேகாவுக்கு தாயைப் பார்க்கவே பரிதாபமாக இருந்தது. "அம்மா... எனக்கு விசர்...கிசர்...இல்ல... நல்ல சுய நினைவோடுதான் இருக்கேன்..நீ அழ வேண்டாம்." ரேகா ஆறுதல் சொன்னாள்.

"நீ எனக்கு ஆறுதல் சொல்லுறாய்... என்ன.... நீ படிச்சனி.. இன்னும் மூன்று மாதத்தில் என்ஜினியர் உத்தியோகம்.... இப்படி சின்னப் பிள்ளையாட்டம்..." ரேகாவுக்கு அவளின் தாய் எதையோ நினைவூட்டினாள்.

"ஓம் அம்மா... கிணற்றடியில் நின்று கொண்டு வசனம் பேசியதும்; வாழை மரங்களோடு சண்டை பிடிச்சது; பூனைக் குட்டிகளோடு செல்லங் கொஞ்சியதும்; குருவி; லவ் பேட்சுகளுடன் அவைகளின் மொழியில் பேசி மகிழ்ந்ததுவும்; பாட்டு பாடினதும்; ஓம் அம்மா... அந்த ஏழு எட்டு வயது...என்ன இனிய நாட்கள் அம்மா. அப்ப எனக்கு விசரா அம்மா.. அதுக்கு பின்னால் தானேநான் படிச்சு...இப்போ சொல்லுறியே...என்ஜினியராக வரப்போறன் என்று... அம்மா நீ ஒன்றுக்கும் பயப்படாத எனக்கு விசர் இல்லை. அந்த ஏழு, எட்டு வயது நினைவில் என் பழைய சிநேகிதர்களுடன் பேசி மகிழ்கின்றேன். அவ்வளவுதான்..." ரேகா தாயிடம் இருந்து தன்னை விடுவித்துக்கொண்டாள்.

"கம்பசால வந்த கையோட... லீவுக்குள்ள... எங்கயாவது... ஒரு சேஞ்சுக்கு கூட்டிக்கொண்டு போய்விட்டு வாங்க... ரேகாவின் மனம் ஆறவேண்டும்.."

ரேகாவின் தோழி பரிமளம் சொன்னது தாய்க்கு உறுத்தியது.

"என்னம்மா யோசிக்கிறாய்..? நீ மூளையை விட்டுப் போடதை... நீ விட்டால் அப்பா பாவம். எனக்கு பின்னாடி கலியாண கனவோடு நித்தம் வாழும் நித்யா பாவம். வேலை வேலையென்று அலையும் தம்பியன் கலங்கிப் போவான். எந்த நேரமும் உன் மடிக்குள்ள கிடக்கும் குட்டியும் துவண்டு போவான்...... வீடே தலை கீழாக போகும் அம்மா. நீ யோசிக்காத... என் முடிவை தேடிய நான்தான் யோசிக்க வேண்டும். அம்மா தயவுசெய்து என்னை மட்டும் தனியா விட்டுடுங்க என்றால் பெரிய புண்ணியம் அம்மா...இந்த ரேகா பூவிடம் யோசனை கேட்பேன். மாதுளம் பழத்திடம் வழியைக் கேட்பேன்..... எனக்கு எல்லாம் சரியாப் போயிடும் அம்மா..."

"இவள் எங்கட சொல்ல கேட்கிறாள் இல்ல.... சாவகச்சேரி என்ஜினியர் பெடியனை விசாரித்துப் பார்த்தன். நல்ல கொடி; கோத்திரம். ஆனால் குடும்பம் கொஞ்சம் பெரிசு. நாலு வயதுக்கு வந்த தமக்கை; தங்கச்சிமார். வேற ஆண் பிள்ளைகளோ துணையோ இல்லை. இவரையும் இவரின் உழைப்பையும் நம்பித்தான் அந்த குடும்பம் இருக்கு. தகப்பன் போன வருடம் கிளாலி மோதலில் ஆளே இல்லை. அவங்கள்... கேட்கிற மாதிரி ஐந்து இலட்சத்தையும்



இந்த வீட்டையும் கொடுக்க ஓம்படுவம். வேற வழி இல்ல. நாங்கள் இழுத்தடித்தோம் என்றால் இவள் ரேகாவின் மனமும் பேதலிச்சு...விசரி ஆகிடுவாள். சின்னவள் நித்யாவுக்கும் சீதனம் கொடுக்க இருக்குது தானே? இனி தம்பியன் உழைப்பான்.."

ரேகாவின் தாய் தன் கணவரின் வார்த்தைகளை யோசித்துப் பார்த்தாள்.

ரேகா அந்த ரோஜாப் பூவுடன் சிரித்து... சிரித்து...என்னவோ பேசுவதை பார்த்தாள்...

"ஓம்பட வேண்டியதுதான். இல்லாட்டி இவளுக்கு.." முடிந்த முடிவோடு ரேகாவின் முதுகினில் கையினை வைத்து "ரேகா..நான் கேட்பன் பிடிவாதமாக இருக்காமல் பதிலைச் சொல்லு.." என்று விட்டு பூமரச் சாடிக்கு பக்கத்தில் கிடந்த மணல் திடலில் அமர்ந்துகொண்டாள்.

"என்ன கேட்கப் போகிறாய்? அவங்கள் கேட்கிற ம்முழுச் சீதனத்தையும் கொடுக்கிற எண்டு தானே!" ரேகா சிரித்தாள்.

"என்னடி சிரிக்கிறாய்..?"

"அப்ப என்ன அழவா சொல்கிறாய்...? என்ன இந்த மூன்று வருசமாக காதலித்தாரே...அதுக்கு.." ரேகா விம்மி விம்மி அழத் தொடங்கினாள்.

"என்னடி...ஏன் அழுகிறாய்..?"

"அழ இல்லை அம்மா...இந்த உலகத்தில் வாழும் ஆம்பிளையளை நினைச்சுதான் அம்மா..."

"உன்ர அப்பா..உன்ர தம்பி... எல்லோரும் ஆம்பிளையள் தானே?"

"ஏன் ரஞ்சனும் ஆம்பிளதான் அம்மா..."

ரேகாவின் 'ரஞ்சன்' என்ற சொல் தாயை உலுப்பி எடுத்தது.

ரஞ்சன். கிட்டடி சொந்தக்காரன். ரேகா கம்பசுக்கு போகும்வரை... ரேகாவின் பெற்றோரும்; ரஞ்சன் ரேகாவுடன் நெருங்கிப் பழகுவதை வித்தியாசமாக பார்க்கவில்லை. ரேகாவின் மனம் மாறிய பின்புதான் ரஞ்சனை இவர்கள் தள்ளி வைத்தார்கள். கம்பசில் உள்ள என்ஜினியர் மாப்பிள்ளை எங்கே? தாய் தகப்பன் சொத்தில் சாப்பிட்டுக்கொண்டு திரியும் ரஞ்சன் எங்கே...? ரேகாவின் இழப்பால் ரஞ்சன் ஏதோ வேலையென வெளிநாடு போனான். சிலர் அவன் ஏதோ இயக்கத்திற்கு போய் விட்டதாகச் சொன்னார்கள். "உங்கட படிச்ச மோளால எங்கட பெடியனை தாரை வார்த்திட்டு தவிக்கிறம். இந்த பாவம் உங்களை சும்மா விடுமா....?" ரஞ்சனின் தாய் ரேகாவின் தாயைக் கண்டால் இதைத்தான் திருப்பி திருப்பி சொல்லுவாள்.

மாயமாக போன ரஞ்சன் ஒருநாள் ஊருக்கு வந்தான். ஆட்டோ ஓட்டிக்கொண்டு திரிகிறான். சில சமயங்களில் வழி தெருவில் ரேகாவின் தாயைக் கண்டால்..

"வாங்க மாமி...வாங்க.....வீட்டுக்கு கொண்டு போய் விடுறன்... ரேகாவைப் பற்றி நினைக்காதிங்க...அவ படிச்சவ.. நான்..?" என அன்பாக கதைத்து; பண்பாக நடப்பான்.

"என்னம்மா...ரஞ்சன் என்றவுடன்... யோசிக்கிறீங்க...? இந்த விஷயமாக நான் ரஞ்சன் குடும்பத்துடன் பேசிப்போட்டன்...." ரேகா நிமிர்ந்து இருந்த தலையினை மேலும் நிமிர்த்திச் சொன்னாள்.

"ரஞ்சனோட பேசிப் போட்டியா..? எதைப் பேசினாய்?" தாய் அதிர்ச்சியுடன் கேட்டபோது...

எதுவித அதிர்ச்சியும் இல்லாமல் ரேகா சொன்னாள்... "நான் கும்புடுகிற காளி ஆச்சி...சத்தியமாய் நான் முடிச்சால்... ரஞ்சனைத்தான் முடிப்பன்.."

"என்ன....?" தாய் மீளாத அதிர்ச்சியோடு மணல் திட்டில் இருந்து எழும்பியபோது...

"அம்மா இரு... அடிக்கடி மனதை மாத்த நான் ஆண் மகன் அல்ல. வாசிற்றியில அவர் சொன்ன வார்த்தைகள்... சத்தியங்கள்... 'எங்கட சம்பந்தத்துக்கு சீதனம் என்ற பேச்சே வேண்டாம். உங்கட குடும்ப நிலவரம் தெரியும். நான் உழைப்பேன்.... உங்கட குடும்பத்தையும் பின்னோக்கி போக விடமாட்டேன். என் பெற்றோரும் உங்கட குடும்பம் தாள விடமாட்டார்கள். என்னை நம்புங்கள்...' என்று அவருக்கு எத்தனை தடவை படிச்சு...படிச்சு சொன்னேன்.

"'கலியாணத்துக்கு முதல் பேசிற பேச்சை பேசிப் போடவேணும். பிறகு அதற்காக சண்டை சச்சரவு செய்ய முடியாது.' இப்படி யாரோ அவையளின் தாய்க்கு குத்தி விட்டிருக்கினம். இவரும் இதை பிடிச்சுக் கொண்டு.... தாய் வழி நின்றால்...?

"என்னோடு இனி வாழப் போறாளே இவள். சுகம் துக்கம் எல்லாம் இவளோடு தானே என்ற எண்ணம்... இவருக்கு சிறிதளவாவது இருக்கா அம்மா?

"என்னை நம்பாதவர்...என் பேச்சை ஏற்காதவர்...இவரை நான் மணந்தால் நெடுக குடும்பத்துக்க சண்டைதான் அம்மா..."

ரேகா வார்த்தைகளை நிறுத்தியபோது...

"அப்ப... ரஞ்சனையா முடிக்கப் போறாய்...?"

தாய் சத்தமாக கேட்டாள்.

"ஆம்...ஆம்...ஆம்..." ரேகா அதே சத்தத்துடன் பதிலைச் சொன்னாள்.

"என்னடி...உனக்கு பயித்தியமா பிடிச்சுப் போச்சு...? நீ என்ஜினியர்...படிச்சனி.... இவன்...?"

ரேகா வாய்விட்டு சிரித்தாள்.

"ரேகா...மலரே....நீ..... சொல்லு.... ரஞ்சனை..... நான் முடிக்க.... உனக்கு..... சம்மதம்...தானே...?"

"ரேகா.... நீ.... ஆண்மகன் அல்ல..... ஆண்மகள்...." ரோஜா மலர் சொன்னது.

ரேகா...இப்போது...ரோஜா மலருடன் சேர்ந்து சிரித்துக்கொண்டாள். ஆண்மகள் ஆக.... ரேகாவின் தாய்.......!!

---

# வெள்ளைக் குயில்



மாவனல்லை ரிஸ்கி ஷெரீப்

பனித்துளி பூப்பூவாய்ப் பூத்திருக்கும் அழகான அந்தி நேரம்!

நீண்டு பரந்துகிடக்கும் அந்த நகரில்... யதார்த்தமான சில்லறை சனங்கள் அங்கே இங்கேயென்று அலைந்துகொண்டிருக்க, டீன் ஏஜ்ஜில் மிதந்துகொண்டிருக்கும் சில வாலிபங்கள் அருகேயிருந்த தியேட்டருக்குள் 'அப் யுவர் அன்கர்' ஆங்கிலப் படத்தின் 'டபிள் எக்ஸ்' காட்சிகளைப் பார்க்கப் பறந்துகொண்டிருந்தன.

எக்கச்சக்கமான கூட்டம் சொச்சமாகிப் போய்....

பச்சை கலந்த மஞ்சளில், கூடவே செந்நிறமாய் மாலை மங்கிக் கொண்டிருந்தது.

இரவு நேரக் கடைகள் இலேசாகத் துளிர்விட ஆரம்பிக்க, மணிக்கூட்டுக் கோபுரத்தின் அருகேயுள்ள முனியாண்டி விலாசில் 'சோளிகே பீச்சே கியாஹை' பாடிக்கொண்டிருந்தாள் ஒரு ஹிந்திப் பாடகி.

மின்சார சபையைச் சேர்ந்த காக்கி யுனிபோர்ம் ஒன்று, தனது ஓட்டை சைக்கிளை மிதித்துக்கொண்டிருந்தது. மின் கம்ப விளக்குகளுக்கு கணெக்ஷன் கொடுத்துவிட்டு.... தனது புது மனைவியுடன் கொஞ்சப் போக வேண்டுமென்ற அவசரம் அவனுக்கு.

பெட்ரோமாக்ஸ் வெளிச்சத்தில்... சில கடலை வியாபாரிகள் வியாபாரம் பண்ணும் சாக்கில் கள்ளத்தனமாய் கன்னிப் பெண்களின் மார்புப் பகுதிகளைத் தம் கண்ணால் அளந்துகொண்டிருந்தனர். இதையெல்லாம் வெட்கத்தனமாய்ப் பார்த்துக்கொண்டு ஒரு கருமுகில் வானவீதியில் பவனிவந்து கொண்டிருக்க....

அங்கே;

அந்த முச்சந்தியின் சின்ன இருட்டுக்குள்ளொரு சின்னப் பறவை காத்திருந்தது. யாரையோ எதிர்பார்த்திருந்தது. அவள் அம்ரிதா.

இருபத்தியிரண்டு வயதில் இளமையாயிருந்த அவளின் தேகம் முழுவதும் அழகு அப்பியிருக்க, கருவிழிகளில் ஏதோ ஒரு வகைத் தாபம்-ஏக்கம் தென்பட்டது. சிவந்த சின்னவுதடுகள் மெல்லத் துடிக்க, செழிப்பாய்ப் பருத்த மார்பகங்கள் மேலேறி-கீழிறங்கி புடைப்பாய் விம்மின.

ஐந்தடி ஆறங்குலத்தில் கஸ்தூரி மஞ்சளாய் அமைந்தவுடம்புக்கு வாழையிலைப் பச்சையில் சாரி போர்த்தியிருந்தாள். கண்ணாடியாய் அமைந்த மெல்லிய சாரி. தொப்புள் பகுதியில் ஏராளமாய் சாரி விலகிப்போய்... அந்த இடம் 'பளிச்'... மடிப்பு விழாத கொடியிடையில் சுண்டி விட்டால் குருதி பாயும். ஆனால்; கிறங்க வைக்கும் அவளது பார்வை அலைபாய்ந்து கொண்டிருந்தது.

"ஏய்... இங்கன என்ன பண்றே?"

பின்னாலிருந்து குரல் கேட்டது.

அம்ரிதா சற்றே திரும்பி ஏறிட்டாள்.

அங்கே....

முரட்டுத்தனமாய்... முகமெல்லாம் தாடிப்பயிர் வளர்ந்து, உதட்டிடுக்கில் புகையும் சிகரெட் பொருத்தி, சிவந்துபோன தன் விழிகளினால் அவளையே மேய்ந்து கொண்டிருந்தான் அவன். அசப்பில் 'புதிய பாதை' பார்த்திபன் மாதிரியான தோற்றம்.

அம்ரிதா மவுனமாய் நிற்க...

அருகில் வந்தான். "என்ன பண்றே?" வார்த்தைகளில் எக்கச்சக்கமான சாராய நெடி! போதை கலந்த தள்ளாடும் தேகம்.

"குளிருதா...? குளிருக்குப் போர்வை வேணுமா?"

அம்ரிதா கேட்க-

அவன் ஆவலாய்- ஆர்வமாய்ப் பார்த்தான். கண்களில் மின்சாரம் பாயத்துவங்க உடம்பு நரம்புகள் சூடேறின. "ஓ.... பலான பார்டியா...வர்றியா?"

"எவ்வளவு கொடுப்பே?"

"அமலா மாதிரி அம்சமாயிருக்கே நூறு ரூபா தரட்டுமா?"

"அமலா மாதிரின்னு நீயே சொல்றே... நூறு ரூபா போதுமா?"

அவனுக்கு சிந்திப்பது அநியாயமென்று பட்டது.

தனியாக ருசிக்கக் கிடைத்திருக்கும் தங்கச் சிலையவள்.

"சரி! இருநூறு ரூபா தரட்டுமா?"

என்றவன் அவளை ஆர்வமாய்த் தொட்டான்.

"ஹூம்..."

என்றாள் அவள் ஆதங்கமாக...

"சரி வா..."

என்றவனைத் தொடர்ந்து நடந்தாள் அம்ரிதா.

அந்தப் பாழடைந்த இருட்டு மண்டபத்துக்குள் இருவரும் காணாமல்ப் போனார்கள்.

சரியாக முப்பத்தி மூன்றரை நிமிடங்கள். கறுப்பிருட்டுக்குள் இருவரும் வியர்வை மழையில் குழித்து... மூச்சுத் திணறி வெளியே வந்தனர்.

அவனது பார்வையில் திருப்தி தெரிந்தது.

இரண்டு நூறு ரூபா நோட்டுக்களை யெடுத்து அவளிடம் கொடுத்தான். அங்குலம் அங்குலமாய் ருசித்த-அனுபவித்த அந்த உடம்பையே பார்த்தான்.

"நான் ஸ்த்திரி லோலன்தான்... இல்லைனு சொல்லல. ஆனால்.... உன்கிட்டக் கிடைத்தது மாதிரி சந்தோஷம்-திருப்தி எனக்கு வேறெந்தப் ப்ரொஸ்டிடியூட் கிட்டேயும் கிடைச்சதில்ல.." என்றவன் மவுனமாயிருக்கும் அவளைப் பார்த்துக் கேட்டான்.

"என் நண்பன் ஒருத்தன் இருக்கான். ரொம்பப் பெரிய பணக்காரன். உன் அழகுக்கும் இளமைக்கும் ஐயாயிரம் ரூபா வேண்டுமானாலும் தருவான். வர்றியா கூட்டிட்டுப் போறேன். பணம் வாங்கித் தர்றேன். என்ன சொல்றே?" என்றவன் அதிர்ந்தான்.

அம்ரிதா இலேசாய் கண் கலங்கியிருந்தாள்- ஆச்சரியமாய்.

"ஏன் அழுறே?"

"என்னால இப்போ வரமுடியாது!"

என்றாள் தொண்டை கரகரக்க...

"நான் கட்டாயப்படுத்தல...ஆனாலும் காரணம் சொல்றியா...பணத்துக்காகத்தானே உடம்பை விற்கிறே...?"

அம்ரிதா மெல்ல நிமிர்ந்தாள்.

"என்னால வரமுடியாது...
என் குழந்தை வீட்டுல
அழுதிட்டிருக்கும்.
நான் லேட்டாகிப்
போனால் என் புருஷன் குழந்தையை அடிச்சே கொண்ணுடுவாரு... ஏன்னா, என் புருஷனுக்கு சரியாக நேரத்துக்குக் குடிக்கப் பணம் கொடுக்கணும். நான் லேட்டாகிப் போற ஒவ்வொரு நிமிடமும் என் குழந்தை சித்திரவதைப்படும். நான் வர்றேன்.."

என்றவள், அவன் யதார்த்தமாய் அதிரும்படியாக...

தான் இடுப்பில் சொருகி வைத்திருந்த அந்த மஞ்சள் கயிற்றையெடுத்து, தன் வெற்றுக் கழுத்தில் அணிந்துகொண்டாள்.

அவன் விழிகளை அகல விரித்துக் கேட்டான்.

அவனை விட்டு போதைதெளிந்து...

"ஏன் தாலிக் கயிற்றைக் கழற்றி வெச்சிருக்கே..?"

அம்ரிதா தன் கண்களைத் துடைத்துக் கொண்டாள்.

"தப்பான-பாவமான காரியம் பண்ணப் போ தாலிக்கயிற்றையும் அணிந்திருந்தால் அதனோடை மகத்துவம், புனிதம் எல்லாமே அற்றுப்போயிடும். இந்தத் தாலி மாதிரி...அதைக் கட்டின என் புருஷனையும் என்னால விலக்க முடியல. என் குழந்தையையும் மறக்க முடியல..அதான்.."

என்றவள் விருட்டென்று விலகி நடக்கத் துவங்க...

அவன் பார்த்துக்கொண்டேயிருந்தான்.

நெடு நேரமாய்...

சிவப்பு அமிலத்துக்குள் ஆழமாய் அமிழ்ந்து போயிருக்கும், அந்த இளமையான சிறிய வயது வெள்ளைக் குயிலை நினைக்க...நினைக்க,

அவனையறியாமலேயே....

அவன் கண்களில்

கண்ணீரின் குளுமையை

உணர்ந்தான்.

முரசுடனான சகல தொடர்புகளுக்கும்
தினமுரசு வாரமலர்
த.பெ.இல-1772
கொழும்பு

# காயம் அறியா வீரம்!

## இலக்கிய நயம்

— தருவது ரசிகன் —

யானைகளின் பிளிறல் முழக்கம் ராஜமாதாவின் செவிகளில்!

போர் உக்கிரமாகிவிட்டது.

உதிரம் பாய, சிரசுகள் உருள, உயரும் வாள்களும், வேல்களும் தீனி யெங்கே என்று தேடித் தேடிப் பாயும் கோரப் போர்!

கோட்டையின் கதவுகளை மோதவரும் யானைகளின் பலம் பெரிதா?

பகைவன் பாதம் படவிடோம்- அந்நியன் கரம் அன்னையின் துகில் தொடவிடோம் என்று போர்ப் பரணி பாடி புயலாய் எழுந்து போரிடும் வீரர்களின் நெஞ்சுரம் பெரிதா?

நிச்சயம் பெரிது நம்மவர் நெஞ்சுரம்!

சத்தியம்.... சத்தியம் பகைவரை நம்மவர் பொட்டுப் பூச்சிகளாய் நசித்து வெல்வது!

எத்திசை நோக்கினும் வீரர் முகங்கள்!

கொட்டிய முரசின் ஓசையில் எழுந்து, குருதியில் கலந்த வீரமே துணையாய் பொங்குமா கடலாய் போர்க்களம் கண்டனர்!

சுந்தர அழகு நம்மவர் முகங்கள்!

அத்தனை முகத்திலும் சூரியக் கோபம்! விழிகள் யாவிலும் வெற்றியைத் தவிர வேறெதுவும் நாடா நோக்கின் நிச்சய உறுதி!!

கட்டிலறையில் பெற்ற சுகமும், தொட்டில் பிள்ளையின் இனிய நகையும் பேரின்பமே என்ற போதும், பொத்திக் காக்கும் தன்மானமே தலையிலும் பெரிது என்றவர் அறிவர்!

ராஜமாதா கண்கள் மூடினாள். மூடிய விழிகளை உடைத்துக்கொண்டு முத்தாய் கண்ணீர் தெறித்து விழுந்தது.

"ஏன் இந்த யுத்தம்? எதற்கிந்த பலிகள்? போதும் மகனே!"

புறப்பட்ட மகனிடம் கவலையே வடிவாய் ராஜமாதா சொல்லிப் பார்த்தாள்.

"நாமோ வலிய மோதப் போனோம்! பணிவோம் நாம் என்று படையோடு வந்தனர்! துணியோம் தம்மை எதிர்க்க என்று நம்மவர் நெஞ்சுரம் அறியாப் பகைவர் போட்டனர் தப்புக்கணக்கு!"

கருவில் சுமக்கப்பட்டவனின் கருத்தில் இருந்த நியாயம் புரிந்தது. என்றாலும் தாய் மனம் துடிப்பால் கேட்டது:

"தூது அனுப்பி பேசினால் என்ன?"

"தயார்தான் நாங்கள்! எங்கள் சம்மதம் ஒரு கை ஓசை! போரே முடிவென்று மோதவருகிறார்! சாதலே உமக்கு பரிசென்று சொல்லி கோட்டை வாசலில் தாயகவீரர் உயர்த்தினர் வாட்கள்! உருக்கு வேல்கள்!"

"படையெடுப்பின் காரணம் என்ன மகனே?"

ராஜமாதா பதிலறியக் கேட்டாள்.

"சுலபம் என்றால் சுந்தர பூமியைச் சுருட்டிக்கொள்வது!"

மைந்தனின் விடையில் இகழ்ச்சி இருந்தது.

ராஜமாதாவின் உதடுகள் துடித்தன. தன்னையறியாமல் அவர் உதிர்த்த வார்த்தை;

"அது ஒரு நாளும் முடியாது!"

மைந்தன் முகத்தில் பொங்கிய பெருமிதம். உதடுகள்மீது உணர்ச்சித் துடிப்பு.





"உண்மை தாயே! முற்றிலும் உண்மை!! நெஞ்சுரம் அறியா மூடர்கள் அவர்கள்! வலையில் சிக்கும் மீனோ நாங்கள்? விலையில்லா மானம் பெரிதென்று அறிந்த புயலின் புத்திரர் நாமென அறிவர்! நாளை அல்ல நடக்கும் போரில் இன்று மாலையே அறிவர்!"

ராஜமாதா கம்பீர விழிகளால் நாடாளும் மைந்தனை ஆசிர்வதித்தாள்.

"உன்னவள் இருக்கிறாள் உள்ளே! ஆறுதல் சொல்லி ஆருயிர் கடமை ஆற்றச் செல்க! வீரம் நமதுடமை. அதனால் வெற்றியும் நமதுரிமை! சென்றுவா மைந்தா! பகைவர் என்றாலும் அவர்களும் மனிதர். உயிர்கள் செலவாய் போவதைக் குறைத்து வரவாய் வெற்றியைப் பெற்றுத் திரும்புக!"

தாயிடம் கேட்ட வார்த்தைகள் நெஞ்சில் யானைப் பலமாய் திரண்டுகொள்ள, தன்னவள் எங்கே? தேடிப் போனான்.

அழகுக்கு ஓர் அகராதி வேண்டுமா? அவளே போதும்!

அத்தனை அழகு! காண்போர் எவருக்கும் நிச்சயம் வரும் வியப்பு! 'அடடா... அடடா... எப்படி இவளுக்கு இத்தனை பேரெழில்?' என்று கூடவே வரும் நினைப்பு! 'படைத்தவன் வஞ்சகன். வேறு எந்த பாவையருக்கும் மிச்சம் வைக்காமல் அத்தனை எழில்களையும் எப்படிக் கொடுத்தான் இவளுக்கு மட்டும்?' என்று வரக்கூடும் கொதிப்பு!

எட்டி நடந்து மன்னவன் வர எழுந்து நின்றாள் எழில்களின் அரசி!

விழிகளின் பின்னால் பெருகத் துடித்தது கண்ணீர் வெள்ளம்!

தன்பலம் திரட்டி தடுத்து நிறுத்தினாள்! இதழ்களாம் இனிய அழகிய மேடையில் புன்னகை மந்திர நடனம் காட்டினாள்.

கனியிதழ் நகையும், முன்னே நிற்பவர் மூச்சை நிறுத்தக்கூடிய கம்பீர மார்புகளின் மூச்சு அசைவுகளும் மன்னவன் மனதை மலரணை தேடவைத்திருக்கும் இதுவே வேறொரு சமயமென்றால்!

இப்போது பெரிது கடமை. சிறிது காமம்! காதல் உண்டு தன்னவள்மீது! அதைவிடப் பெரிது தாயகக் காதல்!

மெல்ல நடந்து மெல்லிடையாள் தோள்தொட்டு தன் மார்பில் சாய்த்து, முழுமதி முகம் கரத்தால் தொட்டு உயர்த்தி, தேன் மொழி இதழ்கள்மீது உதடுகள் அமர்த்தினான்.

உதடுகள் வாங்கி வலிக்காமல் அமுத்தினாள் எழில்களின் ராணி.

'வெற்றிக்கு இதுவே உற்சாக பானம்'. வேந்தன் நினைத்து விடைபெற்றுச் சென்றான்.

□□

விட்டால் போதும்! வீழ்ந்தவர் போக மற்றவர் ஓடினர்.

மறமும், திறமும் சொந்தமாய் கொண்டோர் வெற்றியைச் சூட தடுப்பது நடக்குமோ?

படையோடு வந்தவர் நழுவிய உடையோடு ஓடினர். தழுவிய தோல்வியை சுமந்துகொண்டு ஓடினர் வெட்கி!

மன்னவன் பட்டான் காயம்; உயிருக்கில்லை ஒரு பழுதும்!

செய்தி வந்தது. பெற்றவள் நெஞ்சை தீயெனச் சுட்டது.

பாசமே சிறகாகப் பறந்து போனாள் ராஜமாதா!

என்னே விந்தை! யாருக்கு காயம்? அப்படி ஒரு அறிகுறி மன்னவன் முகத்தில் தெரியவேயில்லை!

செய்தி பொய்யா? சினந்தவள் விழிகளில் பட்டது மார்பில் அம்பு தைத்த காயம்!

"ஐயகோ மகனே! மார்பில் தொடுத்தனரோ அம்பை மாபாவிகள்? உன் உயிர் பிழைத்தது என் தவப் பேறு!"

மன்னவன் உதட்டில் மலர்ந்தது புன்னகை!

"மார்பிலா பாய்ந்தது? வலிக்கவேயில்லையே. அதனால்தான் அறியவேயில்லை நான்!"

ராஜமாதா விழிகளில் வியப்பு. பகைவரை அழித்து களத்திலே வீர சொர்க்கத்தைக் கண்ட வீரனின் மைந்தன் வேறெப்படி பேசுவான். தளிர் வயதில் பால் உண்ணக்கூட எத்தனை அடம்? செல்லமாய் மிரட்டி சிறு கோலை கையில் எடுத்தால் உடனே வந்து உண்ணும்போது தெரியும் மிரட்சி! இன்று அவனே யானைகளை கண்டும் அஞ்சாத வீரனாய் வெட்டிச் சாய்த்து, பகைவர் கொட்டம் அடக்கி, பட்ட காயம் துச்சமாய் நினைத்து தருகிறான் காட்சி!

ராஜமாதா மகிழ்ந்தாள். நெகிழ்ந்தாள்!

இந்த வீரக் காட்சியைத்தான் சங்கத் தமிழ் நூலான புறநானூற்றில் பொன்முடியார் என்னும் புலவர் பாட்டால் படைத்திருக்கிறார்.

திணை: தும்பை துறை: நூழிலாட்டு

**"பால்கொண்டு மடுப்பவும்**
**உண்ணான் ஆகலின்**
**செறா அது ஒச்சிய சிறுகோல் அஞ்சி**
**உயவொடு வருந்தும் மன்னே! இனிய**
**புகர் நிறங் கொண்ட களி றட்டு**
**ஆனான்**
**முன் நாள் வீழ்ந்த உரவோர் மகனே**
**உன்னிலன் என்னும் புண் ஒன்று**
**அம்பு**
**மான் உளை அன்ன குடுமித்**
**தோல்மிசைக் கிடந்த புல் அண**
**லோனே."**

## குறுக்கெழுத்துப் போட்டி இல—80

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 | | 2 | | ■ | 3 | 4 |
| 5 | | | ■ | 6 | ■ | |
| | ■ | | ■ | | ■ | |
| ■ | 7 | | 8 | | ■ | |
| 9 | | ■ | | ■ | 10 | |
| | | ■ | 11 | | | |
| 12 | | | ■ | 13 | | ■ |

### இடமிருந்து வலம்

1. இதன் முதல் நாளில் தொழிலாளர் ஊர்வலங்கள் நடக்கும்.
3. நிலவுக்கும் பொருந்தும், புத்திக்கும் பொருந்தும்.
5. இது இல்லாத மனிதர் அரிது.
11. தகவல் பெட்டியில் இதில் புதுமையான ஒன்று அறிமுகமாகி இருக்கிறது.
12. இதுவும் மாற்றங்களுக்குக் காரணமாக அமைகிறது.
13. இல்லம் என்பதை இப்படிச் சுருக்கமாகவும் அழைக்கலாம்.

### மேலிருந்து கீழ்

1. நீல நிறத்தோடு தொடர்புடையது.
2. பேச்சுவார்த்தையில் இந்தியா இதைச் செய்யக்கூடாது என்கிறார்கள் புலிகள்.
4. வாசுகியின் கணவரால் படைக்கப் பட்டது.
6. இது நடந்தால் பரிசுகளும் வழங்கப் படுவதுண்டு.
7. பேச முடியாதவர்களும் இதன் மூலம் தமது கருத்தைத் தெரிவிக்கலாம்.
8. இதை ஒரு தொழிலாக நடத்துபவர்களும் இருக்கிறார்கள்.
9. மனித உறவுகளில் இதுவும் ஒன்று.
10. தலைவாருவதோடு இது தொடர்புடையது.

**இதற்குரிய சரியான விடையைக் கூப்பனில் நிரப்பி அஞ்சலட்டையில் வெட்டி ஒட்டி 24.12.1994க்கு முன்னர் எமக்குக் கிடைக்கும்படி அனுப்பிவையுங்கள். அனுப்பிவைக்க வேண்டிய முகவரி:**

**குறுக்கெழுத்துப் போட்டி இல-80**
**தினமுரசு வாரமலர்**
**த.பெ.இல. 1772**
**கொழும்பு.**

**சரியான விடையை எழுதி அனுப்புபவர்களில் பத்து அதிஷ்டசாலிகள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொருவருக்கும் தலா ரூபா 50/= பரிசளிக்கப்படும்.**

### குறுக்கெழுத்துப் போட்டி இல-78க்கான சரியான விடைகள்:

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 1 உ | ப | 2 கா | ர | ம் | ■ | 3 பு |
| ளி | ■ | ல | ■ | 4 அ | 5 சி | ட் |
| ■ | 6 மு | டி | வு | ■ | லே | டி |
| 7 த | ட் | ■ | ■ | 8 த | டை | ■ |
| 9 க | டை | க் | க | ண் | ■ | 10 மு |
| வ | ■ | ■ | ■ | 11 ட | ணா | ல் |
| ல் | ■ | 12 க | ரு | ணை | ■ | லை |

**குறுக்கெழுத்துப் போட்டி இல.78இல் வெற்றி பெற்ற அதிஷ்டசாலிகள்**

1. வே. மாலதி
பம்பலப்பிட்டி.
2. பாத்திமா பாறூக்
கல்முனை.
3. எவ்.எம். மௌஸூக்
ஹாலி-எல.
4. ஆர். சாந்தகுமார்
பதுளை.
5. எஸ். நாகேஸ்வரன்
டிக்கோயா.
6. துஷாந்தி கமலநாதன்
நீர்கொழும்பு.
7. எம். ஷூபானி
காத்தான்குடி-06.
8. எம். லாபிர் ஹுஸைன்
ஹொரவப்பொத்தானை.
9. பி. யோகராஜன்
அப்புத்தளை.
10. திருமதி. ரோகினி முருகதாஸ்
கொழும்பு-15.

**இவ் அதிஷ்டசாலிகள் ஒவ்வொருவருக்கும் பரிசாக தலா ரூபா 50/= வழங்கப்படும்.**

## ஸ்போர்ட்ஸ்

# போர்டர் வருகிறார் ஆட!



போர்டர்

அவுஸ்திரேலிய கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டனான அலன் போர்டர் சர்வதேசப் போட்டிகளில் விளையாடுவதிலிருந்து ஓய்வு பெற்றவராவார். அவர் இப்போது மீண்டும் கிரிக்கெட் களம்புக ஆயத்தமாகியிருக்கிறார்.

அவுஸ்திரேலியாவில் உள்ள 'பிரதம மந்திரி லெவண்' அணியின் தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தனக்குச் சவாலாக விளங்கும் இங்கிலாந்து அணியை எதிர்த்து மனுகா ஓவல் என்ற இடத்தில் நடைபெற இருக்கும் கிரிக்கெட் போட்டியில் அலன் போர்டர் விளையாடுகிறார்.

டெஸ்ட் போட்டிகளில் பதினோராயிரம் ஓட்டங்களைக் குவித்து உலக சாதனை படைத்த அலன் போர்டர், ஒரு சகல துறை ஆட்டக்காரர். சுழல் பந்து வீசக்கூடிய போர்டர் இப்போது பந்து வீசுவதைத் தவிர்த்து விட்டு, துடுப்பாட்டத்தில் மட்டும் கவனம் செலுத்தப்போவதாக அறிவித்துள்ளார்.

# ஜோன்சும் வருகிறார் மீண்டும்!

கடந்த ஆண்டில் மட்டும் 51.83 ஓட்டங்களைச் சராசரியாக எடுத்த நியூசிலாந்து டெஸ்ட் கிரிக்கெட் வீரர் அன்ட்ரூ ஜோன்ஸ், இதுவரை மொத்தம் 2898 ஓட்டங்களை எடுத்துள்ளார். இதில் ஏழு சதங்கள் அடங்கும்.

இவர் சமீபத்தில் சர்வதேச மற்றும் முதல்தர கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றுவிட்டார்.



அண்மைய போட்டிகளில் நியூசிலாந்து அணி தோல்வி மேல் தோல்விகளைச் சந்தித்து வருகிறது. சரிந்துவிட்ட துடுப்பாட்ட வரிசையைச் சரிக்கட்ட அனுபவமுள்ள துடுப்பாட்ட வீரர்கள் தேவை என்பதை உணர்ந்து, ஓய்வு பெற்றுவிட்ட அன்ட்ரூ ஜோன்ஸ் தான் திரும்ப நியூசிலாந்து அணியில் சேர்ந்து விளையாட சம்மதம் தெரிவித்துள்ளார்.

அன்ட்ரூ ஜோன்ஸை மீண்டும் அணியில் சேர்த்துக்கொள்ள வெலிங்டன் கிரிக்கெட் கிளப்பும், நியூசிலாந்து கிரிக்கெட் சபையும் ஆர்வம் கொண்டு பேச்சுவார்த்தைகள் நடத்திக்கொண்டிருக்கின்றன.

நியூசிலாந்து கிரிக்கெட்டின் நூற்றாண்டு கொண்டாட்டப் போட்டிகள் 1995ம் ஆண்டு ஆரம்பிக்கப்படவுள்ளன. அதில் அன்ட்ரூ ஜோன்ஸ் பங்குகொண்டு சிறப்பாக விளையாடுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இவ்வாரம் (18.12.94 ஞாயிறு மாலை 7.00மணி) எம்.ரி.வியில் மகாபாரதம் தொடரைப் பார்க்கும் உங்கள் கரத்தில் முரசும் இருக்கட்டும்.

அழகு தமிழில் தருவது- இராஜகுமாரன்

# மகாபாரதம்

அங்கம் 59

www.padippakam.com

காலத்தின் குரல்:
பரத கண்டத்தைச் சுற்றிவளைத்தே
போர் மேகமது சூழ்ந்தே வருவதை
பார்ப்பவர் யாவரும் பக்கம் சார்ந்தே
போரிட வேண்டிய(து)அவசிய அவலம்!
வெற்றியோ தோல்வியோ விரும்பிடா பிதாமகர்
விதியின் வழியே விரைகிறார்; சகுனியோ
விளைவெலாம் தோல்வியாய் விளங்கிட வேண்டியே
வினை விதைக்கின்றான் வெம்பகை நாடியே!

-காட்சி தொடக்கம்-

அஸ்தினாபுரம்-துரியோதனன், கர்ணன், துச்சாதனன் மற்றும் சகுனி.

சகுனி: வெற்றியை நோக்கி விரைந்திடு முன்னர் நாம் தோல்வியைத் தரு வழிகளையெல்லாம் துடைத்திட வேண்டும் துரியனே அறிவாய்!

கர்ண: தோல்வியைப் பற்றிய பேச்செதற்கிப்போ?

சகுனி: அமரர்க்குரிய ஆயுதமெல்லாம் அர்ச்சுனன் வசமாய் இருப்பதை அறிவாய்!

கர்ண: தேவாயுதங்களால் வீரனை வென்றிட முடியாது மாமா? வெற்றியைத் தோல்வியை உற்றுணர்த்துவதெலாம் வீரனின் வலிமையே!

சகுனி: துரியோதனா நான் சொல்வதைக் கேட்பாய்! திரிவேத நாட்டின் மன்னவன் சுகர்ணன் மத்சயநாட்டிடம் பலமுறை தோற்றவன். அன்னவன் தானும் உன்னவன் நண்பன். சுகர்ணனின் படைகள் விதர்ப்பனின் சேனையை நிர்மூலமாக்க, பாண்டவர் ஐவரை நாம் பிடித்திடலாம்.

துரி: அதுவே நல்வழி! ஆசி வழங்குக என்னரும் மாமா!

சகுனி: வெற்றி உனதே! பாண்டவர் மீண்டும் கானகம் ஏகிட பாதை வகுப்பதில் வெற்றியும் உனதே!

-காட்சி மாற்றம்-

மதுராவிலிருந்து இடையர்கள் கொண்டுவரும் பசுக்களில் ஒன்றை விஷப்பாம்பு தீண்டிவிடுகிறது. அதற்குரிய மருத்துவம் பார்க்க முனைகின்றனர் இருவர்.

-காட்சி மாற்றம்-

விராட மன்னன் அரண்மனை- மன்னனும் கங்கண (யுதிஷ்டிரன்)னும் சதுரங்கம் ஆடுகின்றனர்.

விரா: சொக்கட்டான் ஆட்டத்தில் சாதனை புரிகிறாய்! உன்னுடை மன்னவன் யுதிஷ்டிரனும் ஒரு சிறந்த வீரனாய் இருந்திருப்பானெனில் சகுனியின் சூதினில் சிதைந்தது ஏனோ?

கங்க: போர் முனையதிலும் ஆட்டங்களெதிலும் வெற்றியும் தோல்வியும் விளைவது இயல்பே! சதுரங்க ஆட்டத்தில் சகுனியின் சூதினை சகலரும் தெரிந்தே செயலற்றிருந்தனர். பாண்டவர் எதனையும் ஏற்றிடத் துணிந்தனர்!

அமைச்சர்: (வந்துகொண்டே) வாழ்க மன்னவர்! அவசரச் சேதி! திரிவேத தேச மன்னவன் சுகர்ணன் படையுடன் பொருதிட விரைவுடன் வருகிறான்!

விரா: கீசகன் மறைவுடன் கிளர்ந்தெழுந்துள்ளானா? போர்முனை ஏகிட படைகளைத் தயாராய் உடனடியாக உசார் நிலைப் படுத்துக!

கங்க: ஒரு மாமுனியிடம் உரிய போர்க்கலைகள் அனைத்தையும் கற்றுள்ளேன். தங்கள் படையுடன் இந்த அடிமையும் ஏகிட அனுமதி தந்திட வேண்டும்!

விரா: நிச்சயம் வாரும்! நிகரிலாப் போரினை நிகழ்த்துதல் பாரும்.

கங்க: சமயலறையினில் உறைகிறானொருவன்; கால்நடைப் பண்ணையில் இரு இளவல்கள் இருக்கிறார்.இவரெலாம் இந்திரப் பிரஸ்தப் போரிடைப் பயிற்சியில் தேறிய வீரர்கள்! இவர்களும் போர்முனை வருவதனால் அரு உதவிகள் பெருகிட உறு வழியாகும். அனுமதி அளித்திடில் அவர்களும் அமரிட எமதணி தனில் வர வெற்றியே நிலை பெறும்!

விரா: கங்கணா! நீதரும் தகவல்கள் சரியெனில் அங்கவர் மூவரும் அமரிட அனுமதி தந்துடன் மூவரும் தேரினில் ஏறிட ஏற்றதைப் புரிகிறேன்!

-காட்சி மாற்றம்-

யுத்தமுனை-மத்சய் மன்னர் விராடரின் அணியில் கங்கனன்( யுதிஷ்டிரன்), வல்லபன் (பீமன்), அரஸ்னேமி (சகாதேவன்), கிராந்தகன் (நகுலன்) ஆகியோர்; திரிவேத மன்னன் சுகர்ணனுடன் போரிடுகின்றனர். வல்லபன் சுகர்ணனை வென்று விராடமன்னன் முன் கொண்டுவந்து நிறுத்துகிறான்.

வல்: சுகர்ண மன்னனே தோல்வியுற்றாய் நீ! ஆயுதமனைத்தையும் வீசுவாய் உடனே!

கங்: மன்னர் விராடரே! தோல்வியைத் தழுவிய திரிவேத மன்னனை மன்னித்திடுதலே மனிதப்பண்பாம்!

விரா: ஆணவப் பாதையில் அறிவிழந்தே நீ அமரிடத்துணிந்தாய்! கங்கணன் உன் செயல் மன்னிக்கக் கோரினான். மன்னித்தேன் மன்னனே; மயக்கம் தவிர்ப்பாய்! (பிரதானிகள் பக்கம் திரும்பி) வெற்றி பெற்றிட்ட செய்தியை விரைந்து வீரனொருவன் நாடு சென்றுரைக்கட்டும். ஓய்வுடன் சிலநாள் விடுதியிலிருந்து பின் விரைந்து வருவதாய் சேதியும் கூறட்டும்!

-காட்சி மாற்றம்-

மத்சய நாடு-விராட மன்னரின் மகன் உத்தரனிடம் போர்முனையிலிருந்து அனுப்பப்பட்ட வீரன் வந்து சேதி சொல்கிறான்.

இளவரசன் உத்தரன்: நல்லதோர் செய்தியை நவின்றனன் காவலா! வெற்றிவாகை சூடிய மன்னவர் சிலநாள் ஆறி இருந்து பின்வரும் போதினிலே உரிய சிறப்புடன் வரவேற்பளிப்போம்! போர்முனைக்கே நான் ஏகியிருந்தால், தந்தையார்க்குறு துணையாகியிருக்கும்!

அரசி சுதேசினையுடன் சௌரந்தரி (திரௌபதி) வருகிறாள்.

சுதே: போர்க்களத்திருந்தே தவலும் வந்ததோ?

இள.உத்: ஆமாம் தாயே! மன்னவர்க்கொரு சிறு காயம்பட்டுள்ளது! கவலையேயில்லை! எந்தனை விடுத்து இடையரை அழைத்தே போர்க்களம் போனதால் நேர்ந்ததிவ் விளைவு!

இளவரசி உத்தரையும் பிருகன்னளை (அர்ச்சுனன்)யும் வருகின்றனர்.

இள.உத்: வெற்றிச் செய்தி வந்தது சகோதரி! வரவேற்பளித்திட வேண்டியதியற்றுவாய்!

உத்: வல்லப வீரன் இணையும் அணியினை வெல்வது அரிதென பிருகன்னளையுமே பகன்றனளன்றோ?

வீரன் ஒருவன் வருகிறான்.

வீரன்: வாழ்க நாடு! வாழ்க இளவரசர்! கவுரவப் படைகள் நம் நாட்டினை நெருங்கி நாசம் விளைக்க வருவது கண்டோம். பீஷ்மரும் துரோணரும் கிருபரும் கர்ணனும் துரியோதனனுடன் அஸ்வத்தாமனும் பெரும்படை நடத்தியே பெருகி விரைகிறார்.

உத்: மத்சய நாடும் அஸ்தினாபுரமும் மித்திரராக இருந்தனரன்றோ?

பிரு: அரசியல் அரங்கினில் நட்புக்கும் பகைமைக்கும் நடுவினிலுள்ள (நு)நுண்ணிய வரியே!

உத்: காவலன் சேதியும் நல்லதோர் சேதியே!

சுதே: யுத்தம் வருவது நல்லதோர் சேதியா?

உத்: பீஷ்மரும் துரோணரும் துரியோதனனுடன் கர்ணனும் இணைந்தே போரிடத் துணிந்தனர். அத்தனை வீரரை எதிர்கொண்டழிக்கவே என்னால் இயலும் என்பது உண்மையில் இனித்திடவில்லையா? இணையிலா வீரனென்றெந்தனை எந்தை ஏற்றிப் புகழ்ந்ததை ஏன் மறந்தீர்கள்?

சுதே: அத்தனை வீரரும் எத்தகையோரென எண்ணிப் பார்த்திட ஏன் துணிவற்று நீ ஏமாற நினைத்தாய்? அப்பெரு வீரரைச் சாதாரணமாய் நீ எண்ணிடலாகுமா?

உத்: பெரும் பெயர் பெற்ற பெரு வீரருடன் தான் பொருதிடல் பெருமை!

பிரு: உண்மைதான் அரசி! தோல்வியே அறியா தரணியே புகழும் பெரு வீரரவருடன் பொருதியே வெல்வது அரும்பேறன்றோ? தோல்வியே வரினும் துணிவே தருவது தனிப் பெரும் பேறே!

உத்: தோல்வி என்றதோர் சொல்லுக்காங்கே இடமே இல்லை என்பதை அறிவாய்!

சௌ: வேண்டுகோளொன்று வினயமாய் விடுக்கிறேன். பிருகன்னளை இவள் பெருங்கைக்காரி. அர்ச்சுனன் புரிந்த அரிய போர்க்கெல்லாம் இவளே இரதத்தின் சாரதியாவாள். இளவரசரது இரதத்தின் சாரதி பிருகன்னளையெனில் வெற்றியே நிச்சயம்!

உத்: ஆணும் பெண்ணும் இரண்டுமே அற்ற இவளினைச் சாரதியாக அமர்த்திய அர்ச்சுனன் உண்மை நீ அறியாத அறிவிலி!

சௌ: மன்னிக்க வேண்டும் மன்னவர் மைந்தனே! உண்மையைச் சொன்னேன்! ஏற்புடைத்தாயின் ஏற்பதுங்கள் செயல்!

சுதே: சௌரந்தரி இவள் பொய்தனை உரையாள். அண்ணன் கீசகன் அழிவையும் அன்றே முன்னறிவுறுத்திய அருங்குணக் குன்றிவள்!

உத்: அப்படியானால் அவளையே அழைத்துமே செல்கிறேன் போர்க்களம்!

உத்தரை: வெற்றி எம் பக்கமே விளையுமென்பதனையே என் மனம் ஏற்றது! கவுரவ வீரர்கள் அணி மணியெலாம் அழகழகாகவே அமைவதாய் அறிகிறேன். வெற்றி பெற்றிருவரும் திரும்பிடும் போதிலவ் வீரரின் துணிகளில் விருப்புடன் சில துணி எனக்கென எடுத்தே கொண்டு வந்திடுக! என்னுடை பொம்மைகள் அழகினைப் பெருக்கிட அவை துணையாகுமே!

பிரு: இளவரசி தரு ஆணையை ஏற்கிறேன். பீஷ்மரும் துரோணரும் வெண்மையே தரிப்பர். அத்துணிவிடுத்து அழகிய வண்ணத் துணிகளைத் தருவோம்!

-காட்சி மாற்றம்-

உத்தரன் இரதத்தில் இருக்க பிருகன்னளை சாரதியாக இரதத்தை ஓட்டிச் செல்கிறாள்.

உத்: கவுரவ வீரர்கள் களத்தினில் வீழ்வதைக் கவனத்தில் கொள்வாய் பிருகன்னளை நீ! தந்தை மன்னவர் நாடு திரும்பிடு முன்னரே போரினை முடித்து நாம் திரும்பிடில் அன்னவர் என்னையே ஏற்றியே போற்றுவார்!

□□□

கவுரவ சேனை கடல்போல் இருப்பதை உத்தரன் காண்கிறான்.

பிரு: அரகுமாரரே! அதோ தெரிகிறதே அதுதான் பெரியவர் பீஷ்மர் தம் கொடியாம்! அடுத்துத் தெரிவது துரோணரின் கொடியே! குலகுரு கிருபாச்சாரியார் கொடிதான் நீல வர்ணக் கொடியதுவாகும்! அருகே தெரிவது துரியோதனனின் பாம்புக்கொடியாம். கர்ணனுடனே துரோணரின் மகனாம் அஸ்வத்தாமனும் அங்குளான் பாராய்!

உத்தரன் இப்படையினைக் கண்டதும் நடுக்கமுறுகிறான்.

உத்: படையோ.... இதுவோர் அடி முடியற்ற பெருங்கடல்தானோ? இத்தனை பெரிய படையுடன் பொருதிட இறைவனாலும் முடியுமா? கூறு! சுகர்ணன் படையுடன் போரிட மன்னவர் படையினை முழுமையாய்த் திரட்டியே சென்றார். நானோ சிறுவன்! என்னால் இச் சேனையை சீண்டிட முடியுமா? திரும்பி நாம் செல்வோம்! பிருகன்னளையே இரதத்தினைத் திருப்புக!

பிரு: வெற்றிக் களிப்புடன்-வீறு நடையுடன் திரும்புவோம் என்று நாம் புகன்றுமே வந்தோம்! புற முதுகிட்டு ஓடினோமென்றால் நாட்டவர் நம்மை நகைத்து இகழ்வரே! தாயும் தங்கையும் விடை கொடுத்தனுப்பிய போதினில் உதிர்த்த வார்த்தைகள் எங்கே? போர்முனை விட்டு ஓடிட என்னால் முடியாதென்பதால் படையுடன் மோதிட முடிவுடனுள்ளேன்!

உத்: பெண்கள் என்னைப் பார்த்திழிந்தாலும் பாதகமில்லை! இப்பெரு வீரரின் படையுடன் மோதவே நினைப்பதை என்னால் எண்ணிட முடியா!

இவ்வாறு கூறிய இளவரசன் உத்தரன் இரதத்திலிருந்து இறங்கி ஓடுகிறான். பிருக்கனளை பின்புறமாக ஓடிச்சென்று உத்தரனைப் பிடித்துவிடுகிறாள்.

உத்: பிருகன்னளையே பெரு வெகுமதியெலாம் உந்தனுக்குதவுவேன். என்னை நீ விட்டு ஏகிடு எங்கோ!

உத்தரனை சாரதியின் இடத்தில் அமர்த்திய பிருகன்னளை இரதத்தின் பின் புறம் ஏறுகிறாள்.

பிரு: போர்முனையிலிருந்து புறம்பெயர்ந்தோடுதல் சத்திரியர்க்குறு தர்மமதல்லவே! உன்னுடை நிலையில் நானிருக்கின்றேன். சாரதியாக நீயே அமர்ந்து இரதத்தைச் செலுத்துக!

அரச குமாரரே! அங்கே தெரியும் அம்மரந்தன்னையே நோக்கிச் செலுத்துக இந்த இரதத்தினை!

மரத்தடியில் இரதம் சென்று நின்றதும் மரத்தின் மீது ஏறி அங்கே இருக்கும் பொதி ஒன்றை எடுத்துத் தருமாறு உத்தரையிடம் பிருக்கன்னளை கூறுகிறாள். அவ்வாறே எடுத்து வரப்பட்ட பொதியினுள் வகை வகையான போர்க்கருவிகள் காணப்படுகின்றன.

உத்: இத்தனை சிறப்புடை ஆயுதமனைத்தும் எவருடை சொந்தமோ?

பிரு: (ஆயுதங்களை வணங்கியபின்) இங்கே இருப்பது அர்ச்சுனன் வில்லாம். பீமசேனரின் கதாயுதம் இதுவே! யுதிஷ்டிர மாமன்னவர் ஈட்டியும் இதுதான். நகுலனும் தம்பி சகாதேவனிருவரின் ஆயுதம் இவையே!

உத்: இத்தனை ஆயுதம் அத்தனையும் அரும் பாண்டவர்க்குரியது ஏன்றே பகர்கிறாய்! அன்னவரெல்லாம் எங்கே போயினர்?

பிரு: அர்ச்சுனன் நானே அறிந்திடுவாய் நீ!

உத்: உண்மையாகவா? வில்லுக்கு விஜயன் வீரரில் வீரன் தாங்களேதானா?

பிரு: உண்மைதான் உத்தரா! துரோணாச்சாரியார் அருமைச் சீடன் அர்ச்சுனன் நானே! யுதிஷ்டிரர் உந்தன் தந்தையோடிருக்கும் கங்கணனறிவாய். வல்லபனாக உள்ளவன் அண்ணன் பீமனுமாவான். இடையருருவினில் இருப்பவரிருவரும் நகுலனும் சகாதேவனுமாவார்! அரச மாதாவின் அலங்காரியாக அமர்ந்திருப்பவளே பாஞ்சாலியான திரௌபதியாவாள்!

உத்: என்னால் எதனையும் ஏற்கவும் இயலா? பார்த்தனும் நீயெனப் பகருகின்றாயே! அவனுக்குப் பத்துப்பேரும் உளதாம்; அவற்றைக் கூறிட முடியுமா உம்மால்?

பிரு: தனஞ்சயன், விஜயன், மோகனன், பல்குணன், கிரித்தியன், பிவத்த, சவியாசச்சி, அர்ச்சுனன், பீஷ்மா எனும் நவபெயருடன் கிருஷ்ணன் எனும் தசப் பெயருடையன் நான்!

உத்தரன் மகிழ்ந்து அர்ச்சுனனை வணங்குகிறான்.

உத்: குந்தியின் புதல்வனே! துரோணமா முனியின் அரும் பெரும் சீடனே! அடியனை மன்னித்தருளுதல் வேண்டும்!

அர்ச்: அடிமை என்றொரு வார்த்தையை என்றுமுன் வாய்தனில் வெளிவரும் வாய்ப்பகற்றிடுவாய்! பணிவினைக் காட்டவே அடிமை என்றாலுமுன் பதவியும் பலமும் பெரும் புகழுடையவை! பசி வந்தாலும் புலி எப்போதும் புல்லினை உண்ணா!

அர்ச்சுனன் தன் கண்களை மூடியவண்ணம் மந்திரம் ஜெபித்ததும் அழகிய இரதம் ஒன்று தோன்றுகின்றது.

அர்ச்: அதிசயப் படுவதற்கெதுவுமே இல்லை. இதுவே என் இரதம்! ஆயுதங்களனைத்தையும் உனது இரதந்தனில் வைத்துவிட்டுடனே வந்து சேர்ந்திடுவாய்!

அர்ச்சுனன் தனது வில்லில் நாணேற்றி அதனைத் தட்டியதும் பெரும் எதிரொலி எழுகிறது. அத்துடன் தனது சங்கினையும் எடுத்து ஊதுகின்றான். இவ்வொலிகளைக் கேட்ட துரியோதனனும் ஏனையோரும் எதிர்முனையில் நிற்பது அர்ச்சுனனே என்பதை அறிந்து கொள்கின்றனர்.

துரி: அர்ச்சுனன்! அவன்தான்! அஞ்ஞாத வாசத்தை இடையினில் முறித்தான்!

கர்: நண்பனே உனக்கு என் நல்வாழ்த்துக்கள்!

துரியோதனன் தனது இரதத்தினை பீஷ்மர்-துரோணர் ஆகியோரின் அருகே கொண்டு சென்று....

துரி: எதிரினில் நிற்பது அர்ச்சுனன் என்பதை அறிந்து கொண்டிருப்பீர்! சதுரங்க ஆட்டப் பந்தயவிதிப்படி பாண்டவர் மீண்டும் கானகம் செல்லவும் பதின்மூன்றாம் ஆண்டில் கரந்துறை வாழ்வினை மறுமுறை ஏற்றிடவேண்டுமென்பதால் பிதாமகர் அவர்களே! வம்சப் பெரியவர் தாங்களே என்பதால் அவனிடம் சென்று மீண்டுமொருமுறை கானகம் சென்றிட ஆணையிடுங்கள்!

பீஷ்ம: மத்சய நாட்டுடன் போரிடவன்றோ படைகொண்டு வந்தோம்......?

துரி: மத்சய நாட்டு மன்னனைக் காத்திட ஆணையை மீறி அர்ச்சுனன் வந்தனன்! ஆகவே அவனை கானகம் ஏகப் பணித்திடல் தம் கடன்!

கர்: பாண்டவர் கணிப்பில் ஆண்டுக் கணக்கு முடிந்திருக்கலாமோ என்னமோ?

துரோ: கர்ணா! இது இவர் குடும்பப் பிரச்சனை! நீயோ நானோ தலையிடலாகா!

கர்: போதனை செய்யும் போதகர்க்கெங்கும் சாதியுமில்லை பேதமுமில்லை என்று பகர்ந்தீர்! இப்போதிதனைக் குடும்பப் பிரச்சினை என்றே கூறி பாகுபடுத்திப் பாவனை செய்கிறீர்! (சாரதியிடம்) இரதத்தினை மறு புறம் எடுத்துச் சென்றிடப்பா!

பீஷ்: குருவின் முன்னிலை அருவருப்பான வார்த்தைகள் உதிர்ப்பது அறிவுடைத்தல்ல! இத்தனை[illegible] சேர் ஒருவரை அவமதித்தாய் நீ! ஆணவம் உந்தன் அறிவினை மறைத்தது!

துரி: என்னரும் நண்பனை என் முன்னிலையினில் இழிவு செய்பவர் தாங்களே என்பதால் பொறுத்திருக்கின்றேன். வேறெவரேனும் இவ்வாறுரைத்திடில் கூறுகூறாயவர் உடலினைப் பிளந்தே காக்கை கழுகுக் கிரையாக்கியிருப்பேன்!

கிரு: அங்கத்தின் அதிபனும் துரியோதனனும் பங்கம் தரும் பல வார்த்தைகள் பகன்றனர். குரு துரோணரும் பிதாமகர் பீஷ்மரும் போற்றுதற்குரிய பெரும் பெரியார்கள். இரு பெருந்தகையிடம் இருவருமுடனடி மன்னிப்புக் கோருதல் ஒன்றே நலன்தரும்!

பீஷ்: ஒன்றா இரண்டா? எத்தனை இழிவுகளுக்கெனை அழுத்தி ஆளாக்கினானிவன்!

துரி: பிதாமகரே எனை மன்னித்தருளுக!

பீஷ்: துரியோதனனே உனக்கொன்றுரைப்பேன்! படைகளைத் திருப்பி அஸ்தினாபுரத்தினை அடைந்திடல் உத்தமம்! பகடையோ போரோ ஏய்ப்பது தீது. இறுதிப் போட்டியில் நிபந்தனை விதித்ததை நானும் அறிவேன்! மாறுவேடத்தில் மறைந்திருந்தோரை ஒற்றரை ஏவி உணர்ந்திடுமொருமுறை எவரும் விதித்த நிபந்தனையல்லவே!

துரி: இவ்வினாவுக்குறு விடையினை வெற்றியின் பின்னர் நானே தருவேன்! கரந்துறைகாலம் கடந்திடு முன்னர் காண்டீபனிங்கே காட்சி தந்துள்ளான்!

பீஷ்ம: மத்சய நாட்டு வீரரை எதிர்த்துப் போரிட வந்தோம்! கரந்துறை வாழ்வதை துறந்ததைப் பற்றிய வார்த்தையும் இங்கேன் எழுந்திட வேண்டும்? பாண்டவர் போட்டுள்ள கணக்கின்படி அவர் மறைமுக வாழ்வும் முடிந்துவிட்டிருக்கலாம்!

துரி: (பலமாகச் சிரிக்கிறான்) மன்னிக்க வேண்டும் தாத்தா உங்கள் கணக்கிலும் பாரிய தவறுமுள்ளதே!

பீஷ்ம: பரத கண்டம் அனைத்திலுமுள்ள கணித விற்பந்நரைக் கூட்டியே கணித்து கணிப்பினைச் சீர்செய்! பொறாமைத் தீயால் பொங்கிடுமுன்னால் நிறைவாய்க் கணக்கினை நோக்கிடலாகா!

கிருப: அரச குமாரரே அர்ச்சுனனவனினி ஏவிடும் கணைகளில் அனலது தெறிக்கும்! தோல்வியை ஏற்பதுன் துணிவெனக்கொண்டால் போரினைத் தொடக்கு!

கர்: அஸ்தினாபுரத்தின் ஆசிரியரெலாம் அரியதோர் முறையினை அணைவது வினோதமே! எம் அணியிருந்துமே எதிரணி எதிரியை புகழ்ந்துரைப்பது தான் விந்தையில் விந்தை! அர்ச்சுனன் தன்னை எதிர்த்து நின்றிட முடியாதாமெனில் ஒதுங்கியே இருங்கள்! நாங்களே பொருதுவோம்.

கிருப: அக்கினிக் குன்றாய் தோன்றிடும் அர்ச்சுனன் அருகிலே பொசுங்கிடும் குச்சுபோலாவாய்! ஒன்றன்பின் ஒன்றாய் நின்றவன் ஏற்ற இழிவுகளே அவன் இணையிலாக் கவசம்! உன்னுடை கணைகள் அர்ச்சுனன் கவசம் அருகினில் உருகி நீறாய் உதிர்ந்திடும்!

துரி: பிதாமகர் வீரமும் துரோணரின் தகைமையும் அர்ச்சுனன் வீழ்ச்சிக்கு வழி தேடாதோ!

பீஷ்: அரசன் ஆணையை ஏற்றே இங்கு போரிட வந்தோம். எதுவந்தபோதும் உன்னணி நின்றே உறு போரிடுவேன்!

அர்ச்சுனன் தனது இரதத்தில் முன்னேறி வருகிறான். குரு வணக்கத்துக்காக அவன் ஏவிய முதற்கணை இரண்டாய்ப் பிரிந்து துரோணாச்சாரியாரின் இருபுறமும் வந்து வீழ்கின்றன. இதேபோன்று மற்றுமொரு கணையினை அர்ச்சுனன் ஏவ பீஷ்மர், துரோணர், கிருபர் ஆகியோர் புன்முறுவலுடன் அர்ச்சுனனை வாழ்த்துகின்றனர்.

கவுரவர் படையும் முன்னேறுகிறது. துரியோதனன் வேறோர் புறம் சென்று கால்நடைகளை ஓட்டிச்செல்கிறான்.

அர்ச்: அரச குமாரரே! துரியோதனனைத் தேடிப் பார்த்து அவனருகே இரதத்தினை நிறுத்துக!

உத்: துரியோதனனுரு தெரியவேயில்லை. பசுக்களை மேய்த்தவன் போய்விட்டிருப்பான்!

□□□

கிரு: கங்கையின் மைந்தரே! அர்ச்சுனனாங்கே துரியனைத் தேடி அலைவது காணீர்!

பீஷ்: குலகுரு அவர்களே! உடனே அவனை நிறுத்திட வேண்டும்.

கிரு: நம்மிருவரில் எவர் தடுத்தாலும் அவனை இந் நிலையினில் தடுத்திட முடியுமா?

பீஷ்மர் தனது வில்லினில் கணைகளைப் பொருத்தி வீச முனைகிறார்.

பின்னணிப் பாடல்:

மழலை மொழி பேசி மடிதவழ்ந்துறங்கிய
மைந்தனின் பேரனை மாய்த்திட நினைந்துமோர்
வில்லினில் நாணினைப் பூட்டிய பிதாமகர்
சொல்லறியாத சோகமுற்றேங்கினார்!

(தொடர்ந்து வரும்)

எம்.ரி.வி. தொலைக்காட்சி நிறுவனத்தின் உரிமை பெற்று மகாபாரத கதை வசனம் வெளியிடப்படுகிறது.



www.padippakam.com







# அரபாத்தின் கையில் இல்லை

இஸ்ரேலுடன் அரபாத் புன்னகைத்தாலும் பலஸ்தீன தீவிரவாதிகளின் சினம் கொழுந்துவிட்டெரிகிறது.

சமாதானம் அரபாத்தின் கையில் மட்டும் இல்லை என்பது இஸ்ரேலுக்கு புரிந்துவிட்டது. ஹமாஸ் இயக்கத்தின் குண்டுகள் அதனை தெளிவுபடுத்தியதால் இஸ்ரேல் உஷாராகிவிட்டது. பலஸ்தீன கைதிகளும் துன்புறுத்தப்பட்டார்கள். வீதித் தடைகளில் தீவிரவாதிகளை கண்டறிய கடும் கண்காணிப்பு! அரபாத் பாடு தர்மசங்கடம்தான்!







தருவது வியோடெ

தினமுரசு வாரமலர்


# குழாய் குழந்தை

பரிசோதனைக் குழாய் குழந்தைத் திட்டத்தில் தாய்மார்களுக்கு கஷ்டங்கள் நிறைய உண்டு. தற்போது சிரமத்தை குறைக்கும் புதிய முறை அறிமுகமாகிவிட்டது.

அவுஸ்திரேலியாவின் மெல்போர்னிலுள்ள மொனாஷ் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த ஆலன் ட்ரவுன்சன் என்ற நிபுணர் தனது குழுவினருடன் சேர்ந்து இப்புதிய முறையினைப் பிரயோகித்து வெற்றிகண்டுள்ளார்.

கருப்பையில் கருமுட்டை பூரண வளர்ச்சி கண்ட பின்னரே அம்முட்டையினை வெளியே எடுத்து சினைக்கப்பண்ணி வந்த முறை பழைய முறை. ட்ரவுன்சன் முழுமையாக வளர்ச்சியடையாத கருமுட்டையினையே கருப்பையிலிருந்து வெளியே எடுத்து அதனைச் சினைப்படுத்தியுள்ளார். இவ்வாறு ரோபின் ஹல்லம் என்ற 33 வயதுப் பெண்மணியின் கருமுட்டையை வெளியே எடுத்துச் சினைப்படுத்தி, 1993 டிசம்பர் 14ல் அழகிய குழந்தை பிறப்பதற்கு வழிவகுத்துவிட்டார் டாக்டர் ட்ரவுன்சன். இக்குழந்தைக்கு கேனியா என்று பெயர் சூட்டியுள்ளனர். படத்தில் இருக்கும் குழந்தை.

முதிர்ச்சியடையாத கருமுட்டையினை பரிசோதனைச் சாலையில் வைத்து முதிர்ச்சியடையவைத்துச் சினைப்படுத்தும் முறைக்கு தற்போது செலவாகும் பணத்தில் 20 சதவீதம் மட்டுமே செலவிட வேண்டியதிருக்கும். அத்துடன் தாய்க்கும் பரிசோதனைகளும் மருந்து உட்கொள்ளுதலும் கணிசமாகக் குறைந்துவிடுகிறது. இதனால் போதுமான பொருளாதார வசதியற்ற குழந்தை பெற்றெடுக்க முடியாத குடும்பங்களில் குழந்தைச் செல்வம் கிடைக்க வழி பிறந்திருக்கிறது.




மருத்துவ சாதனைகள் [illegible] போதும், மருத்துவத்தால் முடியாது என்று கைவிரிக்கும் நோய்களும் இன்னமும் இருக்கின்றன.

அமெரிக்கா பல ஆச்சரியங்களை விஞ்ஞானத்தில் விளைவித்துள்ள நாடு! ஆனால் தனது முன்னாள் ஜனாதிபதி நிலையை காப்பாற்ற முடியாமல் கையைப் பிசைந்துகொண்டிருக்கிறது.

நோயொடு போராடியபடி தனது முடிவை முன்கூட்டியே அறிந்தவராக, 'என்னுடைய வாழ்வின் அந்தமத்தை நோக்கி எனது பயணம் தொடங்கி விட்டது' என்று தனது மக்களுக்கு கடிதம் எழுதியிருக்கிறார் றீகன். [illegible] தாக்கும் அமெரிக்க [illegible] மூளையை [illegible] தாக்கியதனை [illegible] முடியவில்லை! சோகம்!

# போராடும் பிரபலம்



# ஆளைப் பாராதே ஆடையைப் பார்

'பேஷன்' கண்காட்சிகளில் பெண்களின் உடலுக்குத்தான் மரியாதை! ஆளைப் பாராதே ஆடையைப் பார் என்றாலும் கண்கள் கட்டுப்பாட்டை மீறக் காரணமாகக்கூடிய அழகிகளையே 'பேஷன்' காட்சிகளில் தேடிப்பிடித்து கொண்டுவந்து உலாவ விடுகிறார்கள்.

மேலே படத்தில் எலிசபெத் மகாராணி அமர்ந்திருப்பது போன்று உடையில் டிசைன் வரைந்திருக்கிறார்கள். இந்த உடையோடு வீதியில் சென்றால் விபத்துக்கள் ஏற்பட நிச்சயம் வாய்ப்பிருக்கும். எனவே 'பேஷன்' கண்காட்சியில் மட்டுமே பயன்படுத்துகிறார்கள்.

